# உதயன்

சுடர் 30 | கதிர் 125 | வள்ளுவர் ஆண்டு 2046 | பங்குனி 17, செவ்வாய்க்கிழமை 31.03.2015

கூ.வெ. 32 C
கு.வெ. 23 C
தெளிவான காலநிலை

## ரயில் நேரசூசியில் மாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 31
எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி முதல் புகையிரத சேவையில் மாற்றங்கள் ஏற்படவுள்ளன என்று யாழ். புகையிரத நிலைய பிரதான அதிப... பிரதீபன் தெரிவித்தார்.
காலை 7.10 மணிக்கு பக்.24

## வேம்படி 28 பேர், யாழ்.இந்து 18 பேர் ஜி.சி.ஈ சாதாரண தரத்தில் 9 ஏ சித்திகள்

யாழ்ப்பாணம் மார்ச் 31.
ஜி.சி.ஈ சாதாரண தரப்பெறுபேறுகள் நேற்று வெளியாகின. இதனடிப்படையில் யாழ்ப்பாணத்தில் யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை 28 பேர் 9 ஏ சித்திகளுடன் முதலாம் இடத்திலும், யாழ். இந்துக் கல்லூரி 18 பேர் 9 ஏ சித்திகளுடன் இரண்டாம் இடத்திலும் உள்ளன. கிளிநொச்சியில் கிளிநொச்சி மத்திய கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது. முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது. மன்னாரில் மன்னார் சென்.சேவியர் பெண்கள் கல்லூரி முதலிடத்தில் உள்ளது. வவுனியா மாவட்டத்தில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி முதலிடத்தில் உள்ளது. (த–ரி–21–108–109)

எமக்குக் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள் 22ஆம் பக்கத்தில்

# பஸிலை கைது செய்க

## கடுவலை நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மார்ச் 31
கோடிக்கணக்கான ரூபா நிதி முறைகேடுகளைச் செய்ததாகக் கூறப்படும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கடுவலை நீதிவான் தம்மிக ஹேமபால, நேற்று உத்தரவிட்டுள்ளார்.
அவர், இந்த நாட்டுக்குள் வந்ததன் பின்னர் கைது செய்யுமாறு, நீதிமன்றத்தினால் முன்னர் உத்தரவிடப்பட்டிருந்த உத்தரவை நீக்கி அவரைக் கைது செய்யாமல், தன்னுடைய சட்டதரணிகள் ஊடாகக் கொள்ளுப்பிட்டியிலுள்ள பக்.24

## கீரிமலை மாளிகையை பார்த்ததும் அதிர்ந்தேன்

### ஆறு நட்சத்திர விடுதியாக மாற்றத் திட்டம் இப்படிக் கூறுகின்றார் பிரதமர் ரணில்



*மாளிகையைப் பார்வையிடும் ரணில்*

கொழும்பு, மார்ச் 31
கீரிமலையில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் மாளிகையைப் பார்த்து அதிர்ந்து போனதாகத் தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உலகில் எந்த ஹோட்டலும் அதற்கு இணையாக இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். பக்.24

## இப்படி மாளிகை கட்டினால் சிங்களவர் விரட்டியிருப்பர்

### தமிழர்கள் மிகவும் பொறுமைசாலிகள் என்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, மார்ச் 31
கீரிமலையில் அமைக்கப்பட்டிருப்பதைப் போன்று, சிங்கள மக்கள் வாழும் பிரதேசத்தில் அரச மாளிகை அமைத்திருந்தால் அந்த மக்கள் நாட்டிலிருந்து விரட்டியிருப்பார்கள். ஆனால், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 200 ஏக்கர் காணியில் அரச மாளிகை அமைத்த போதும் தமிழ் மக்கள் இன்றுவரை பொறுமையாக இருந்ததே பெரிய விடயம். – இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.
தமது வீடுகளைக் கேட்டுப் போராடும் தமிழ் மக்கள் மீது நாம் குற்றம்கூற முடியுமா?– என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.
கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இலவச 'வை–பை' சேவையை ஆரம்பித்து வைத்து பக்.24

## ஐ.நாவின் சிறப்பு நிபுணர் யாழ்ப்பாணம் வருவார்

### வட மாகாண சபையினர், தமிழ்க் கூட்டமைப்பினரையும் சந்திப்பார்

யாழ்ப்பாணம், மார்ச் 31
நல்லிணக்க செயல்முறைகளுக்கு உதவும் நோக்கில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா.வின் சிறப்பு நிபுணர் பப்லோ டி கிரெய்ப், நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார். எதிர்வரும் வெள்ளிக்கிழமை அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.
உண்மையை ஊக்குவித்தல், நீதி, இழப்பீடுகள் மற்றும் மீள உருவாகாமல் உத்தரவாதப்படுத்தலுக்கான சிறப்பு அறிக்கையாளரான பப்லோ டி கிரெய்ப், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இலங்கையை வந்தடைந்தார். ஆறு நாள்கள் அவர் இலங்கையில் தங்கியிருக்கவுள்ளார். இந்தக் காலப் பகுதியில் பலதரப்பட்டவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார்.
நாளை புதன் கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ள அவர் சிவில் சமூகத்தினர் மற்றும் வடக்கு மாகாணசபையினர் ஆகியோரை சந்தித்துப் பேசவுள்ளார். பின்னர் கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துப் பேசவுள்ளார். பக்.24

## தமிழர் பிரச்சினைகளில் அரசின் வேகம் போதாது

### அமெரிக்க செனட் உறுப்பினர்களிடம் சுட்டிக்காட்டியது வடக்கு மாகாண சபை

யாழ்ப்பாணம், மார்ச் 31
காணிகள் விடுவிப்பு, தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்புப் போன்றவற்றில் புதிய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளில் வேகம் போதாது. தமிழ் மக்களிடம் பெரும் எதிர்பார்ப்பு இருக்கின்ற நிலையில், புதிய அரசு மெத்தனமாகச் செயற்படுகின்றது.– இவ்வாறு வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், அமெரிக்க செனட் உறுப்பினர்களிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.
யாழ்ப்பாணத்திற்கு நேற்று வந்திருந்த பக்.24

## விபத்தில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 31
மோட்டார்சைக்கிளில் ஆலயத்துக்குச் சென்றுகொண்டிருந்தவரை அரச பஸ் மோதியதில் மோட்டார் பக்.24

## மீனவர் பிரச்சினை குறித்து ஜனாதிபதியுடன் ஆராய்வு

### வியாழனன்று கொழும்பில் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 31
தமிழக மீனவர்களின் அத்துமீறல் தொடர்பிலும், தமிழக – இலங்கை மீனவர்களுக்கு இடையிலான பேச்சில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் மற்றும் வடக்கு மாகாண மீனவ சங்கப் பிரதிநிதிகள் அதில் கலந்து கொள்ளவுள்ளனர்.
கடந்த பெப்ரவரி மாதம், வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் ஆகியோருடன், ஜனாதிபதி மைத்திரிபால சந்திப்பு நடத்தியிருந்தார். ஜனாதிபதியின் இந்தியப் பயணத்திற்கு முன்னதாக இந்தச் சந்திப்பு நடைபெற்றது. அதில் வடக்கு மீனவர் பக்.24

## டெங்கு பரவும் சூழல்; 52 பேர் மீது வழக்கு

### 400 பேருக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 31
யாழ்.மாவட்டத்தில் நுளம்பு பெருகக் கூடிய சூழலைக் கொண்டிருந்த 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அது தொடர்பில் 400 பேருக்கும் அதிகமானோருக்கு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. 52 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் சோதனை பக்.24

## யாழ். உட்பட 8 மாவட்டங்களில் நேற்று முதல் இலவச 'வை–பை'



யாழ்ப்பாணம், மார்ச் 31
யாழ்ப்பாணம் உட்பட 8 மாவட்டங்களின் 26 இடங்களில் நேற்று இலவச 'வை–பை' சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில், பொதுநூலகம் பக்.24

## உரிமைகள், அதிகாரங்கள் எம்மை நோக்கி வருகின்றன

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31
உரிமைகளும், அதிகாரங்களும் சிறிது சிறிதாக எம்மை நோக்கி வருகின்றன. நல்லாட்சி என்பது வெறும் பெயரளவிலான ஒரு கொள்கையாகாது. எமது ஒவ்வொரு நடவடிக்கையும், மற்றவர்கள் பார்வைக்கும், மதிப்பீட்டுக்கும், கணிப்புக்கும் ஆளாகவேண்டிய ஒரு நிலைகூட நல்லாட்சியே. – இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.
புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாணப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நேற்று முற்பகல் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பக்.24

## ஆதரவற்ற சிறுமி துஷ்பிரயோகம்: தலைமறைவானார் மத போதகர்

யாழ்ப்பாணம், மார்ச் 31
தாய், தந்தையரை இழந்து சபை ஒன்றின் பாதுகாப்பில் வளர்ந்த சிறுமி ஒருத்தியைச் சபையின் மதபோதகர் சில ஆண்டுகளாகத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது இதுகுறித்துப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். பக்.24

# எங்களுடைய தீவை எம்மிடம் தாருங்கள்

## இரணைதீவு மக்கள் பிரதமரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 31

போர் முடிந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் எங்களின் சொந்த நிலத்தில் இன்றுவரை நாங்கள் குடியமரவில்லை. தற்போது கடற்படையினரிடம் இருக்கும் எங்களுடைய தீவை எங்களிடமே ஒப்படையுங்கள்– இவ்வாறு இலங்கை பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடம் இரணை தீவு மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

வடக்குக்கு மூன்று நாள்கள் பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்குச் சென்றிருந்தார். அங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பல்வேறுபட்ட அமைப்புக்களுடனான கலந்துரையாடலில் அவர் பங்கு கொண்டார். அதற்போதே இரணை தீவு மக்கள் இவ்வாறு கோரிக்கை முன்வைத்தனர்.

"30 ஆண்டுகளுக்கு முன்னர் எமது தீவை விட்டு வெளியேறிய நாங்கள் தற்போது ஆட்சி மாற்றம் வந்த போது கூட அங்கு சென்று மீண்டும் குடியமர முடியாத நிலையில் உள்ளோம். எங்களது தீவிலே நாங்கள் குடியமர்வதற்கு கடற்படையினர் தடையாக உள்ளனர். மன்னார், யாழ்பாணம், நாச்சிக்குடா போன்ற பகுதிகளில் இருந்து எமது தீவை சுற்றியுள்ள கடற்பரப்பிலே மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் அங்கே தங்கி நின்று தான் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவார்கள். நாங்களும் அவர்களுக்கு துணையாக இருந்தோம். ஆனால் தற்போது நாங்கள் யாரும் அங்கு இல்லை. எமது நிலம் அனாதையாக ஆக்கப்பட்டுள்ளது."– என்று அவர்கள் தெரிவித்தனர்.

"எமது சொந்த தீவை விட்டுவிட்டு வந்து தற்போத நாங்கள் இரணை மாதா நகரிலே குடியமர்த்தப்பட்டுள்ளோம். அங்கேயும் கடற்றொழில் தான் செய்கின்றோம். எங்களை எங்களது சொந்த தீவிலே குடியமர்த்தி எங்களது வாழ்வாதாரங்களுக்கு வழிவகுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்."– என்று அவர்கள் பிரதமரிடம் கோரினர்.

இவற்றை கேட்ட பிரதமர் ரணில் விக்கிரம சிங்க இது தொடர்பில் மீள் குடியேற்ற அமைச்சருடன் பேசி முடிவெடுப்பதாகத் தெரிவித்தார். (ற–21)

## சிரமதானத்தின் மூலமாக நந்திக் கடல் களப்பு துப்புரவு



கிளிநொச்சி, மார்ச் 31

இறுதிப் போர் இடம்பெற்ற நந்திக்கடல் களப்பில் குவிந்து கிடக்கும் பாசிகள் மற்றும் சேறு என்பன ஜே.வி.பியின் தலைமையில் அண்மை யில் நடைபெற்ற சிரமதானத்தின் போது அகற்றப்பட்டன.

குறித்த பிரதேசத்துக்கு அண்மையில் சென்றிருந்த ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. அதில் பிரதேசத்தை சேர்ந்த மீனவர்கள் அதிகளவில் பங்கேற்றனர்.

நந்திக்கடல் களப்பில் மீன்பிடியில் ஈடுபடும் 5 ஆயிரம் மீனவ குடும்பங்கள் இறால்வளர்ப்பை தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளன. தொழிலில் ஈடுபடும் போது தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பிரதேச மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியிடம் முன்வைத்தது டன், களப்பை துப்புரவு செய்து தருமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர். (ற)

## ஒரே இரவில் 7 கடைகளில் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 31

வேலணையில் நேற்றுமுன்தினம் இரவு 7 கடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள், பணம் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

வேலணை வங்களாவடிச் சந்தியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. அனைத்துக் கடைகளிலும் கூரைகள் பிரிக்கப்பட்டு திருடர்கள் கடைகளுக்குள் இறங்கியுள்ளனர்.

பலசரக்குக் கடைகள், சாப்பாட்டுக் கடைகள், 'பான்சி' கடை, கைத்தொலைபேசிக் கடை என்பனவே உடைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 3 கடைகளில் திருட்டு இடம்பெற்றுள்ளது. ஒரு கடையில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும், மற்றைய கடையில் 4 ஆயிரம் ரூபாவும், மூன்றாவது கடையில் ஆயிரத்து 500 ரூபா பணமும் திருடப்பட்டுள்ளது என்று கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ற–4)

## மரமுந்திரிகை தோட்டத்தை மக்களிடம் கையளியுங்கள்

### கிளிநொச்சி சென்ற ரணிலிடம் சிவில் சமூகத்தினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 31

தற்போது இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் – விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட கிளிநொச்சி, ஜெயபுரம் பகுதியில் உள்ள சுமார் ஆயிரம் ஏக்கர் மரமுந்திரிகை தோட்டத்தை சிவில் அமைப்பினரிடம் கையளியுங்கள். அதன் மூலம் ஜெயபுரம் பகுதியில் வேலைவாய்புக்கள் அற்று இருக்கும் இளைஞர் யுவதிகளின் வாழ்வாதாரத்திற்கு வழிவகுக்கலாம் – என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்குச் சென்றிருந்தார். அங்கு நடைபெற்ற கலந்துரையாடலிலேயே சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

"மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் ஒன்றுதான் எங்களுடைய ஜெயபுரம் கிராமம். இங்கு இருக்கும் இளைஞர்கள், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு என்பது எட்டாக் கனியாகவே உள்ளது. எமது கிராமத்திலே இருக்கும் இந்த 'கஜு' தோட்டம் தற்போது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. இராணுவத்தினரே அங்கு வேலைகளில் ஈடுபடுத்தபடுகின்றனர். அதை மக்களிடம் கையளிப்பதன் மூலம் எங்களுடைய இளைஞர்கள் யுவதிகள் மட்டுமல்லாது பின் தங்கியிருக்கும் அயல் கிராமங்களில் இருக்கும் இளைஞர்கள், யுவதிகளும் பயனடையக்கூடியதாக இருக்கம். இதனை உடனடியாகக் கவனத்தில் எடுக்க வேண்டும்"– என்று அவர்கள் கூறினர்.

இதற்கு பதிலளித்த பிரதமர் சிவில் அமைப்புக்களை பலப்படுத்தி அதன் பின்னர் இது தொடர்பான முடிவுகளை எடுப்பதாக தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த சனிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனால் பல்வேறு பட்டவர்களுக்கான உதவிவழங்கும் திட்டங்கள் கிளிநொச்சி ஜெயபுரம் அ.த.க பாடசாலையிலே இடம்பெற்றது. அதில் விருந்தினராக கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினரிடமும் இது தொடர்பாக மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனார். (ற–21)

## பாம்பு தீண்டி பெண் சாவு

### பழி தீர்த்ததா பாம்பு?

யாழ்ப்பாணம், மார்ச் 31

அதிகாலை வீடு புகுந்து விசப் பாம்பு தீண்டியதில் பெண் உயிரிழந்தார். சண்டிலிப்பாய் மத்தியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த வைரவநாதன் கந்தேஸ்வரி (வயது 60) என்பவரே உயிரிழந்தார். அவர் 2 பிள்ளைகளின் தாயாவார்.

கடந்த திங்கட் கிழமை அவர்களது வீட்டுக்குள் இரவு 7.30 அளவில் புடையன் பாம்பு சென்றுள்ளது. அதை அவர்கள் அடித்துக் கொன்று எரித்துப்புதைத்திருந்தனர். இந்தநிலையில் நேற்று அதிகாலை விசப் பாம்பு குறித்த பெண்ணைக் தீண்டியுள்ளது. அவர் அழுது குரலெழுப்பியுள்ளார். அவ்ரது கணவன் விழித்துப் பார்த்தபோது இனந்தெரியாத பாம்பு ஒன்று அங்கிருந்து வேகமாக நகர்ந்து சென்று மறைந்தது.

உடனடியாக கந்தேஸ்வரி சங்கானை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் பாம்பு கொத்திய ஒரு மணித்தியாலத்தில் அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். விசாரணை, பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற–4)

## காசநோய் விழிப்புணர்வு பேரணி

திருகோணமலை, மார்ச் 31

'காசநோய்– 2015' விழிப்புணர்வுஊர்வலம் கிண்ணியா பிரதேசத்தில் நேற்று நடைபெற்றது. உள்நாட்டுப் போக்குவரத்து பிரதி அமைச்சர் எம்.எஸ்.தௌபீக் தலைமையில் இடம்பெற்ற இவ் ஊர்வலத்தில், கிண்ணியா மாவட்ட வைத்திய அதிகாரி ஏ.எச்.எம்.சமீம் மற்றும் உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் கிண்ணியா பிரதேசத்தில் காசநோய் அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அதிகரித்த புகைப்பழக்கம், மதுப்பழக்கம் காரணமாக இந்நோய் ஏற்படுகின்றது என்றும் இருமல், மூச்செடுப்பதில் சிரமம், இளைப்பு, விசில் சத்தம் ஏற்பட்டால் சுவாச நோய் சிகிச்சை பிரிவுக்கு வரு மாறு கோரப்பட்டுள்ளது.

ஊர்வலத்தில் பொலிஸார், பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (ற)

## தனியே சென்ற பெண்ணை வீழ்த்தி தங்கச் சங்கிலி அறுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

கோயிலுக்கு சென்று விட்டுத் தனியாக வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண்ணின் 36 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அறுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் தாவடி, நந்தாவில் ஒழுங்கையில் நடந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், பெண்ணை தள்ளி விழுத்தி கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற–101)

## பெறுபேறு மீளாய்வு 24க்கு முன்

யாழ்ப்பாணம், மார்ச் 31

கடந்தவருடம் நடைபெற்று நேற்று வெளியாகிய ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்ய விரும்பின் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் பெறுபேறு பட்டியலுடன் அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். தனியார் பரீட்சார்த்திகளுக் கான மாதிரி விண்ணப்பப்படிவம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–4)

## உள்ளூராட்சி உறுப்பினருக்கு நேற்று மோட்டார் சைக்கிள்கள்



மன்னார், மார்ச் 31

மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று மன்னார் மாவட்ட உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.ஏ.துரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் வன்னி தொகுதிக்கான ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளருமான ஹுனைஸ் பாறுக் மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் வடமாகாண பிரதான இணைப்பாளர் ரஞ்சித் பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொண்டு மோட்டார் சைக்கிள்களை வைபவரீதியாக வழங்கினர்.

உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் நான்கு பேருக்கும், அதன் உப தலைவர்கள் நான்கு பேருக்கும் மற்றும் 15 உறுப்பினர்களுக்குமாக 23 பேருக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (ற)

## அறநெறி பாடசாலைகளின் பேரவை ஆரம்பம்

வவுனியா, மார்ச் 31

வவுனியா மாவட்டத்தில் உள்ள அறநெறி பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் மற்றும் கற்கும் மாணவர்களுக்கு பல்வேறு உதவி திட்டங்களை மேற்கொள்ளும் வகையில் அறநெறி பாடசாலைகளின் பேரவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு அண்மையில் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பேரவையின் தலைவராக திருமதி ஜெ.நாகராஜாவும் செயலாராக கே.ஆனந்தகணேஸும், பொருளாராக செல்வி த.பிருந்தாவும் தெரிவு செய்யப்பட்டதுடன் 6 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ற–421)

உதயன்

# தமிழ் மக்கள் கலந்துகொண்ட நிகழ்வில் தேசிய கீதம் இசையில்

### பிரதமரின் வடக்கு வருகையின்போது

யாழ்ப்பாணம், மார்ச் 31
தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடுவது சர்ச்சைக்குரியதாகியுள்ள நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட, யாழ். மாவட்டச் செயலக நிகழ்வில் தேசிய கீதம் இசையில் மாத்திரம் ஒலிக்க விடப்பட்டது. ஆயினும் பிரதமர் பலாலியில் கலந்து கொண்ட இராணுவத்தினரின் நிகழ்வில் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கவிடப்பட்டது.

தமிழ் மொழியில் தேசிய கீதம் பாட முடியும் என்று ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்திருந்தார். ஆனால் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாட முடியாது என்று சிங்கள இனவாதக் கட்சிகள் கோஷம் எழுப்பியிருந்தன.

இந்தநிலையிலேயே தமிழ் மக்கள் வாழும், தமிழ் மக்கள் கலந்து கொண்ட யாழ்.மாவட்டச் செயலக நிகழ்வில், தேசிய கீதம் தனி இசையில் ஒலிக்க விடப்பட்டது. கடந்த 28 ஆம் திகதி சனிக்கிழமை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற நிகழ்விலேயே இவ்வாறு இசையில் தேசிய கீதம் இசைக்க விடப்பட்டது. அன்றைய தினம் மாலையில் பலாலியில், முப்படையினர் கலந்து கொண்ட நிகழ்வில் தனிச் சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதம் இசைக்க விடப்பட்டது.

கடந்த 23 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா ஆகியோர் வளலாயில் கலந்து கொண்ட நிகழ்விலும், தனித்து தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படவில்லை. தமிழ் - சிங்கள மொழியில் மேடையில் தேசிய கீதம் பாடப்பட்டது. ஆனால் ஒலிபெருக்கியில் தனித்து இசையில் மாத்திரம் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடலாம் என்று ஜனாதிபதி தெரிவித்திருப்பினும், தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்திலேயே அது இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. (ற-5)

# 252 பேருக்கு ஆசிரிய நியமனம்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் நேற்று வழங்கினார்



யாழ்ப்பாணம், மார்ச் 31
வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 252 பட்டதாரிகளுக்கு நேற்று ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. கணித பாடத்துக்கு 57 பேருக்கும், விஞ்ஞான பாடத்துக்கு 69 பேருக்கும், ஆங்கில பாடத்துக்கு 67 பேருக்கும், தகவல் தொழிநுட்ப பாடத்துக்கு 24 பேருக்கும், விவசாய பாடத்துக்கு 35 பேருக்கும் இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி சிவகுருநாதன் மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங்கினார்.

நிகழ்வில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்கள் வரவேற்பு நடனம் வழங்கினர். வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன், மாகாண சபை உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா,

"இயற்கையோடு விளையாடுகின்ற பிள்ளைகள் மாணவர்களாக - கட்டிளமைப் பருவமுடைய மாணவர்களாக உங்களிடம் கல்வி கற்க வருகின்றபோது அவர்கள் சுயமாகச் சிந்திக்கவும் சுயமாகச் செயற்படவும் கூடியதாக ஆசிரியர்கள் உதவவேண்டும். ஓகஸ்ட் மாத விடுமுறையின் போது உங்களுக்கு விசேட பயிற்சி ஒன்றை வழங்கவுள்ளோம். அது உங்களை மேலும் நல்ல நிலைக்கு இட்டுச் செல்ல உதவும். அதன் மூலமாக மாணவர்களுக்கு மேலும் சிறப்பாக கல்வியைப் போதிக்க முடியும். வடக்கு மாணவர்களுக்கு நீங்கள் நிறைவான கல்வியை வழங்க வேண்டும். அதற்கு குறிப்பிட்ட சில அறிஞர்களைப் பற்றி அறிந்து வைத்திருத்தல் சிறப்பானது."- என்று குறிப்பிட்டார். (ற-4)

# உறுதியான முடிவு கிடைக்கும்வரை குடிதண்ணீரைப் பயன்படுத்தாதீர்கள்

### யாழ்.பிராந்திய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவுறுத்துகின்றது

வலி.தென்மேற்கு, மார்ச் 31
குடிதண்ணீரில் மாசுக்கள் கலந்திருப்பின் அது பெரும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்காலத்தில் உருவாக்கும். குடிதண்ணீர் மாசு தொடர்பில் இன்னமும் சந்தேகம் இருக்கும் நிலையில் அதை மக்கள் குடிக்கவோ, சமையலுக்கோ பயன்படுத்த வேண்டாம்.- இவ்வாறு யாழ்.பிராந்திய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பண்ணையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய கூட்டத்தை அடுத்து விடுத்துள்ள அறிக்கையிலேயே அந்தச் சங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

"2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டுவரை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகளில் சுன்னாகம் பிரதேசத்தில் நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் மாசு நியம அளவை விடவும் பல மடங்கு அதிகளவில் காணப்பட்டது. ஆனால் அண்மையில் நிபுணர் குழுவினரின் முறையான முழுமையான ஆய்வுகள் முடிவடையும் முன்னரே வெளியிடப்பட்ட அறிக்கையில் குடிதண்ணீரில் மாசுகள் இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை விஞ்ஞான ரீதியாக குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது."- என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"குடிதண்ணீரில் மாசுக்கள் காணப்படின் பெரும் சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும். சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள், புற்று நோய், மலட்டுத்தன்மை, பிறப்புக் குறைபாடுடைய குழந்தைகள் பிறத்தல் என்பன அவற்றில் சிலவாகும்."- என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

"அதிகாரிகளால் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் நம்பகத்தன்மை திருப்திகரமானதாக இருக்கவில்லை. பிரதேசத்தில் நடத்தப்படும் ஆய்வுகளை அவற்றின் முக்கியத்துவம் மற்றும் நம்பகத்தன்மையைக் கருத்தில் கொண்டு பிரதேச வைத்திய அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்த வேண்டும். ஆய்வுகள் உலக சுகாதார நிறுவனத்தின் நியமங்களுக்கு அமைவாகவும் தொடர்ச்சியான முறையில் நடைபெற்றதன் பின்னரே அது தொடர்பான அறிக்கைகள் வெளியிடப்பட வேண்டும்."- என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"உறுதியான முடிவு கிடைக்கும் வரையில் பொதுமக்கள் தண்ணீரைக் குடிக்கவோ, சமைக்கவோ பயன்படுத்த வேண்டாம்."- என்றும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள் ளது. (ற-115)

# தொண்டமானாறில் சிக்கியது 6 அடி முதலை



யாழ்ப்பாணம், மார்ச் 31
யாழ். தொண்டமானாறு, 1 ஆம் கட்டைப் பகுதியில் 6 அடி நீளமான முதலை ஒன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை பிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியால் நடந்து சென்ற முதியவர் ஒருவர் முதலையில் தடுக்கி விழுந்துள்ளார். அதையடுத்து பொதுமக்கள் ஒன்றிணைந்து முதலையைப் பிடித்து வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். பொலிஸார் அதை கிளிநொச்சி வனஜீவராசித் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ற)

# ரயில் மோதி யானை சாவு



வவுனியா, மார்ச் 31
வவுனியா வடக்கு, கனகராயன் குளம் பகுதியில் ரயிலில் மோதி யானை ஒன்று இறந்துள்ளது. கடந்த சனிக்கிழமை இரவு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தபால் ரயிலியே யானை மோதுண்டுள்ளது. யானைகள் குறுக்கிட்டுச் செல்லும் பகுதியாக அறிவிக்கப்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இறந்த யானை 35 தொடக்கம் 40 வயதுடையது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)



# இன்று இறுதித் திகதி

## வாழ்வாதார உதவிகளுக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 31
முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள், தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் திட்டத்திற்கான பதிவு நடவடிக்கைகள் இன்றுடன் முடிவடையவுள்ளது. எந்தக் காரணத்தைக் கொண்டும், பதிவு நடவடிக்கைக்கான காலம் நீடிக்கப்பட மாட்டாது என்று அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வீதி, வர்த்தக – வாணிப, கிராமிய அபிவிருத்தி அமைச்சால் வாழ்வாதார உதவி வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த பெப்ரவரி மாதம், இதற்கான பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மார்ச் மாதம் 10 ஆம் திகதியுடன் முடிவடையும் என்று முதலில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், பின்னர் அது நீடிக்கப்பட்டிருந்தது. நீடிக்கப்பட்ட கால எல்லையும் இன்றுடன் முடிவடையவுள்ளது.

இதுவரையில் பதிவுகளை மேற்கொள்ளாத, முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள், தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்கள் ஆகியோரைப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் பணித்துள்ளார்.

கிராம சேவையாளர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோர் பதிவுகளை உறுதிப்படுத்த மறுத்தால் உடனடியாக, பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு இன்று முழுமையான பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் டெனீஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். பதிவுத் திகதி இதன் பின்னர் நீடிக்கப்படாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணசபையில், கடந்த ஆண்டு முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்திற்கு அமையவே, முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள், தமிழ் அரசியல் கைதிகள் ஆகியோருக்கான வாழ்வாதார உதவிகள் வழங்குவதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ற–5)

# தன்னியக்கச் சமிக்ஞை ரயில் கடவையில் தேவை

## உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலி.தெற்கு பிரதேச சபை தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 31
வலி.தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதான வீதிகள் மற்றும் குறுக்கு வீதிகளை ஊடறுக்கும் ரயில் பாதைகளில் தன்னியக்க சமிக்ஞைகளைப் பொருத்த வேண்டும். ரயில்வே திணைக்களம் அதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும். – இவ்வாறு வலி.தெற்குப் பிரதேச சபைத் தவிசாரளர் தி.பிரகாஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"எமது பிரதேசத்தில் ரயில் திணைக்களம் ரயில் பாதைகளை அமைக்கும்போது மக்களின் பாவனையிலுள்ள பல்வேறு வீதிகளை நிரந்தரமாக மூடியுள்ளது. அதனால் அந்த வீதிகளைப் பயன்படுத்திய மக்கள் விசனமடைந்துள்ளனர்.

மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ள வீதிகளில் தன்னியக்க சமிக்ஞைகள் இன்னமும் பொருத்தப்படாமலுள்ளன. பல இடங்களில் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்ற நிலைமைகள் கூட அவதானிக்கப்பட்டுள்ளது."– என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

"மருதனார்மடத்தில் இருந்து கோப்பாய் நோக்கிச்செல்லும் மானிப்பாய் பிரதான வீதியில்கூட தன்னியக்கச் சமிக்ஞை பொருத்தப்படவில்லை. இன்னும் சிறுசிறு வீதிகள் பலவற்றிலும் அவை பொருத்தப்படாமலுள்ளன. எமது பிரதேச மக்களின் நலன்கருதி உடனே அ[illegible]றைப் பொருத்துவதற்கு ரயில்வே திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தவறின் நாம் எமது மக்களைத் திரட்டி வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்த வேண்டிய நிலை ஏற்படும்."– என்றும் அவர் அதில் தெரிவித்துள்ளார். (ற–4)

## வடமராட்சி மீனவர்களின் வலைகள் இந்திய றோலரால் நாசம்



கொடிகாமம், மார்ச் 31
பருத்தித்துறையில் இருந்து கடலுக்குச் சென்றிருந்த 18 மீனவர்களின் வலைகள் இந்திய மீனவர்களின் றோலர் படகுகளால் வெட்டி நாசமாக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாசக்கப்பட்ட வலைகள் ஒவ்வொன்றும் சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியானவை என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கரையில் இருந்து 6 கிலோமீற்றர் தூரத்திலேயே நடந்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

றோலரில் வந்த இந்திய மீனவர்கள் இதுஎமதுஇடம்நாம்இங்குதொடர்ந்து வருவோம் என்று மிரட்டிச் சென்றனர் என்றும் வடமராட்சி மீனவர்கள் தெரிவித்த னர். (ற–105)



நல்லூர் கந்தன் ஆலயத்தின் வடக்கு வாயில் கோபுர அமைப்புப் பணிகள் நிறைவுறும் நிலையில் காணப்படுகிறது. தற்போது வர்ணம் பூசும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (ஒ–135)

# யாழ்ப்பாணம் மாநகர சபை சாரதிகள் பணிப்புறக்கணிப்பு

## தமது 8 கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் எனத் தெரிவித்து

வலி.வடக்கு, மார்ச் 31
யாழ்.மாநகர சபையின் வாகன சாரதிகள் நேற்று எட்டுக் கோரிக்கைகளை முன்வைத்துப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அதனால் சுகாதாரப் பணிகள் பெரிதும் தடைப்பட்டன.

அகில இலங்கை ஸ்தல ஸ்தாபன சாரதிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் பணிப்புறக் கணிப்பு நடத்தப் பட்டது.

தமது கோரிக்கைகள் தொடர்பில் யாழ்.மாநகர சபை ஆணையாளரிடம் தெரிவித்திருந்தபோதும், அது குறித்து இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.



யாழ்ப்பாணம் மாநகர சபையில் வேறு பதவிகளில் நிரந்தர நியமனங்களை பெற்று வாகனப் பகுதியில் கடமையாற்றுகின்ற அனைத்து சாரதிகளுக்கும் பதில் சாரதிகள் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட வேண்டும், வேலைப் பகுதியில் கடமையாற்றும் இரண்டு தொழிலாளர்களை சுகாதாரப் பகுதிக்கு பழிவாங்கும் வகையில் இடமாற்றம் செய்யப்படுவதை நிறுத்த வேண்டும், 65 சாரதிகளினதும் தங்கும் அறையாக காணப்படுவதை விஸ்தரிக்கப்பட வேண்டும், கடமையாற்றும் சாரதிகளின் உணவு உடைகள் வைத்து எடுப்பதற்காக பெட்டகங்கள் ( அலுமாரிகள்) அமைக்கப்பட வேண்டும், சாரதிகளுக்கு மலசல கூட வசதிகள் செய்யப்பட வேண்டும், சேவை மூப்பின் அடிப்படையில் வாகனங்கள் வழங்கப்பட வேண்டும், சாரதிகளாக 15 தொடக்கம் 20 வருட காலமாக கடமையாற்றி நோய்வாய்ப்பட்ட சாரதிகளுக்கு அவர்களுக்குரிய பணிகள் வழங்கப்பட வேண்டும், 2014ஆம் ஆண்டு நிரந்தர நியமனம் கிடைக்கப் பெறாது 5 வருடம் முதல் 6 வருடகாலமாக கடமையாற்றும் பதில்சாரதிகளுக்கு அமையத்தொழிலாளர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் தாம் தொடர்ச்சியாகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் அவர்கள் கூறினர். (ற–86,106)

## தேசிய பாடசாலை பராமரிப்புக்கு நிதி ஒதுக்குவதற்குத் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 31
தேசிய பாடசாலைகளின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக நிதி பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கென சுமார் 45 கோடி ரூபா நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். தேசிய பாடசாலைகளில் மாணவர்களிடம் அதிக பணம் அறவிடப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் கூறியுள்ளார்.

எனினும் தேசிய பாடசாலைகளை விடவும் ஏனைய பாடசாலைகளிலேயே இந்தப் பிரச்சினை அதிகமாக உள்ளது என்றும், ஆனால் அது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற–4)

## அம்பகாமத்தில் யானைக்குட்டி மீட்பு



வவுனியா, மார்ச் 31
முல்லைத்தீவு, அம்பகாமத்தில் தாய் யானை இன்றி அநாதரவான நிலையில் 4 மாதங்களேயான யானைக் குட்டி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதி மக்கள் வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு வழங்கிய தகவலை அடுத்து அவர்கள் அங்கு சென்று யானைக் குட்டியை மீட்டுச் சென்றனர்.

அம்பகாமம், முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான், கரிப்பட்டமுறிப்பு ஆகிய பகுதிகளில் மக்கள் குடியிருப்புகளுக்குள் அடிக்கடி யானைகள் நுழைந்து சேதங்களை விளைவிக்கு வருகின்றன. (ற–426)

# வீட்டுத் திட்டம் எதுவும் வழங்கப்படாது தொடர்ந்து புறக்கணிப்பு

## எல்லப்பர் மருதங்குளம், ஆனந்தபுரம் கிராம மக்கள் கவலை

வவுனியா, மார்ச் 31
வவுனியா, எல்லப்பர் மருதங்குளம், ஆனந்தபுரம் கிராம மக்கள் தமக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவித்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டு போர் காரணமாக இடம் பெயர்ந்து அகதிமுகாம்களிலும், இந்தியாவுக்கும் இடம் பெயர்ந்து சென்ற மக்கள் அதன் பின்னர் வவுனியாவில் பல கிராமங்களில் மீள் குடியமர்தத்ப்பட்டனர். அவ்வாறு மீள்குடியமர்க்கப்



பட்டவர்களில் வவுனியா எல்லப்பர் மருதங்குளம், ஆனந்தபுரம் கிராமத்தில் 44 குடும்பங்களை சேர்ந்த மக்களும் அடங்குகின்றனர். இந்தக் கிராம மக்கள் 1996 ஆம் ஆண்டு மீள் குடிமர்த்தப்பட்டனர்.

இவர்களின் வாழ்வாதாரத் தொழிலாக கூலி வேலையே காணப்படுகின்றது. மண் குடிசைகளில் வசிக்கும் தாம் ஒவ்வொரு மழை காலத்திலும் இடம்பெயர்ந்து செல்ல வேண்டியுள்ளது என்று கூறிய அந்த மக்கள், வீட்டுத் திட்டங்கள் எதுவும் தமக்கு வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

வீட்டுத் திட்டம் வேண்டும் என்று கோரிப் போராட்டங்கள் நடத்திய போதும், வாக்குறுதிகளை மட்டும் அதிகாரிகள் வழங்கி வருகின்றனர் என்றும், தமக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டால் தாம் இடம்பெயர வேண்டிய நிலை காணப்படாது என்றும் அவர்கள் தெரிவித்த னர். (ற–421)

# கூட்டமைப்பை பதிவு செய்ய முன்வாருங்கள்

## சம்பந்தனிடம் கோருகிறார் சுரேஷ்



யாழ்ப்பாணம், மார்ச் 31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. கட்சிப் பதிவுக்கான நடவடிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர் இரா.சம்பந்தன் முன்னெடுக்க வேண்டும் என்று, ஈ.பி.ஆர்.எல். அமைப்பின் செயலாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய க.சுரேஷ் பிரேமசந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரினால் நேற்று மதியம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர் இரா. சம்பந்தன் திருகோணமலையில் வைத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டுமானால் தமிழரசுக் கட்சி சம்மதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். தமிழரசுக் கட்சியின் முக்கிய தலைவர்கள் சிலர் இப்போது, கூட்டமைப்பு பதிவு செய்யப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றனர். எஞ்சிய சிலரைச் சம்மதிக்க செய்ய வேண்டியது இரா:சம்பந்தனின் பொறுப்பு. இல்லாவிடின் யார், இந்தப் பதிவு நடவடிக்கையை எதிர்க்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

இதேவேளை கனடாவிலுள்ள ஊடகம் ஒன்றுக்கு நேர்காணல் வழங்கிய, தமிழரசுக் கட்சியின் பிரதிச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியாகப் பதிவு செய்யப்பட்டு விட்டதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் இங்கு இரா.சம்பந்தன், கட்சியாகப் பதிவு செய்ய வேண்டுமானால் தமிழரசுக் கட்சி சம்மதிக்கவேண்டும் என்று குறிப்பிடுகின்றார். அவர்களுக்குள்ளேயே இதில் கருத்து முரண்பாடு இருக்கின்றது.

ஆனாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியாகப் பதிவு செய்யப்படவில்லை. தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய மூன்று கட்சிகள் கூட்டமைப்பாக இணைந்து செயற்படுகின்றன என்ற கடிதம் மாத்திரமே தேர்தல்கள் ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருக்கின்றதே தவிர, கூட்டமைப்பாகப் பதிவு செய்யப்படவில்லை. இவ்வாறு இருக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மக்களுக்குத் தவறான தகவல்களை வழங்கியுள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் செயலாளர்களைச் சந்தித்தபோது, ஏப்ரல் மாதத்தின் பின்னர் புதிய கட்சிகளுக்கான பதிவு இடம்பெறும். அதற்குத் தயார்ப்படுத்துமாறு கூறியிருந்தார். எனவே, கூட்டமைப்பை பதிவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் – என்றார்.

இதேவேளை, தேர்தல்கள் நெருங்கிவருகின்ற ஒவ்வொரு காலப் பகுதியிலும் மாத்திரமே கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில் கட்சிப் பதிவுக்காக அமைக்கப்பட்ட குழுக்களுக்கு என்ன நடந்தது என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, இது தொடர்பில் நியமிக்கப்பட்ட குழு கூடிக் கலந்துரையாடவில்லை. நான் முன்னர் குறிப்பிட்டது போன்று வெறுமனே கடிதம் மாத்திரமே தேர்தல்கள் ஆணையாளரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சேனாதிராசா கையளித்தார். அத்துடன் அதனை விட்டு விட்டார்கள்.


ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் கட்சிக்கான யாப்பு என்பனவற்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் குழு தலைவர் இரா.சம்பந்தனிடம் கையளித்தன.

இதுவரைக்கு அதன் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. எனவே தமிழரசுக் கட்சிதான் நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார். (த–5)

---

## கூட்டமைப்பை பதிவு செய்ய சகலரது அங்கீகாரமும் தேவை

### தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



திருமலை, மார்ச் 31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்கு அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உறுப்பினர்கள் அனைவரதும் ஒத்துழைப்பும் அங்கீகாரமும் தேவை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சம கால அரசியல் நிலவரம் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட அங்கத்தவர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் கடந்த சனிக்கிழமை திருகோணமலை நகரில் நடைபெற்றது. கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் எஸ். தண்டாயுதபாணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்யவேண்டும் என்ற விடயத்தைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியது மிக முக்கியமானது. இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் நீண்ட காலமாக தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டு பெரும் பங்களிப்புகளைச் செய்தவர்கள். எனவே அவர்களது ஒத்துழைப்பும் அங்கீகாரமும் இன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவுசெய்யமுடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யமாட்டோம் என நாம் ஒருபோதும் கூறவில்லை. அதனைப் பதிவு செய்வதென்றால் அதற்கானவழிமுறைகளைக்கையாள வேண்டும். எமது மக்கள் முழுமையாக அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். தற்போது சகலரும் ஒருமித்து செயல்படும் வேளையில், உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு உயர்ந்த அங்கீகாரத்தை பெற்றுள்ள நிலையில் அந்த அங்கீகாரத்தைச் சகலரும் தக்க வைத்துக்கொள்ள வேண்டும்.–என்றார். (த)

---

## குடிதண்ணீர் தொடர்பில் தெளிவான பதில் தேவை

### மாகாண அரசை வலியுறுத்துகிறார் சுரேஷ் எம்.பி

யாழ்ப்பாணம், மார்ச் 31

வலிகாமம் பிரதேசத்தில் மக்கள் தமது குடிதண்ணீரைப் பயன்படுத்தலாமா ? இல்லையா ? என்பது தொடர்பில் வடக்கு மாகாண அரசு பொதுமக்களுக்குத் தெளிவான பதிலை வழங்க வேண்டும். நிபுணர் குழுவின் அறிக்கையால் மக்கள் குழப்பத்தில் இருக்கின்றார்கள். இதனைத் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு மாகாண அரசுக்குரியது. இதனை மாகாண அரசு செய்ய வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீர்வேலிப் பணிமனையில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலிகாமம் பிரதேசத்தில், குடிதண்ணீருடன் கழிவு ஒயில் கலந்தமை தொடர்பில் ஆராய்வதற்காக வடக்கு மாகாண சபை நிபுணர் குழுவை நியமித்தது. இந்த நிபுணர் குழு தனது அறிக்கையில், குடிதண்ணீரில் உடலுக்கு தீங்கு ஏற்படுத்தக் கூடிய பார உலோகங்கள் இல்லை என்று தெரிவித்துள்ளது.

அப்படியாயின் அந்தக் குடிதண்ணீரைப் பயன்படுத்த முடியுமா ? அரச மருத்துவர் சங்கத்தின் யாழ்.பிராந்தியக் கிளை, குடிதண்ணீரைப் பயன்படுத்த வேண்டாம் என்று குறிப்பிட்டுள்ளது. அப்படியாயின் உண்மை நிலை என்ன ? நிபுணர் குழுவின் அறிக்கையை முழுமையாகப் பகிரங்கப்படுத்தவேண்டும்.

மேலும், நிபுணர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் வடக்கு மாகாண சபை அடுத்து என்ன செய்யப் போகின்றது. மாகாணசபைக்கு மேலாகமத்திய அரசுநடவடிக்கைஎடுக்கப் போகின்றதா ? போன்ற விடயங்கள் தெளிவுபடுத்தப்படவேண்டும். எனவே, வடக்கு மாகாணசபை மக்கள் அந்தக் குடிதண்ணீரைப் பயன்படுத்த முடியுமா ? இல்லையா என்பது தொடர்பில் தெளிவான – முழுமையானபதிலைவழங்கவேண்டும் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்தார். (த–5)

---

## லீ குவான் யூவின் மறைவு ஆழ்ந்த துயர் தந்துள்ளது

### இரங்கல் செய்தியில் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம்,மார்ச் 31

சிங்கப்பூர் நாட்டின் முதலாவது பிரதமர் லீ குவான் யூவின் மறைவு ஆழ்ந்த துயர் தந்துள்ளது என வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கப்பூர் நாட்டின் வெளிவிவகாரத்துறை மற்றும் சட்ட அமைச்சர் கே.சண்முகத்துக்கு அவர் அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்தியில்,

அவர் 1965ஆம் ஆண்டு சிங்கப்பூரைச் சுதந்திரமானதொரு நாடாக உருவாக்குவதற்கு அரும்பாடுபட்டார். அந்த வேளையில் விடுக்கப்பட்ட சவால்களைப் பொறுமையுடன் எதிர்கொண்டார். சிங்கப்பூரை முதற்தரமானதொரு நாடாகவும் மாற்றிக் காட்டினார்.

மறைந்த முன்னாள் பிரதமர் லீ குவான் யூ இலங்கைத் தமிழர்களின் உரிமைக்கான போராட்டங்களின் நியாயங்கள் தொடர்பாக நன்கறிந்திருந்தார். இந்த நிலையில் இலங்கைத் தமிழர்கள் தமது உண்மையான நண்பரையும் ஆதரவாளரையும் இழந்து நிற்கின்றனர் என்றுள்ளது. (த–க)

---

## கூட்டமைப்பின் எதிர்காலம்; இன்று கொழும்பில் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால நடவடிக்கை தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுப்பதற்காக இன்று கொழும்பில் முக்கிய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில், சரியான முடிவு எடுக்கப்படாவிட்டால், எதிர்காலத்தில் நாங்கள் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்று, ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீர்வேலிப் பணிமனையில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிவு தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

இதன் போது, தமிழரசுக் கட்சி பதிவு செய்வதற்கு இணங்கி வராவிட்டால் என்ன செய்வீர்கள் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால நடவடிக்கை தொடர்பில் ஆராய்வதற்கு (நாளை) இன்று முக்கிய கலந்துரையாடல் கொழும்பில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில், சரியான முடிவு எடுக்கப்படாவிட்டால், நாங்கள் இனி எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நிகழ்வுகளில் கலந்து கொள்வதா, இல்லையா என்பது தொடர்பில் தமிழத் தேசியக் கூட்டமைப்பு கூடி எந்தவொரு முடிவையும் செய்யவில்லை. இவ்வாறானதொரு நிலையிலேயே, பிரதமர் பங்கெடுத்த நிகழ்வுகளில் பங்கெடுத்ததாக அவர் குறிப்பிட்டார். எதிர்காலத்தில் பங்கேற்பதாக இல்லையா என்பது தொடர்பில் முடிவு எடுத்தால் அதனைப் பின்பற்றலாம் என்றார். (த–5)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நீங்கள் செய்யும் காரியங்களுக்கு எல்லாத் தரப்பினரிடம் இருந்தும் ஆதரவு கிடைக்கும். நன்மை தீமைகளை பற்றிக் கவலைப்படாமல் செயலாற்றுவீர்கள். தொழில் தொடர்பான பிரச்சினைகள் நீங்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடும் முன் தகுந்த ஆலோசனைகளை எடுத்துக்கொள்வது அவசியம். வீண் அலைச்சலும், காரிய தடையும் ஏற்படலாம் கவனம் தேவை. எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதர, சகோதரிகள் சட்டென்று உங்களை எடுத்தெறிந்து பேசிவிடலாம். அதனால் உங்களின் இரகசியங்களை எவரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டாம்.

**கடகம்:** தொழில் வியாபாரம் சிறப்படையும். புதிய ஆர்டர்கள் கிடைக்கப் பெறுவீர்கள். அரசு தொடர்பான விடயங்கள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் பதவிஉயர்வு உண்டாகும்.

**சிங்கம்:** நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். சக பணியாளர்கள் மூலம் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத்தில் உற்சாகம் இருக்கும். மற்றவர்கள் உங்களை அனுசரித்துச் செல்வார்கள்.

**கன்னி:** பேச்சின் இனிமை சாதுரியத்தால் எளிதில் காரியங்கள் கைகூடும். எதிர்காலத்துக்கு உதவக்கூடிய விடயங்களில் ஆர்வம் உண்டாகும். உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும்.

**துலாம்:** தொழில் வியாபாரத்தில் மந்தமான போக்கு காணப்பட்டாலும் பணவரத்துக் குறைவிருக்காது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளைக் கவனிப்பது நல்லது.

**விருச்சிகம்:** கௌரவம், அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கவனமாகவும் கடினமாகவும் உழைப்பது வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** வீண் அலைச்சலும், காரிய தடையும் ஏற்படலாம் கவனம் தேவை. மனவருத்தம் நீங்கும். மனோதைரியம் அதிகரிக்கும். எல்லாக் காரியங்களும் சாதகமாக நடந்து முடியும்.

**மகரம்:** எல்லா இடங்களிலும் மரியாதையும், கௌரவமும் அதிகரிக்கும். எல்லாத் தரப்பினரிடம் இருந்தும் ஆதரவு கிடைக்கும். நன்மை தீமைகளை பற்றிக் கவலைப் படாமல் தலை நிமிர்ந்து நடப்பார்கள்.

**கும்பம்:** கடன் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். எழுத்துத் தொழிலில் இருப்பவர்கள் முன்னேற்றம் அடைவார்கள்.

**மீனம்:** திருமணம் தொடர்பான பேச்சு வார்த்தை சாதகமான பலன் தரும். பிள்ளைகளுக்காகச் செய்யும் பணிகள் திருப்தி தரும். அயலில் இருப்பவர்களுடன் இருந்த தகராறுகள் நீங்கும்.





# 530 ஆண்டுகளின் பின்னர் நல்லடக்கமாகும் மன்னர்

1485 ஆம் ஆண்டு போரில் கொல்லப்பட்ட இங்கிலாந்து மன்னரின் உடல் 530 ஆண்டுகளுக்கு பின்னர் கடந்த 26 ஆம் திகதி அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் 1480 ஆம் ஆண்டுகளில் ஆட்சி செய்த மன்னர் 3 ஆவது ரிச்சர்ட்ஸ். இவர் 1485 ஆம் ஆண்டில் நடந்த போரில் கொல்லப்பட்டார்.

இங்கிலாந்தின் இறுதி மன்னரான இவரது உடல் எங்கே அடக்கம் செய்யப்பட்டது எனத் தெரியாமல் இருந்தது. இந்த நிலையில் கடந்த 2012 ஆம் ஆண்டில் லிசெஸ்டர் என்ற இடத்தில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தின் அருகே கார்த் தரிப்பிடத்தில் இவரது உடல் புதைக்கப்பட்டது தெரிய வந்தது.

இதனைத் தொடர்ந்து புதைப்பொருள் நிபுணர்கள் அங்கு தோண்டிப் பார்த்த போது அங்கு மன்னர் 3 ஆம் ரிச்சர்டின் எலும்புக்கூடு இருந்தது. பின்னர் அது மீட்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், அவரது உடலை மீண்டும் ராஜமரியாதையுடன் அடக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது. அதன்படி 530 ஆண்டுகளுக்கு பிறகு கடந்த 26 ஆம் திகதி மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது. அதற்காக ஓக் மரத்தினால் தயாரிக்கப்பட்ட சவப்பெட்டியில் அவரது எலும்புக்கூடு வைக்கப்பட்டு பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னரே அடக்கம் செய்யப்பட்டது. லீ செஸ்டரில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் அரசு முறைப்படி உடல் அடக்கம் செய்யப்பட்டது

# ரிலாக்ஸா வாசியுங்க...



*உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியாவின் தோல்விக்குக் காரணம் என்னவாக இருக்கும்???*

**விஜயகாந்த்:** மிகப்பெரிய மைதானத்தில் 11 பேர் பீல்டிங் செய்யும் வேளையில், நம் அணியினர் இரண்டு பேர் மட்டுமே பட்டிங் செய்ததும் மற்ற 9 பேர் உட்கார்ந்து இருந்து வேடிக்கை பார்த்ததுமே இந்திய அணியை தோல்வியடையச் செய்தது.

**திருமாவளவன்:** இந்திய அணியின் தோல்விக்கு பா.ம.க. ராமதாஸ் அவர்களே காரணம். சிறுபான்மை கிறிஸ்தவ மக்களுக்கு கிடைத்த வெற்றி.

**கலைஞர் கருணாநிதி:** ஆஸ்திரேலிய அ.தி.மு.கவினரின் அராஜக விளையாட்டை திமுக கண்டிக்கிறது.

**பன்னீர்ச்செல்வம் (முதலமைச்சர்):** மாண்புமிகு அம்மா அவர்கள் இல்லாததே தோல்விக்குக் காரணம்

**ஜிகேவாசன்:** காமராஜர் தலைமையிலான இந்திய அணி அமையாததே காரணம்


**தமிழிசை சவுந்தரராஜன்:** விரைவில் அமித்ஷா – மோடி தலைமையில் கோவையில் உலகக் கிண்ணம் வெல்வோம்.

**ஜெயலலிதா:** தெய்வம் விதி சதி செய்துவிட்டது.

**வைகோ:** உலகக் கிண்ணத்தை முல்லைபெரியார் மைதானத்தில் நடத்தாததே காரணம்

**சீமான்:** நம் அணியில் ஈழத்தமிழர்கள் இல்லாததும், சிங்கள நடுவர்கள் இருந்ததும் தோல்விக்கு காரணம்.

இது ஒரு இந்திய ரசிகரின் பதிவு.




# அன்ரொய்ட் வசதி



ஸ்மார்ட் போன் கையில் இருக்கும் போதே லொக் ஆகி விடுகிறதா? இதற்குத் தீர்வாக போன் உங்கள் கைகளில் இருக்கும் போது அது லொக் ஆகாமல் இருக்க, ஸ்மார்ட் லொக் அறிமுகமாகியுள்ளது. மாறாக போனை கீழே வைத்து விட்டால் அது தானாக லொக் ஆகிவிடும். 'ஒன் பொடி லொகேஷன்' எனும் நுட்பத்தின் அடிப் படையில் இது செயல்படுகிறது. அதாவது, போனில் உள்ள அக்சிலரோமீற்றர் மூலம் அது கையில் இருக்கிறதா அல்லது கீழே வைக்கப்பட்டுள்ளதா என உணர்ந்து கொள்கிறது. இந்த வசதியைப் பயன்படுத்த ஸ்மார்ட் லொக் வசதியில் ஒன் பொடி லொகேஷனைத் தேர்வு செய்து கொள்ள

# மோசடி செய்த ஸ்ருதி



நடிகை ஸ்ருதிஹாசன் மீது மோசடி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆந்திராவில் 'பிக்சர் ஹவுஸ் மீடியா லிமிடெட்' நிறுவனம் தயாரிக்கும் பெயரிடப்படாத திரைப்படத்தில் நாகார்ஜுன்– கார்த்தி இணைந்து நடிக்கின்றனர். இந்த திரைப்படத்தில் நடிக்க நடிகை சுருதிஹாசன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

ஆனால் அவர் திடீரென அந்த திரைப்படத்தில் இருந்து விலகினார். படப்பிடிப்புக்கு திகதிகளை ஒதுக்கித் தருவதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக விலகிக் கொள்வதாக அவர் தெரிவித்திருந்தார். ஆனால் இது தொடர்பாக ஸ்ருதிஹாசனுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், வழக்கு தொடுத்துள்ள நிறுவனத்தின் திரைப்படத்தின் படப்பிடிப்பு முடியும் வரை, புதிய திரைப்படத்தில் நடிக்க ஒப்புக்கொள்வதற்கு ஏப்ரல் 8 ஆம் திகதி வரை நடிகை ஸ்ருதிஹாசனுக்கு தடை விதித்து இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

# சமாதான நீதிவான்கள் பணம் பெற்றால் குற்றம்

கொழும்பு, மார்ச் 31
சமாதான நீதிவான் பதவியின் நோக்குகள் மற்றும் கோட்பாடுகளுக்கு முரணான விதத்தில் செயற்பட்டு சேவை வழங்கலுக்காக சாதாரண பொதுமக்களிடமிருந்து பணம் பெற்றுக் கொள்ளும் விதமாகச் செயற்படும் சமாதான நீதிவான்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கு நீதி அமைச்சு தீர்மானித்துள்ளது. அது தொடர்பாக முக்கிய நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.
சமூகத்தின் மேம்பாட்டுக்காக மிகப் பெரிய சேவை வழங்கத் தக்கதாக இருக்கையில் சமாதான நீதிவான் பதவி களைப் பெற்றுள்ள ஒரு சிறு தரப்பினர் அந்தப்பதவியின் பொறுப்புக்களை உதாசீனப்படுத்திச் செயற்பட்டு வியாபார நோக்கில் நின்று பொதுமக்களிடமிருந்து பணம் அறவிட்டுக் கொள்ளும் வித மாகச் செயற்பட்டு வருகின்றனர்.
சமாதான நீதிவான்கள் பத வியைப் பயன்படுத்தி சட்டவிரோத செயல்களைப் புரியும் சமாதான நீதிவான்களின் பதவிகளை ரத்துச் செய்து விடுவதற்கும் நடவடிக்கைகளை மேற் கொள்ளவும் அது சதொடர்பாக சுற்றி வளைப்புக்களை தொடர்ச்சியாக மேற்கொள் வதற்கும் நீதியமைச்சுதீர்மானித்துள்ளது. (வ–22)

## மீனவர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க உதயமானது கட்சி

கொழும்பு, மார்ச் 31
மீனவத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை வென்றெ டுக்கும் நோக்கை மையமாகக் கொண்டு 'ஐக்கிய மீனவ மக்கள் முன்னணி' என்ற பெயரில் கடந்த 22 ஆம் திகதி நீர்கொழும்பில் புதிய அரசியல் கட்சி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக்கட்சி 'டொல்பின்' சின்னத்தைக் கொண்டுள்ளதோடு அதன் நிறம் தங்க வர்ணமாகும்.
கட்சியின் தலைவராக உலக மீனவ சம்மேளனத்தின் இந் நாட்டுப் பிரதிநிதியான ஹர்மன் குமாரவும், தேசிய அமைப் பாளராக பத்தலன் குண்டு மீனவசங்கத்தின்தலைவரான அன்ரனி பொன்சேகாவும், தேசிய செயலாளரும் போசகருமாக பெதிவேவ தியசேன தேரரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
அவற்றுக்கு மேலதிகமாக யாப்புகளை ஆக்கும் சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட் டுள்ளது. எதிர்காலத்தில் இந்தக் கட்சிக்கு மாவட்டங்கள் மட்டத்திலான தலைவர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.
இன்றைய அரசு மீனவர்களின் கோரிக்கைகளைச் செவிமடுக்காதிருப்பது, கடந்த 50 ஆண்டுகளாக இந்நாட்டு மீன்பிடித் தொழில் பின்ன டைவை எட்டி வருவது என்பதையும் மீனவ சமூகத்துக்காகக் குரலெழுப்பும் அரசி யல் தலைவர்களை உருவாக் குதல் என்பதும் அந்தக்கட்சியின் பிரதானமான குறிக்கோள்களாக இருப்பதாக ஐக்கிய மீனவர்கள் முன்ன ணியின் தேசிய தலை வரான ஹர்மன் குமார தெரிவித்தார். (வ–22)

## வடமராட்சி வடக்கு பிரதேச மட்ட கலை இலக்கியப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31
கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தேசிய கலை இலக்கியப் போட்டிகள் வடமராட்சி வடக்கு பிரதேச மட்டத்தில் மட் டுப் படுத்தப்பட்ட போட்டிகளாகவும் திறந்த போட்டிகளாகவும்நடைபெறவுள்ளன.
மட்டுப்படுத்தப்பட்ட போட்டிக ளாக கட்டுரைப் போட்டி (கனிஷ்ட சிரேஷ்ட பிரிவு), கவிதைப் போட்டி (கனிஷ்ட சிரேஷ்ட பிரிவு), கவிதை பாடல் (கனிஷ்ட சிரேஷ்ட பாலர் பிரிவு), கையெழுத்துப் போட்டி (பாலர் பிரிவு), பாடல் நயத்தல் போட்டி (சிரேஷ்ட பிரிவு) என்பனவும் நடைபெறவுள்ளன.
இந்தப்போட்டிகள் யாவும் பாடசாலை மாணவர்களுக்கு மட் டுமே உரியது. இந்தப் போட்டி களில் பாலர் பிரிவு 6–10 வயது வரையுள்ள மாணவர்கள், கனிஷ்ட பிரிவு 11–15 வரை யுள்ள மாணவர் கள், சிரேஷ்ட பிரிவு 16–19 வரையுள்ள மாணவர்கள் யாவரும் பங்குபற்றலாம்.
19 வயதுக்கு மேற்பட்டவர்க ளுக்கான திறந்த போட்டியில் தனி நபர்கள் எவரும் பங்கு பற்றலாம். இந்தப் போட்டிகளில் பாடல் ஆக்கம் மற்றும் நாட்டார் கலை, கற்றல் போட்டி, இலக்கிய விவரணப் போட்டி, சிறு கதைப் போட்டி, கவி தைப் போட்டி, சிறுவர் கதை ஆக்கப் போட்டி என்பனவும் நடைபெறவுள்ளன.
இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விவரங்களையும் பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோ கத்தரிடம் பெற்று எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக பருத்தித்துறைப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ)

## யேமனிலுள்ள இலங்கையரை மீட்டுவர ஐ.நாவிடம் உதவி

கொழும்பு, மார்ச் 31
யேமனில் இடம்பெற்று வருகின்ற மோதல்களில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்பதற்கு ஐ.நாவின் உதவி கோரப் பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.
யேமன் தலைநகர் சனாவை அண்மித்த பகுதியில் நிர்க்கதியாகியுள்ள இலங்கையர்களை நாட்டிற்கு மீள அழைத்துவர, இந்தியக் கடற்படையினரின் உதவியையும் பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட் டுள்ளது என்று பதில் வெளிவிவகார அமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்தார்.
மோதல்களில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்பதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு, அவர்களது உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
நுவரெலியா, கம்பஹா, கந்தானை, தொம்பே, பிலியந்தலை மற்றும் கண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே யேமனில் நிர்க்கதியாகியுள்ளனர்.
அதேவேளை. யேமனில் மோதல்களில் சிக்கியுள்ள மூவாயிரத்து 500இற்கும் மேற்பட்ட இந்தியப் பிரஜைகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக இந்திய அரசு கப்பல்களை அனுப்பி வைக்க உத்தேசித்துள்ளது.
மோதல்கள் வலுவடைந்துள்ள நிலையில், யேமன் சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள் ளமையே இதற்குக் காரணமாகும். (வ–சி)

# இலங்கை மீனவ சங்கங்களின் கருத்துக்களைக் கேட்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 31
இந்திய – இலங்கை மீனவர்களுக்கு இடையில் மீன்பிடித் தல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்திய மீனவர்களால் முன்வைக்கப்பட்ட திட்டம் தொடர்பாக இலங்கையிலுள்ள மீனவர் சங்கங்களின் கருத்துகளைப் பெறுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.
இதற்கான முக்கிய கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.
இந்தத் தகவலை இலங்கை இந்திய மீனவர் பேரவையின் இலங்கை இணைப்பாளர் எஸ்.பி. அந் தோனி முத்து நேற்றுமுன்தினம் உதயனிடம் உறுதிப் படுத்தினார்.
மேற்படி கூட்டத்தில் பங்கேற்குமாறு வடக்கிலுள்ள மீனவர் சங்கங்கள், வடமாகாண மீன்பிடி அமைச்சர் ஆகியோருக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். இந்தியாவில் சென்னையில் கடைசியாக நடந்த பேச்சுகளின்போது இந்திய மீனவர்கள் தரப்பில் ஏழு அம்சத் திட்டமொன்று, முன்வைக்கப்பட்டது.
இந்தத் திட்டத்தில் மூன்று ஆண்டுகளுக்கு இலங்கைக் கரையில் இருந்து 5 கடல்மைல் தொலைவில் ஆண்டுக்கு 83 நாள்கள் மீன்பிடிக்க அனுமதி அளிக்கும் யோசனையும் ஒன்றாகும்.
இதுகுறித்து தீர்மானிக்க இலங்கை அரசு கால அவகாசம் கேட்டுள்ளது. 2 ஆம் திகதி நடைபெறும் கூட்டத்திலேயே இதுகுறித்து இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது. அத்துடன், இந்தக் கூட்டத்தில் இந்திய தூதரக அதிகாரிகளும் பங்கேற் பார்கள் என்று அறிய முடிகிறது. (வ–சி)

## தந்தை செல்வாவின் 117 ஆவது பிறந்த தின நிகழ்வு வவுனியாவில்

வவுனியா, மார்ச் 31
தந்தை செல்வாவின் 117 ஆவது பிறந்த தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.
வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று காலை 9 மணிக்கு வவுனியா நகரப்பகுதியில்அமைந்துள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணி விக்கப்படும். தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட் டக் கிளை அலுவலகம் தாயகத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் வடக்கு,கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பிரமுகர்கள் கலந்து கொண்டு சொற் பொழிவு நிகழ்த்தவுள்ளனர். (வ–421)

## கலாசார மலருக்கு ஆக்கம் கோரல்

நெடுந்தீவு பிரதேச செயலக கலாசார பேரவை மற்றும் பிரதேச செயலகம் என்பன இணைந்து வெளியிடவுள்ள கலாசார மலருக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன. ஆக்கங்களை அனுப்புவோர் சொந்தப் படைப்பான நெடுந் தீவு பிரதேசம் சார்ந்த அதனைப் பிரதிபலிக்கக் கூடியதான கட்டுரை, கவிதை, சிறுகதை, பாடல்கள், செய்தித் துளிகள், விடுகதைகள்,குறுங்கவிதைகள் போன்ற ஆக்கங்களை எதிர் வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர், பிரதேச செயலகம், நெடுந்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட் கப்பட்டுள்ளது. (வ)

## காயங்களுடன் அனுமதிக்கப்பட்ட சிங்கள இளைஞர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், மார்ச் 31
மின்சார இணைப்பு வேலைக்காக திருகோணமலையிலிருந்து வந்து முல்லைத்தீவு உடையார் கட்டுப் பிரதேசத்தில் தங்கியிருந்து வேலை செய்து வந்த 21வயதான சிங்கள இளைஞர் ஒருவர் காயங்களுடன் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி வியாழக்கிழமை உயிரி ழந்தார்.
குறித்த இளைஞர் தனது நண் பர்களுடன் சேர்ந்து உடையார்கட்டில் வீடொன்றில் தங்கியி ருந்ததாகவும், 21 ஆம் திகதி இரவு நண்பர்களுடன் மது அருந்தியதாகவும் மறுநாள் காயங்களுடன் முல்லைத்தீவு மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவனைக்கு மாற் றப்பட்ட தாகவும் தெரிய வருகின்றது.
இறந்தவர் கோமரங்கடவெல, திருகோண மலையைச் சேர்ந்த மகா குமாரகே றோகண சிறிசேன என்பவராவார். அவரது இறப்பு தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (வ–103)

சட்டக்கல்லூரி நுழைவுப்பரீட்சை வகுப்பு
சனி, ஞாயிறு மு.ப. 9-12 வரை
ஆரம்பம்: 11.04.2015 சனிக்கிழமை
க.துரைராஜா
(இளைப்பாறிய மேலதிக அரச அதிபர்)
192, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
077 172 8348 (58268)(4.3.7)

காணி விற்பனைக்கு
கச்சேரி நல்லூர் வீதியில்
4 பரப்பு 3.95 குழி காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 006 1651
(58262)(4.3.7)

தவறிவிட்டது கொக்குவிலுக்கும், கண்டுக்குளிக்கு மிடையில் சங்கிலியுடனான மூக்குக்கண்ணாடி தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 1000/= இக்கும் அதிகமான சன்மானம் வழங்கப்படும்.
(58255)(4.3.7) தொடர்பு: 077 624 5162

வேல்டிங் வேலைக்கு ஆள்கள் தேவை
கேட், கிரில் வேலையில் தேர்ச்சி பெற்றவர்கள் அவசியம். மேலதிக விவரத்துக்கு தோடர்பு கொள்ளவும்
T.P: 0771942865

தென்னம் குற்றிகள் தேவை
விறகுக்கு கொள்வனவு செய்யப்படும்.
கிலோ: 2 ரூபாய்
தொடர்பு: நிப்போன் ரான்ஸ்போட் சேவிஸ்
இல.57/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2121/077 950 5195 (சி/17255) (4.3.7)

தென்னிந்திய இசைப்பாடகர்களுடன்
இசைப்பணியாற்றிய ஈழத்தின்
முன்னணி இசையமைப்பாளர்
ஸ்ரீ குகனின் மெல்லிசையில்
புதிய இசை நட்சத்திரங்களும்
முன்னணி இசைக்கலைஞர்களும்
இசை விருந்து படைக்கும்
இரு தசாப்தங்கள் கடந்தும் முன்னணியில்

யாழ். ஸப்தஸ்வரா இசைக்குழு
மங்கள வைபவங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.
ஸ்ரீகுகன்
077 698 0573
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (58263)(4.7)

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு
சீவம் ஆடையகத்தின் அதிரடி மலிவு
விற்பனை சகலவிதமான ஆடை வகைகளும்
மாபெரும் மலிவு
விற்பனை

- பஞ்சாபி வகைகள்
- பாவாடை சட்டைகள்
- சேர்ட் வகைகள்
- பெண்களுக்கான சாறி வகைகள்
- சிறுவர்களுக்கான ஆடைகள்

அனைத்து ரக ஆடைகளையும் மிகவும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
யாழ்.நகரில் நீங்கள் நாடவேண்டிய இடம்
SVP சீவம் ரெக்ரைல்ஸ்
14-A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# தாளையம்பதி ஐயனார் தேர்த்திருவிழா

சுன்னாகம் தாளையம்பதி ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தான தேர்த்திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் தீர்த்தோற்சவமும் நடைபெறும். மகோற்சவம் கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# பாடசாலை மாணவருக்கு சித்திரப்போட்டிகள்

கரணவாய், மார்ச் 31

கல்வி அமைச்சின் அனுசரணையுடன் டி.எஸ்.ஐ.நிறுவனத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையே டி.எஸ்.ஐ. சித்துவிலி ஸ்ரீ லங்கா சித்திரப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இதுதொடர்பான சுற்றறிக்கைகள் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்கள், கல்விப் பணிப் பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர், சித்திரபாட பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

டி.எஸ்.ஐ.நிறுவனத்தின் 25 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்படும் இந்தப் போட்டியில் அரச பாடசாலைகள், அரசால் அங்கீகரிக் கப்பட்ட. தனியார் பாடசாலை கள், சர்வதேசப் பாடசாலைகள் ஆகியவற்றின் மாணவ மாணவிகள் பங்கு பற்ற முடியும்.

இந்தப்போட்டியில் தரம் 2–3 மாணவர்களுக்கு 'எமது சுற்றுச் சூழல்' என்ற தலைப்பிலும், தரம் 4–5 மாணவர்களுக்கு 'பெரியவர்களுக்கு மரியாதை செலுத்துவோம்' என்ற தலைப்பிலும் தரம் 6–8 மாணவர்களுக்கு 'சூழலைப் பாதுகாப்போம்' என்ற தலைப்பிலும் தரம் 9–11 மாண வர்களுக்கு 'சிறந்த பழக்கங்களுடன் வாழ்வோம்' என்ற தலைப்பிலும் தரம் 12–13 மாணவர்களுக்கு '2025இல் இலங்கை" என்ற தலைப்பிலும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகளின் மாணவர்கள் தமது ஆக்கங் களை அதிபரினால் உறுதிப்படுத்துவித்து எதிர்வரும் மே 15ஆம் திகதிக்கு முன்பாக சித்து விலி ஸ்ரீலங்கா சித்திரப்போட்டி – 2015, திட்ட முகாமையாளர், இல. 257 ஹைலெவல் வீதி, நாவின்ன, மஹரகம என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்போட்டிகளில் தெரிவு செய்யப்படும் ஓவியங்கள் ஒக்டோபர் மாதம் 8,9ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் கொழும்பு தேசிய கலாபவனத்தில் காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன் 11 ஆம் திகதி பண்டா ரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து பரிசில்களும் வழங்கப்பட வுள்ளன.

இந்தப்போட்டியில் தேசிய ரீதியில் முதலாம் இடம்பெறும் ஓவியத்துக்கு 50ஆயிரம் ரூபா பரிசும் அந்த ஓவியத்தை வரைந்த மாணவர் கல்வி கற்கும் பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபக ரணங்களும் வழங்கப்படும் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது. (வ–108)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 02.03.2015
திங்கட்கிழமை
அமரத்துவமடைந்த
எமது அன்புத் தெய்வம்



அமரர்
**வைரமுத்து தனபாலசிங்கம்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (01.04.2015) புதன்கிழமை காலை 4.00 மணியளவிலும், சபண்டீகரணக் கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவிலும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சாளம்பன்,
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

(58228)(4.3.7)



## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சோமசுந்தரம்
**குலேந்திரன்**

தோற்றம் 30.03.1935 | மறைவு 31.03.2003

அப்பா!
காலங்கள் பல கரைந்தாலும் நீங்கள்
கற்றுத் தந்த வாழ்க்கைப் பாடங்கள் கரையா
உங்களது சேவை செய்யவென அம்மாவையும்
அழைத்தீர்களோ அப்பா!

இணுவில் தெற்கு.
இணுவில்

என்றும் உங்கள் நினைவுடன்
மகன், மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(58261)(4.3.6)


## சமாதான நீதிவானாக நியமனம்



யாழ்ப்பாணம், மார்ச் 31

சரசாலைதெற்கைச்சேர்ந்த கார்த்திகேசு கோபால கிருஷ்ணன்அகிலஇலங்கை சமாதான நீதிவானாக கடந்த 6 ஆம் திகதி சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியை ஏற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கை பனை அபிவிருத்திச் சபையில் முகாமையாளர் (விரிவாக்கம்) பதவி வகிக்கும் அவர், மக்களுடன் இணைந்து பல சமூக அபிவி ருத்தித் திட்டங்களை முன்னெடுத்து செயற்படுத்திய சமூக சேவை யாளராவார்.

சரசாலை தெற்கு முத்து மாரியம்மன் சனசமூக நிலைய நிறுவுநர்களுள் ஒருவராகவும் அந்த நிலையத்தின் முன்னாள் செயலாளரும் தென்மராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளராகவும் சரசாலை மத்தி சனசமூக நிலைய போசகராகவும் பதவி வகிப்பவர்.

தனது பணியூடாக சமூக பொரு ளாதார அபிவிருத்தித் திட்டங் களை கிராம ரீதியில் செயற்படுத்தி வருகின்றார். அத்துடன் பனை அபிவிருத்திச்சபை ஊடாக அவர் மக்களுக்கான பல சமூக வேலைத் திட்டங் களை முன்னெடுத்து வருகின்றார். (வ–17)


## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் ஆரம்பக் காலம் தொட்டு மிகுந்த
நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும் கடமைபுரிந்த
எமது அன்புக்குரிய பணியாளர்

**தம்பையா இராமலிங்கம்**

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சியடைந்ததுடன்
அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

V.M.K ஜூவல்லறி

(சி/17278)(4.7)



## விண்ணக வாழ்வின் ஏழாம் வருட நினைவஞ்சலி



அமரர் சுப்பிரமணியம்
**யோசேப் பூராசா**

(ஓய்வுபெற்ற அதிபர், முன்னாள்
செயலாளர், புனித அந்தோனியார்
ஆலயம், தெய்வக்குழந்தைகள் இல்ல
முன்னாள் இயக்குநர்)

பிறப்பு 20.06.1938 | இறப்பு 31.03.2008

"நீதி மான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன.
வேதனைகள் எதுவும் அவர்களைத் தீண்டா"
அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனிடம்
வேண்டுகின்றோம்.

2 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

குடும்பத்தினர்.



## 23 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் காசிப்பிள்ளை
**சபாரத்தினம்**



தோற்றம் 10.05.1926
மறைவு 15.03.1992

திதி: 31.03.2015

அன்போடும் பண்போடும் வாழ்ந்து
எம்மை பாசமாய் அரவணைத்த–பப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுன்னாகம் தெற்கு.
சுன்னாகம்.

உங்கள் நினைவில்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# ஆசிரிய உதவியாளர்களுக்கும் இம்முறை பண்டிகை முற்பணம்

வவுனியா, மார்ச் 31

தமிழ்–சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் விழா முற்பணம் இம்முறை ஆசிரிய உதவியாளர்களுக்கும் வழங்கப்படவுள்ளதுடன் வழங்கப்படும் விழா முற்பணத் தொகையும் பத்தாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அரச ஊழியர்களுக்கு தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விழா முற்பணமாக இதுவரை காலமும் 5000 ரூபா பணம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த முறை புதிய அரசு பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து அந்தத் தொகை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மற்றும் அரச ஊழியர்களான ஆசிரிய உதவியாளர்களுக்கு கடந்தகாலங்களில் அரச ஊழியர்களுக்கான பண்டிகைக் கால விழா முற்பணம் முதற் கொண்டு எதுவுமே வழங்கப்படவில்லை என்பதும் தற்போதுள்ள நல்லாட்சிக்கான மைத்திரி அரசின் மூலம் ஆசிரிய உதவியாளர்களுக்கும் பண்டிகைக்கால விழா முற்பணம் வழங்கப் படவுள்ளதாகவும் வழங்குவதற்கான உரிய பதிவுகள் இடம் பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் மேற்படி விழா முற்பணம் வழங்கப் படவுள்ளதாகக் கூறப்படும் அதே வேளை சில வலயக் கல்வி அலுவலகங்கள் அரச ஊழியர்களான ஆசிரிய உதவியாளர்களுக்கு பண்டிகைக் கால விழா முற்பணம் வழங்குவதற்குப் பின்னடித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

அரச ஊழியர்களுக்கு மைத்திரி அரசால் வழங்கப்பட்ட 5000 ரூபா சம்பள அதிகரிப்புக் கூட அரச ஊழியர்களான ஆசிரிய உதவியாளர்களுக்கு கிடைக்கா தமையை இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டி மேற்கொண்ட தொடர் முயற்சியின் பயனாகத்தான் அவர்களுக்கும் இம்முறை 5000 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ–426)

## தாக்குதல் சம்பவங்களில் மூவர் காயம்

தென்மராட்சி,மார்ச் 31

வெவ்வேறு இடங்களில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவங்களில் வயோதிபர் உட்பட மூவர் காய மடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு ஒருவர் யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளார். இந்தச் சம்பவங்கள் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளன.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த சதாசிவம் சிவநாதன் (வயது–60) செல்வராசா பிரதீஸ்(வயது–21)வரணி குடமியனைச் சேர்ந்த திருநாவுக்கரசு குகனேசன் (வயது–32) ஆகியோரே காய மடைந்தவர்களாவர். அவர்களில் குகனேசன் யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ–9)

## மஹிந்த தலைமையில் மேதின கொண்டாட்ட நிகழ்வுக்கு ஏற்பாடு

### ஐ. ம.சு. மு.பங்காளிக்கட்சிகள் தீர்மானம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த பங்காளிக்கட்சிகள் இணைந்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் புறம்பானதொரு மேதினக் கொண்டாட்டத்தை நடத்துவது தொடர்பில் தீர்மானித்துள்ளன. உழைக்கும் மக்களின் பொதுவான தொழிலாளர் தினம் என்ற பெயரில் இந்த மேதின ஊர்வலத்தையும் பேரணியையும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இம்முறை சுதந்திரக்கட்சி மேதின ஊர்வலமொன்றை நடத்தாது மேதினப் பேரணி ஒன்றை மாத்திரமே நடத் துவதற்குத் தீர்மானித்திருப்பதன் காரணமாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் புறம்பானதொரு மேதினத்தைக் கொண்டாடு வதற்கு அந்தத் தரப்பினர் தீர்மானித்துள்ளனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய சுதந் திர முன்னணி, பிவிதுரு ஹெல உறுமய மற்றும் புதிய இடதுசாரி முன்னணியும் இலங்கை சமசமாஜக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பல தொழிற் சங்கங்களும் இந்த மேதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. (வ–22)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
இளவேந்தி நிர்மலராஜ்
B.B.A PGDE Merit MEd.SLPS(2)
உப அதிபர்
கிளி/உருத்திரபுரம் ம.வி

கடந்த 26.03.2015 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமுதுமாணி பட்டம் பெற்ற திருமதி இளவேந்தி நிர்மலராஜ் அவர்களை மேலும்பலபட்டங்கள் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

(57052)(4.7) குடும்பத்தினர்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

பேரம்பலம் தனபாலசிங்கம்
(SLPS III, B.A, BEd)

எமது பாடசாலை அதிபர் பே.தனபாலசிங்கம் அவர்கள் 27.03.2015 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணிப் பட்டத்தைப் பெற்றதையிட்டு நாம் மனமகிழ்ச்சி அடைவதுடன் இவர் மேலும் பல பட்டங்களையும் பதவி உயர்வுகளையும் பெற்று எமது பாடசாலைக்குச் சிறப்பைச் சேர்க்கப் பிரார்த்தித்துப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

ஆசிரியர்கழகம்,
பாடசாலை அபிவிருத்திக்குழு,
பழையமாணவர் சங்கம்.



ஆதரவற்றோரை-அன்புடன் வரவேற்கும்

ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம்
வதிரி, கரவெட்டி



ஸ்தாபகர்
ஸ்ரீ பரமானந்தா சுவாமிகளின்
20 ஆவது ஆண்டு
குருபூசை பெருவிழா- 31.03.2015

புதிய முதியோர் இல்லத் திறப்பு விழா சிறப்பிதழ்- 05.04.2015

ஈழவள நாட்டின் வடமராட்சி மண்ணில் இயற்கை எழில் கொஞ்சும் வதிரி எனும் பதியில் சேற்றில் மலர்ந்த செந்தாமரை மலர் போல் மனிதருள் மாணிக்கமாக மிளிர்ந்தவர் சின்னையா திருக்கேதீஸ்வரர் என்ற இறைவன் நாமத்தை இயற்பெயராகக் கொண்ட சுவாமி ஸ்ரீ பரமானந்தாஅவரது அகத்தில் அன்பு, இரக்கம், கருணை, மனிதநேயம் தேனாக ஊற்றெடுக்க தான் பிறந்த மண்ணில் ஆதரவற்ற சிறுவர்கள், முதியவர்களை ஒன்றாக அரவணைத்துக் கூட்டுக் குடும்பமாக ஆன்மீக சிந்தனையோடு, தமிழ் கலாச்சார பண்பாட்டுடன் வாழ வேண்டுமென்ற அவரது எண்ணக்கருவில் 1969 ஆம் ஆண்டு சிறுகுடிசையாக ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம் ஸ்தாபிக்கப்பட்டது.

சுவாமிகள் தன்னகத்தே கொண்டவேகம், விவேகம், தூய்மை, உழைப்பு, விடா முயற்சியினால் பல தர்மசீலர்கள், கொடைவள்ளல்கள், அறிவாளிகளைத் தன்னகத்தே ஈர்த்து அவர்களின் கொடைகள், வழிகாட்டுதல்கள் மூலம் இன்று பல கட்டடங்களுடன் யாழ். மண்ணில் சேவையாற்றிவரும் ஒரு சிறுவர் முதியோர் இல்லமாகத் திகழ்கின்றது. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம். என்ற கூற்றுக்கு இணங்க இங்குள்ள சிறுவர்கள், முதியவர்கள், ஆன்மீக சிந்தையோடு வாழ வேண்டும். சமய வழிபாட்டு கலாச்சாரம் தங்கு தடையின்றி தழைத்திட வேண்டுமென இல்ல வளாகத்திலேயே பாலமுருகன் ஆலயத்தையும் சுவாமி கட்டியுள்ளார்.

இவ்வாலயத்தில் தீட்சை பெற்ற ஆலயப் பூசகரால் காலையும், மாலையும் ஆகம விதிப்படி பூசை நடைபெறுவதும் அறநெறிப்பாடசாலை நடைபெற்று வருவதும் இல்லத்திற்கு பெருமை சேர்ப்பதாக உள்ளது.

சுவாமி தன் உடல் தளர்ந்த நிலையுணர்ந்து தன்னோடு செயற்பட தர்மகர்த்தா சபை ஒன்றினைத் தயார்படுத்தி தன்னோடு செயற்படச் செய்தார். சுவாமிகளின் விருப்பு வெறுப்புக்களை நன்கறிந்த தர்மகர்த்தா சபை உறுப்பினர்களும் சுவாமியின் இசைவுக்கு ஏற்ப செயற்பட்டதால் மேன்மேலும் இவ்வில்லம் வளர்ச்சி பெற உறுதுணையாக அமைந்தது. சுவாமி தன் பொறுப்புக்களை தர்மகர்த்தா சபை உறுப்பினர்களிடம் கையளித்து மன நிறைவு பெற்றார்.

சுவாமி அவர்கள் 1995 ஆம் ஆண்டு சித்திரை மாதம் பத்தாம் திகதி முற்பகல் 1.00 மணியளவில் ஆயிலிய நட்சத்திர திதியில் சமாதி அடைந்தார். அவரது உடலை இல்ல வளாகத்தில் விதைத்து நினைவுத் தூபி அமைத்து காலை, மாலை வணக் கத்துக்குரிய தலமாகப் பேணப்பட்டு வருவது ஒரு வரலாற்றுச் சான்றாகும்.

தர்மகர்த்தா சபையினரின் நேர்மையான அளப்பெரும் சேவையாலும், தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல்களினாலும் பல தர்மசீலர்கள் கொடை வள்ளல்கள் தாமாக முன் வந்து அன்பளிப்புச் செய்ததால் இன்று வேறு வளாகத்தில் புதிய முதியோர் இல்லம் அமைக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற காரணகர்த்தாக்களான நன்கொடையாளர்களை நினைவு கொள்கின்றோம்.

இந்த இல்லத்தின் வளர்ச்சிக்கு மாணவச் செல்வங்கள் பல்வேறு சாதனைகள் படைக்க சேவையாற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்களின் பரிசுத்தமான செயற்பாடுகளே காரணமென்பதைக் கூறிக்கொள்வதில் பெருமையடைகின்றோம்.

ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம் நாற்பத்தாறாவது ஆண்டு நிறைவு பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு, ஸ்ரீ பரமானந்தா சுவாமிகளின் 20 ஆவது ஆண்டு குருபூசை நன்னாளில் அவரது திருவடிகளில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்குவதில் பெருமையடைகின்றோம்.

தலைவர்,
ஸ்ரீ பரமானந்த சிறுவர் முதியோர் இல்லம், வதிரி, கரவெட்டி.

தலைவர்,
மா.சிவசண்முகம்,

# வவுனியாவில் நுளம்பு ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுப்பு

வவுனியா, மார்ச் 31

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட சுகாதாரத் திணைக்கள சுகாதார வைத்திய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட நுளம்பு ஒழிப்பு வாரம் வவுனியா மாவட்டத்தில் நுளம்பு பெருகும் இடங்களை இனம்கண்டு பல நிறுவனங்களுடன் இணைந்து தேசிய நுளம்பு ஒழிப்பு வாரம் மேற்கொள்ளப்பட்டது. பொது சுகாதார பரிசோதரர்களின் தலைமையில் 35 பேருக்கு மேற்பட்டோர் குழுக்களாக இணைந்து ஒவ்வொரு வீடுகள், அலுவலகங்கள், நிறுவனங்கள் அனைத்தும் பார்வையிடப்பட்டதுடன் மக்களுக்கு ஆலோசனையும் வழங்கப்பட்டது.

இலங்கை செஞ்சிலுவைச்சங்க தொண்டர்கள் மற்றும் சுகாதார தொண்டர்கள் கிராம மட்ட டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுக் குழுக்கள், பொலிஸார், இராணுவத்தினர், பிரதேச சபையினர். நகர சபையினர் இணைந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் தொடர்ந்து வவுனியாநகரினைடெங்குநோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். இந் நடவடிக்கை முதலாம் திகதிவரை மேற் கொள்ளப்படுவதாகவும் இந் நடவடிக்கையில் பொதுமக்க ளையும் இணைந்து செயற்படு மாறும் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (வ)

# இனிமேலாவது சேதன உணவு உண்ணுங்கள்

## தென் மாகாண ஆளுநர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 31

எமது உதரம் என்பது ஒரு குப் பைத் தொட்டி. அதனால் எமது நாட்டு மக்கள் ஏராளமான நோய் களால் பாதிக்கப்படுகின்றனர். சேதன விவசாய முறை மூலமான உணவை உண்பதன் மூலமாக மருந்துக்குச் செலவு செய்யும் பணத்தைக் குறைக்கலாம். நோய்களிலிருந்தும் தப்பலாம் என்று தென்மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

ஆளுநர்களின் மாநாடு கொழும்பில் அண்மையில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

“நாம் அணியும் ஆடைகள் பற்றிக் கவலைப்படுகிறோம். ஆனால் உண்ணும் உணவைப் பற்றிப் பெரிதாகச் சிந்திப்பதில்லை. எமது உதரம் என்பது ஒரு குப்பைத் தொட்டி. அதனால் மக்கள் ஏராளமான நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். எனவே நாம் அதிலி ருந்து விடுபட வேண் டும்.

மத்திய அரசு, மாகாண சபை, விவசாய அமைச்சு என்பவை மூலமாக சேதன விவசாய முறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண் டும். இதன்மூலமாக நாம் மருந்துக்காகச் செலவழிக்கும் பணத் தைக் குறைக்கலாம். நகர மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படும் போது சேதன முறையில் தயாரிக் கப்படும் உணவுப் பொருள்களுக்குக் கேள்வி அதிகரிக்கும். இதன் மூலமாக சேதன முறையில் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகள்நன்மையடைவர். எமது நாட்டு மக்கள் ஏராளமான நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய நாடுகளிலும் அவ்வாறு தான். எனவே இனிமேலாவது சிந் தித்துச் செயற்படுங்கள். உங்கள் உடல் நிலைக்கு நீங்கள் தான் பொறுப்பு என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ–

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா இராமலிங்கம்



நுணாவில் மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா இராமலிங்கம் (29.03.2015) ஞாயிற்றுக்கிழமை கால மானார்.

அன்னார் இராசபூபதியின் அன்புக் கணவரும், சசிதரன், வதனி, கோகுலகுமார் ஆகியோரின் அன்பு தகப்பனாரும், பவதீஸ்வரன் அவர்களின் அன்பு மாமனாரும், அஸ்வின், ஆருயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.03.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிய ளவில் அவரின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பின் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மத்தி,
தாலையம்பதி வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
075 761 1095

(58250)(4.3.7)

## திருமதி
## பிலிப் இராசநாயகம் நிர்மலாதேவி

பிறப்பு
16.03.1958

இறப்பு
26.03.2015



கரம்பனைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலிப் இராசநாய கம் நிர்மலாதேவி 2015.03.26 வியாழக்கிழமையன்று கொழும்பில் கால மானார்.

அன்னார் பிலிப் இராசநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், அனோஜாவின் பாசமுள்ள தாயும், காலஞ்சென்ற மரியாம்பிள்ளை பிலோமினா தம்பதியினரின் மூத்த மகளும், அந்தோனிப்பிள்ளை எலிசபெத் தம்பதியினரின் மருமகளும், வனிதா (கொழும்பு), அன்ரன் ஜோர்ஜ் (அமெரிக்கா), யூலியா (கனடா), ரஜினி (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும், அன்ரன் குலேந்திரன், செல்வி (அமெரிக்கா), கிறிஸ்தோப்பர் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், கிறிஸ்ரினா, தனுஷா (அமெரிக்கா) ஆகியோரின் மாமியும், ரஞ்சிதம் (பிரான்ஸ்), ராசவதி (இளவாலை), ராணி (Swiss), பபி (கனடா), ஜெயா (இளவாலை), வசந்தா (பிரான்ஸ்), சாந்தன் (லண்டன்), காலஞ்சென்றவர்களான ஜோர்ஜ், அன்ரன், பொன்னு, ராஜ் மற்றும் அன்ரன் பாலசிங்கம் (இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிவான்), கிறகரி (இளவாலை), ஜெயந்தி (லண்டன்), றெனி (லண்டன்), ஜெனி (ஜேர்மனி), யோகராசா (பிரான்ஸ்), கனி (பிரான்ஸ்), நந்தினி (கனடா), சுகாசனி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (01.04.2015) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிலிப் இராசநாயகம் (கணவர்),
அனோஜா (மகள்)
Tel : 075 071 3093

(58266)(4.3.7)

# தவக்காலத்தின் இறுதி வாரத்தில்

கொழும்புத்துறை,மார்ச் 31

கிறிஸ்தவர்களால் அனுசரிக்கப்பட்டு வரும் தவக்காலத்தின் இறுதி வாரமாகிய புனித வார மற்றும் பாஸ்கா சிறப்பு வழி பாடுகள் எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை ஆலயங்களில் நடை பெறவுள்ளன.

யாழ். மரியன்னை பேரால யத்தில் 2ஆம் திகதி புனித வியாழன் வழி பாடு கள் மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி பாதம் கழுவும் சடங்கு, திருப் பலி என்பன இடம் பெறும். 3ஆம் திகதி புனித வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கும் சிலுவைப்பாதை தியானம் மாலை 4 மணிக்கும், இயேசுவின் மரணத்தை நினைவு கூரும் வழிபாடுகளும், திருச்சிலுவை முத்தி செய்தலும் ஆசந்தி ஊர்வலமும் நடை பெறும்.

எதிர்வரும் 4ஆம் திகதி புனித சனிக்கிழமை காலை 6.30 மணிக்கும் ஏழுவார்த்தை சிந்தனைகளும், இரவு 10.30 மணிக்கும் திருவிழிப்பு வழிபாடுகளும் இடம்பெறும். 5ஆம் திகதி உயிர்ப்பு ஞாயிறு தினத் தன்று காலை 5.45 மணிக்கு முதல் திருப்பலியும் 7.15 மணிக்கு இரண்டாவது திருப்பலியும் இடம் பெற்று உயிர்த்த இயேசுவின் பவனி யும் நடைபெறும்.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் புனித வியாழன் வழிபாடுகள் மாலை 5 மணிக் கும் புனித வெள்ளி காலை 6 மணிக்கு திருச்சிலுவைப் பாதையும். மாலை 5 மணிக்கு பெரிய வெள்ளி வழிபாடு களும் நடைபெறும். சனிக்கிழமை திருவிழிப்புத் திருப்பலி இரவு 11.30 மணிக்கும் இடம் பெறும். உயிர்ப்பு விழாத்திருப்பலி காலை 7 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு உயிர்த்த இயேசுவின் திருச் சொரூப பவனியும் நடை பெறும்.

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் புனித வியாழன் வழிபாடுகள் மாலை 5.30 மணிக்கும் புனித வெள்ளி காலை 6 மணிக்கு திருச் சிலுவைப் பாதையும் மாலை 5 மணிக்கு வழிபாடுகள் ஆரம்பமாகி கல்லறைத் திருவுடல் ஆசந்திப் பவனியும் இடம் பெறும். புனித சனிக்கிழமை திருவிழிப்பு ஆராதனைகள் இரவு 11.15 மணிக்கும் உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி காலை 6.15 மணிக்கும் இடம்பெற்று பவனியும் நடைபெறும்.

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் புனித வியாழன் வழிபாடுகள் 2 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு நடைபெறும். 3ஆம் திகதி புனித வெள்ளி காலை 6.30 மணிக்கும் திருச்சிலுவைப் பாதை மாலை 4 மணிக்கும் திருச்சிலுவை ஆரா தனைகளும் ஆசந்தி ஊர்வ லமும் நடைபெறும். புனித சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு திருவிழிப்பு ஆராதனைகளும் ஞாயிறு காலை 6.30 மணிக்கு உயிர்ப்பு விழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (ஒ–135)

# ‘நானிலம்’ மலருக்கு ஆக்கம் அனுப்பலாம்

பளை, மார்ச் 31

பளை றோ்மன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் 38 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ‘நானிலம்’ என்னும் மலர் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் பாடசாலை நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாடசாலை பற்றிய விவரங்கள் தெரிந்தவர்கள் பாடசாலை அதிபருடன் தொடர்புகொள் ளுமாறு அதிபர் வ.ஜீவரத்தினம் அறிவித்துள்ளார். விவரங்களை பாடசாலை அதிப ருக்கு முகவரியிட்டு தபாலில் அனுப்பி வைக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். (வ–9)



பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து மணியந்தோட்டம் கர்த்தர் ஆலயத்தை நோக்கி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பக்தி பூர்வமான திருச்சிலுவைப் பாதை யாத்திரையில் இடம்பெற்ற சிலுவை சுமக்கும் இயேசுவின் திருவுருவக் காட்சி. இந்த யாத்திரைப் பவனியில் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். (ஒ–135)

# நுளம்புக்கு விசிறும் மருந்து குடித்து குழந்தை ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி,மார்ச் 31

போத்தலுக்குள் இருந்த நுளம்புக்கு விசிறும் மருந்தை சோடா என்று நினைத்து குடித் தது மூன்று வயதுக் குழந்தை. இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு கைதடியில் இடம் பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த சத்தியரூபன் சஸ்மிதா (வயது–3) என்ற குழந்தை, சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. (வ–9)

# போதையில் அம்புலன்ஸ் செலுத்திய சாரதி

யாழ்ப்பாணம், மார்ச் 31

மது போதையில் அம்புலன்ஸை செலுத்திய குற்றச் சாட்டில் சாரதி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் ஹற்றன் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. கொட்டகலை மருத்துவமனை யில் இருந்து நோயாளிகளு டன் குறித்த அம்புலன்ஸ் சாரதி நாவலப்பிட்டி மாவட்ட மருத்துவமனைக்குச் சென்று கொண்டிருந்த போது இடையில் வழிமறிக்கப்பட்டு பொலிஸாரால் சோதனை செய்யப்பட்ட போது அவர் மதுபோதையில் இருந்தமை தெரியவந்துள்ளது.


அதனைத் தொடர்ந்து சாரதி கைது செய்யப்பட்டதுடன், அம்புலன்ஸில் இருந்த நோயாளர்கள் வேறொரு அம்புலன்ஸ் மூலமாக மாவட்ட மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

குறித்த சாரதியை ஹற்றன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர். (வ)

# புது அம்சங்களுடன்

## HTC Desire 816G

புத்தம் புது அம்சங்களுடன் HTC நிறுவனம் Desire 816G என்ற ஸ்மார்ட்போனை அறிமுகப்படுத்தியுள்ளது.
சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த ஸ்மார்ட்போனை HTC Eshop வலைத் தளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளத் தக்க வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
4ஜி செயற்படுத்தப்பட்ட Desire 816G ஸ்மார்ட்போன் இரண்டு வகைகளில் (ஒற்றை சிம் மற்றும் இரட்டை சிம்) சந்தைக்கு வருகிறது.



# இணைய உலாவிகளில் சில குறுக்கு விசைச் சாவிகள்

இன்றைய காலகட்டத்தில் இணையத் தளத்தைப் பயன்படுத்துவோர் மிகவும் சொற்பமே.
இவ்வாறிருக்கையில், இணையப் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் உலாவிகளில் மிக வேகமாகப் பணிபுரிவதற்கு குறுக்கு விசைச் சாவிகள் மிகவும் உதவிகரமாக இருக்கின்றன.
அவற்றுள் Alt + D d Cursor Öçª Address Bar இற்கு கொண்டு செல்வதற்கு .Ctrl + + or d எழுத்துருக்களின் அளவை பெருப்பித்தல் மற்றும் சிறிதாக்குதல். Ctrl + 0 d பெருப்பித்த அல்லது சிறிதாக்கிய எழுத்துருக்களை பழைய நிலைக்கு கொண்டு செல்ல;. Backspace or Alt + Left Arrow d முன்னைய இணைப் பக்கத்துக்கு செல்வதற்கு. F5d இணையப் பக்கம் ஒன்றை மீண்டும் தோற்றுவிப்பதற்கு .F11 d இணைப் பக்கத்தை முழுத்திரையில் பார்வையிடுவதற்கு .Ctrl + B d Bookmark. Ctrl + F d Find Box சைத்திறந்து Search செய்வதற்கு. என அதிகம் பயன்படுத்தப்படும் சில குறுக்கு விசைச் சாவிகள் உள்ளடங்கியுள்ளன.

# சம்சுங் ஸ்மார்ட் தொலைக்காட்சி பயன்படுத்துவோருக்கு எச்சரிக்கை

சம்சுங் நிறுவனம் தமது ஸ்மார்ட் தொலைக் காட்சியைப் பயன்படுத்துபவர்களுக்கு எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளது.
அதாவது குரல் வழி செயன்முறை மூலம் தொலைக் காட்சியைக் கட்டுப்படுத்துபவர்கள்



தொலைக்காட்சியின் முன் எந்த விதமான தனிப்பட்ட கருத்துக்களையும் பகிர வேண்டாம் என எச்சரித்துள்ளது.
இந்தத் தொலைக்காட்சிகள் குரல் களைப் பதிவு செய்யும் ஆற்றலைக் கொண்டிருப்பதனால் தனிப்பட்ட தகவல்கள் அவை ஒன்லைனில் இருக்கும் போது பகிரப்படலாம் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகாகவி பாரதி: வீழ்வோம் என நினைத்தாயோ..... சித்திரையில் ஆரம்பம்





/அணிக்கு 5 பேர். பதிலாளிகள் இருவர் மட்டும். / காலணி உட்பட சீரான உடை கட்டாயம்./
/ அனுமதிக் கட்டணம் 250/= / அணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட மட்டத்தில் ஆட்டங்கள்./

விண்ணப்பங்களையும் போட்டி விதிகளையும் உதயன் பத்திரிகையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.



நியூயோர்க்கில் கடந்த வாரம் நடைபெற்ற விசேட தினம்மொன்றில் வித்தியாசமான முறையில் இடம்பெற்ற அணிவகுப்பு

# ஜம்மு காஷ்மீரில் தொடர் மழை மக்கள் வெளியேற்றம்



ஸ்ரீநகர்,மார்ச் 31
ஜம்மு காஷ்மீரில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் அங்கிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். இதனால்மக்களின்இயல்புவாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.
பெரும்ஆறுகளில்வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால்ஸ்ரீநகருக்குவெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதனால் காஷ்மீரின் நிலைமை மோசமடைந்துள்ளது.
கடந்த வருடம் பெய்த கன மழைப் பாதிப்புக்களில் இருந்து இன்னமும் மீளாத அந்த மாநில மக்கள், மீண்டும் பெய்து வரும் கனமழையால் பெரிதும் பாதிப்புற்றுள்ளனர்.
குறித்த பிரதேசத்தின் பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளதால் வீதிகள் மூடப்பட்டுள்ளதுடன், நிலச்சரிவால் வீடுகளும் சேதமடைந்துள்ளன.
கரையோரப் பிரதேசங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். வடக்கு காஷ்மீரில் பல கிராமங்களிலும் வெள்ளம் புகுந்துள்ளது. தொடர்ந்தும் மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளதால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.
கனமழை எச்சரிக்கை காரணமாக மக்கள் தங்களது உடைமைகளுடன் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்து வருகின்றனர். அதேநேரத்தில் மக்கள் பீதியடையத் தேவையில்லை எனவும் காஷ்மீர் அரசு தெரிவித்துள்ளது. (14)



## தீவிரமடையும் பன்றிக் காய்ச்சல்

### மூன்று மாதங்களில் 34 ஆயிரம் பேர் பாதிப்பு

டில்லி,மார்ச் 31
இந்தியாவில் பன்றிக்காய்ச்சல் நோயினால் பாதிப்புற்று இதுவரை 2 ஆயிரத்து 35 பேர் உயிரிழந்துள்ளதுடன் 34 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்றிருப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.
கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாடுமுழுவதும் பன்றிக்காய்ச்சல் நோயினால் 2 ஆயிரத்து 35 பேர் உயிரிழந்துள்ளனர். ராஜஸ்தானில் 415 பேரும், குஜராத்தில் 428 பேரும், மஹாராஷ்டிரத்தில் 394 பேரும், மத்தியப் பிரதேசத்தில் 299 பேரும் பன்றிக்காய்ச்சலால் பாதிப்புற்று உயிரிழந்துள்ளனர். மேலும், கர்நாடகத்தில் 82 பேரும் , தெலுங்கானாவில் 75 பேரும், பஞ்சாப்பில் 53 பேரும், ஜம்மு–காஷ்மீரில் 18 பேரும், உத்தரகாண்டில் 12 பேரும், மேற்குவங்கத்தில் 25 பேரும் உத்தரப்பிரதேசத்தில் 38 பேரும், டெல்லியில் 12 பேரும், கேரளாவில் 14 பேரும் உயிரிழந்துள்ளனர்.
நாடளாவிய ரீதியில் பன்றிக்காய்ச்சல் தீவிரமடைந்து வருவதால் பாதிப்புற்றுள்ளவர்களுக்கான சிகிச்சைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன், பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (14)

## இந்தோனேஷியாவில் நிலச்சரிவு பாறை விழுந்து 10 பேர் சாவு

ஜகர்த்தா, மார்ச் 31
இந்தோனேஷியாவின் ஜாவாத் தீவில் ஏற்பட்ட கடும் நிலச்சரிவில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளார்கள்.
மலைகள் சூழ்ந்த மேற்கு ஜாவாப் பகுதியில் உள்ள சுகபுமி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் கடும் மழை பெய்துள்ளது. அதனால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பெரிய மாலைப்பாறையொன்று சரிந்து கிராமத்தின்மீது விழுந்துள்ளது. அதன் போது 11 வீடுகள் பாறைக்குள் சிக்கிக் கொண்டன. இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தவர்களை மீட்கத் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் விரைந்து வந்து 10 பேரின் உடல்களை மீட்டுள்ளனர். தொடர்ந்தும் அந்தப்பகுதியில் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



## இந்த வருடத்தின் மிஸ் இந்தியாவாக அதிதி ஆர்யா

டில்லி,மார்ச் 31
2015 ஆம் ஆண்டுக்கான இந்திய அழகியாக டில்லியைச் சேர்ந்த அதிதி ஆர்யா என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
நாடு முழுவதும் 13 நகரங்களில் நடைபெற்ற அழகிப் போட்டித் தெரிவுகளிலிருந்து 21 அழகிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
மும்பையில் அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான அரங்கில் பல்வேறு பிரிவுகளில் இறுதிப் போட்டிகள் நடந்தன. அந்தப் போட்டியில் 5 பேர் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகினர். அதன் பின்னர் முதல் மூன்று இடங்களுக்கான அழகிகள் தெரிவு செய்யப்பட்டனர். அதில் முதலாவது இடத்தை அதிதி ஆர்யாவும், இரண்டாவது இடத்தை




ஆப்ரிக்ரச்சேல்வாசும், மூன்றாம் இடத்தை வர்டிகாசிங்கும் கைப்பற்றிக் கொண்டுள்ளனர்.
உலக அழகிப்போட்டிக்கான தெரிவின் போது இந்தியா சார்பில் அதிதி ஆர்யா கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிதி ஆர்யா டில்லியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் ஆராய்ச்சிப் பகுப்பாளராகப் பணிபுரிகிறாள். அங்குபணியில் இருந்துகொண்டே அழகிப்போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (14)



## கனடாவில் விமான விபத்து 23 பேர் காயம்

ரொறண்ரோ,மார்ச் 31
கனடாவில் ஏர்–கனடா விமானமொன்று தரையிறங்கியபோது ஓடுதளத்தில் மோதி விபத்துக்குள்ளானது. அதன் போது 23 பேர் காயம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கனடாவின் ஹாலிபாக்ஸ் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் ரொறண்ரோவில் இருந்து வந்த ஏர்–கனடாவுக்குச் சொந்தமான ஏர்பஸ் 320–ரக விமானம் தரையிறங்கியபோது, விமானத்தின் கீழ்ப்பகுதி ஓடுதளத்தில் உரசியவாறு சென்றுள்ளது. கடும் பனிப்பொழிவுக்கு இடையே விமானம் பெரும் சத்தத்துடன் தரையிறங்கியுள்ளது.
அந்தவேளையில், விமானத்தில் 5 பணியாளர்கள் உட்பட 133 பயணிகள் இருந்துள்ளனர் விமானம் தரையில் மோதியதை அடுத்து உடனடியாக பயணிகள் வெளியேற்றப்பட்டனர். இதற்கிடையே ஓடுதளம் முழுவதும் பனி நிரம்பி இருந்துள்ளது. சம்பவத்தின் போது 23 பேர் காயமடைந்துள்ளார்கள்.
அந்தச் சம்பவத்தில் அதிர்ஷ்டவசமாகப்பயணிகள்எவருக்கும்உயிர்ச்சேதம் ஏற்படவில்லை என்றும்–பெரிய விபத்தொன்று தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் விமான நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (14)



## இஸ்ரேல் அதிபருடன் மோடி சந்திப்பு

சிங்கப்பூர்,மார்ச் 31
சிங்கப்பூருக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அங்கு இஸ்ரேல் நாட்டின் ஜனாதிபதி ரிவன் ரிவ்லினைச் சந்தித்து இருதரப்பு உறவுகளையும் எதிர்காலத்தில் சிறப்பாக முன்னெடுத்துச்செல்வது குறித்து ஆலோசனைகளை நடத்தியுள்ளார்.
குறுகிய நேர அந்தச் சந்திப்பின் போது– இஸ்ரேலுக்கு வருகைதருமாறு பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி ரிவ்லின் அழைப்பு விடுத்துள்ளார். அத்துடன் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற பிரதமர் நெதன்யாவுக்கு பிரதமர் மோடிவாழ்த்துதெரிவித்துள்ளார்.(14)

## தாடி வளர்த்தவருக்கு 6 வருடங்கள் சிறை

பீஜிங், மார்ச் 31
சீனாவில் குறிப்பிட்ட ஒரு சமூகத்தினர் அதிகம் வாழும் பகுதி ஒன்றில் தாடி வளர்த்த நபர் ஒருவருக்கு, 6 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்து, அந்த நாட்டு நீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பு வழங்கியுள்ளது.
கஷ்கர் என்ற பாலைவன சோலை நகரப்பகுதியில் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் அந்த நபர் தாடி வளர்த்து வந்ததுடன், அவரது மனைவியும் தனது முகத்தை மறைத்து பர்கா அணிந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படும் நிலையில், இருவரின் செயற்பாடுகளும், பிரச்சினைகளைத் தூண்டுவதாக இருப்பதால் இருவர் மீதும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதற்கமைவாக 38 வயதான அந்த நபருக்கு 6 வருடங்கள் சிறைத் தண்டனையும், அவரது மனைவிக்கு 2 வருடங்கள் சிறை தண்டனையும் விதித்து, நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
கடந்த ஒரு வருடமாக தாடி வளர்ப்பது குற்றம் என அந்த நாட்டு அரசு பல இடங்களில் விளம்பரம் செய்து வருகிறது. அதேபோல் 'அழகுத் திட்டம்' என்ற பரப்புரையின் மூலம், பெண்களை ஊக்கப்படுத்துவதுடன், முகத்தைமறைக்கும்ஆடையை உடுத்தவேண்டாம் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் அந்த இருவருக்கும் பல முறை எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதும், அவர்கள் அவற்றை உதாசீனம் செய்ததால் இருவர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (14)

# கென்யாவில் எபோலாவை தடுக்க நடவடிக்கை



கனாக்ரி, மார்ச் 31

கென்யாவில் எபோலா வைரஸ் பரவலைத் தடுக்க அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னதாக மேற்கு ஆபிரிக்காவின் பல நாடுகளில் எபோலா வைரஸ் பரவ ஆரம்பித்துள்ளது. இதுவரை எபோலா வைரஸால் பாதிக்கப்பட்டு மொத்தமாக 10 ஆயிரத்து 300 பேர் உயிரிழந்துள்ளனர். அதிகமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றான கென்யாவில் குறிப்பிட்ட மாவட்டங்களில் அவசர நிலையை பிரகடனம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

அந்த அவசர நிலையானது 45 நாள்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் குறிப்பிட்ட நாள்களில் மக்கள் தங்கள் வீடுகளிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதன் மூலம் எபோலா வைரஸ் பரவலைத் தடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று மருத்துவமனை ஊழியர்களுக்கு நோய்த் தொற்று ஏற்பட்டால் அந்தக் குறிப்பிட்ட மருத்துவமனையையே முற்றுமுழுதாக மூடி விடவும் அந்த நாட்டு ஜனாதிபதி அல்பா காண்டா உத்தரவிட்டுள்ளார். (14)

# ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அரபு நாடுகள் கூட்டுப்படை

கெய்ரோ, மார்ச் 31

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக கூட்டுப்படை ஒன்றை அமைப்பதற்கு அரபு நாடுகளின் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர் என்று எகிப்து நாட்டின் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எகிப்தில் சினாய் தீபகற்பப் பகுதியில் அமைந்துள்ள ஷாம் எல் .ஷேக் நகரில் அரபு லீக் உச்சி மாநாடு கடந்த 2 நாள்களாக நடைபெற்றது. அந்த மாநாட்டில் பங்குபற்றிய எகிப்து நாட்டின் ஜனாதிபதி அப்துல் பட்டா அல் சிசி அங்கு உரையாற்றும்போது, அரபு நாடுகளின் பாதுகாப்புக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் சவாலாக விளங்குவதாகத் தெரிவித்துள்ளார்.



பாதுகாப்பு அச்சுறுத்தல்களை முறியடிக்கும் விதத்தில் கூட்டுப்படை ஒன்றை அமைப்பதற்கு அரபு நாடுகளின் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். அந்தக் கூட்டுப்படையின் வடிவமைப்பு, செயல்பாடுகள் குறித்து அரபு நாடுகளின் உயர் அதிகாரிகள் அடுத்த மாதம் கூடி விவாதிப்பார்கள் எனவும், போர் விமானங்கள், போர்க்கப்பல்கள் இணைந்த அந்தக் கூட்டுப்படையில் ஏறத்தாழ 40 ஆயிரம் வீரர்கள் இடம் பெறுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (14)



சீனாவில் அண்மையில் இடம்பெற்ற பெஷன் சோ நிகழ்வில் வித்தியாசமான அலங்கரிப்பில் போட்டியாளர்கள் பங்குபற்றும் காட்சி.

# 301 கிலோ சாப்பாட்டு ராமன்



பக்தாத்,மார்ச் 31

ஈராக்கைச் சேர்ந்த நபரொருவரின் எடை 301 கிலோவையும் தாண்டி அதிகரித்து கொண்டே செல்வது அந்த நாட்டு மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஈராக்கைச் சேர்ந்த அலி சதாம் என்பவர் 301 கிலோ நிறையுடன் இருப்பதுடன், அவர் காலை உணவாக 24 முட்டைகள், மதிய உணவாக 2 முழுக் கோழிகள் மற்றும் 12 சப்பாத்திகள், இரவு உணவுக்கு ஒரு முழு ஆடு, 2 லீற்றர் பால் மற்றும் 15 அரேபிய ரொட்டிகளையும் சாப்பிட்டு வருகின்றார்.

இந்த நிலையில் அலியால் உணவைக் கட்டுப்படுத்த முடியாததால், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் தூக்கக் குறைபாடுகளால் அவதிக்குள்ளாகியுள்ளார். மேலும் அவ ரது உடல் எடை நாளுக்கு நாள் அதி கரித்துக்கொண்டே செல்வதால் அவசர சிகிச்சையும் மேற்கொண் டுள்ளனர்.

அலியைப் பரிசோதனை செய்த மருத்துவர்கள், அவரது உடலின் ஒவ்வொரு உறுப்பைச் சுற்றியும் அதிக அளவில் கொழுப்பு இருந்ததைக் கண்டுபிடித்துள்ளனர். (14)

# நியூகினியாவில் நிலநடுக்கம்

பப்புவா நியூகினியாத் தீவில் நேற்றுக் காலையில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. அந்த நிலநடுக்கம் 7.7 என்ற ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது.

அந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்டுள்ள சேத விபரம் குறித்த தகவல்கள் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. எனினும் அங்கு சுனாமி ஏற்படும் அபாயம் உள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் அந்த நிலநடுக்கம் பப்புவா நியூகினியா தீவுப்பகுதியில் நியூ பிரிட்டனர் தீவு அருகே சுமார் 54 கி.மீ தொலைவில் ஏற்பட்டுள்ளதாகவும், அதன் காரணமாக சுனாமி ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாகவும் பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையமும் தெரிவித்துள்ளது. (14)

# சீனாவுக்குப் பறக்கும் சூரியகல விமானம்




மாண்டலே, மார்ச் 31

மியன்மார் நாட்டில் உள்ள மாண்டலே நகரில் தரையிறங்கியுள்ள சூரியகல விமானம், 5 ஆவது கட்டமாக அங்கிருந்து நேற்றைய தினம் சீனாவுக்குப் புறப்பட்டுள்ளது.

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் நிலவிய மோசமான வானிலை காரணமாக கடந்த ஒரு வார காலமாக அந்த விமானம் மாண்டலே நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது அந்தப் பகுதியில் வானிலை சீரடைந்துள்ளதால் நேற்று அதிகாலை அந்த விமானம் சீனாவில் உள்ள சாங்கிங் பகுதியை நோக்கித் தனது சவாலான பயணத்தை ஆரம்பித்துள்ளது.

மாண்டலே நகரிலிருந்து ஆயிரத்து 375 கி.மீ தூரத்தில் உள்ள சாங்கிங் பகுதியை 18 மணி நேரத்தில் அந்த விமானம் சென்றடையும் என வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சூரிய சக்தியால் இயங்கும் உலகின் ஒரே விமானமான சோலர் இம்பல்ஸ்-2 என்ற அந்த விமானம், எரிபொருள் எதனையும் பயன்படுத்தாமல் உலகைச் சுற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

# தீவிரவாதத்துக்கு எதிரான போரில் 80 ஆயிரம் பாகிஸ்தானியர்கள் சாவு

இஸ்லாமாபாத், மார்ச் 31

கடந்த பத்து வருடங்களாக அமெரிக்காவின் தலைமையில் பாகிஸ்தானில் தீவிரவாதத்துக்கு எதிராக போர் நடைபெற்று வருகிறது. அந்தப் போரில் இதுவரை 80 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக புதிய ஆய்வு அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதத்தை ஒழிப்பதற்காக அமெரிக்கா–பாகிஸ்தான் நாடுகள் கூட்டு நடவடிக்கை எடுத்து வருகின்றன. அத்துடன் பாகிஸ்தானில் மறைந்திருக்கும் தீவிரவாதிகளை அமெரிக்க இராணுவம் மற்றும் [illegible]ளில்லா விமானங்கள் சுட்டு [illegible]த்தி வருகின்றன. தீவிரவாதத்துக்கு எதிரான அந்தப் போரில் இதுவரை 80 ஆயிரத்துக்கும் அதிகமான பாகிஸ்தானியர்கள் கொல்லப்பட்டிருப்பதாக புதிய ஆய்வு அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுதப் போருக்கு எதிரான நோபல் பரிசு பெற்ற மருத்துவர்கள் சங்கம் மற்றும் உலக சமூக நலனுக்கான மருத்துவர்கள் சங்கம் ஆகியவை இணைந்து அந்த ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளன.

அந்த ஆய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மட்டும் 48 ஆயிரத்து 504 பொதுமக்களும், 45 ஊடகவியலாளர்களும், பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 5ஆயிரத்து, 498 பேரும் கொல்லப்பட்டிருப்பதுடன், மொத்தமாக 81ஆயிரத்து 325 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் பாகிஸ்தான், ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளையும் சேர்த்தால் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் 2 மில்லியனுக்கு அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (14)

## குறிகாட்டுவானில் அவலப்படும்

# நெடுந்தீவுப் பயணிகள்

வந்தியத்தேவர்

குறிகாட்டுவான் துறைமுகத்தில் நெடுந்தீவுக்குச் செல்லும் பயணிகள் படகில் ஏறுவதற்குச் செல்வதற்கென தனியான ஒரு வழியைப் படையினர் அமைத்துள்ளனர். பஸ்ஸில் இருந்து இறங்கும் பயணிகள் துறை முகத்தின் அருகே அமைந்துள்ள மண்டபத்தில் தங்கியிருந்த பின்னரே, படகில் ஏறச் செல்ல முடியும். இந்த மண்டபத்தில் இரண்டு வழிகள் உள்ளன. ஒரு வழியால் நயினாதீவுக்குச் செல்பவர்களும், அடுத்த வழியால் நெடுந்தீவுக்குச் செல்பவர்களும் சென்று படகில் ஏறவேண்டும். நயினாதீவுக்குச் செல்வதற்கென ஒதுக்கப்பட்ட வாயிலில் இரும்புத் தடுப்புக்கள் எதுவும் கிடையா. மக்கள் தமது பொருள்களுடன் சுலபமாகச் செல்ல முடியும். நெடுந்தீவு மக்களுக்கான வாயிலில் இரும்புத் தடுப்புக்கள் போடப்பட்டு ஒருவர் செல்லக் கூடியதாக மட்டுமே இடைவெளி உள்ளது. நெடுந்தீவுக்குச் செல்பவர்கள் தமக்குத் தேவையான பொருள்களில் கணிசமான அளவை யாழ்ப்பாணத்திலிருந்தே கொண்டு செல்கிறார்கள். ஆனால் படகில் செல்வதற்கென அமைக்கப்பட்டுள்ள பாதையால் பொருள்களை எடுத்துக்கொண்டு செல்வதில் மக்கள் அதிக கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர். நெடுந்தீவு மக்களுக்கு குறிகாட்டுவான் துறைமுகப் பகுதியில் கஷ்டங்களையும் சிரமங்களையும் ஏற்படுத்துவதில் அங்குள்ள படையினர் கண்ணும் கருத்துமாகவே உள்ளதாகப் பொதுமக்கள் எரிச்சலுடன் தெரிவிக்கின்றனர். மிகவும் ஒடுக்கமான பாதை வழியாக பொருள்களை எடுத்துக்கொண்டு மிகுந்த சிரமத்துடன் நெளிந்து வளைந்து செல்ல வேண்டிய நிலையைப் படையினர் ஏற்படுத்துகின்றனர்.

நெடுந்தீவில் இருந்து வரும் பயணிகள் படகுகளுக்கு வழிவிட்டுக் கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதால் படகுகளைத் துறைமுகத்தில் அணைப்பதற்கு சிரமப்படுவது வழமையாகும்.

இந்தத் தடுப்பு தேவையில்லாத வகையில் அமைக்கப்பட்டுள்ளதாக மக்கள் கருதுகின்றனர். இதை ஏதற்காக அமைத்தார்கள்? இதனால் படையினருக்கு என்ன இலாபம்? என்பதும் ஒருவருக்கும் புரியாமல் உள்ளது.

படகில் ஏறுவதற்காகச் செல்லும் பயணிகளை இன்ன நேரத்தில் தான் படகில் ஏற முடியும் எனக் கூறி, திருப்பி விடுவதும் உண்டு. இந்தக் கட்டளைகள் வடதாரகைக் குரியதாகும். மக்கள் தமது வசதிப்படி வடதாரகையில் ஏற அனுமதிக்கப்படுவதில்லை. அந்தப் படகில் மக்கள் சுதந்திரமாக ஏறித் தமது பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலைதான் காணப்படுகின்றது.


நெடுந்தீவுக்கான போக்குவரத்துச் சேவை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ளது. ஆனால் படகில் மக்கள் ஏறுவதும் பொருள்களைக் கொண்டு செல்வதும் தொடர்ந்தும் கடற்படை வசமே உள்ளது. பொலிஸார் ஒருவர் இந்தப் படகுச் சேவையைப் பார்வையிடுவதற்கு வந்து செல்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளபோதும், அவர் இதில் பெரிதாக அக்கறை காண்பிப்பதில்லை. தென்பகுதியில் இருந்து வருபவர்களுக்கு நெடுந்தீவில் பார்வையிடக் கூடிய இடங்களைக் கூட்டிச் சென்று காட்டுவதற்கான வாகன ஏற்பாடுகளைக் கவனிக்கும் வேலையில்தான் அவர் ஈடுபடுவதாகவும் அரசல் புரசலாக கதைகள் அடிபடுகின்றன. மக்கள் சுதந்திரமாகத் தமது இஷ்டம் போல் பயணித்துக் கொண்ட நிலைமாறி, படையினரின் கெடுபிடிகளுக்கும் விருப்பத்துக்கும் இணங்கியே தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. கடற்படையினரை, மக்கள் போக்குவரத்துக்கான துறைமுகங்களில் நிறுத்தி வைத்துத் தேவையில்லாத தலையீடுகளை ஏற்படுத்துவதாக மக்கள் கருதுகின்றனர்.

கடந்த காலங்களில் துறைமுகத்தில் படையினர் நிலை கொண்டதும் இல்லை. படகுச் சேவைகளில் தடங்கல்கள் கஷ்டங்கள் ஏற்பட்டதுமில்லை. மக்களின் ஒரு நிம்மதியான பயணத்தைக் குலைப்பதற்காகவே நிறுத்தப்பட்டவர்கள் போலவே, அவர்களின் நடவடிக்கைகள் அமைகின்றன. துறைமுகங்களில் இருந்து படையினரை நகர்த்துமாறு மக்கள் நெடுநாளாகவே வற்புறுத்தி வருகின்றனர்.

மாகாண சபையும் , துறைமுகங்களில் உள்ள படையினரால் மக்கள் படும் அவலங்களை அறியாமலிருக்க முடியாது. படையினரைத் துறைமுகங்களில் இருந்து நகர்த்துவது தங்களால் முடியாத ஒன்று என மாகாண சபை கருதுவதாகத் தெரிகின்றது. பயணிகள் போக்குவரத்தில் கடற்படையினரின் தலையீடுகளை முழுமையாக நிறுத்தவும், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்பாடுகள் உறுதிப்படுத்தக் கூடியதாகவும் கடந்த காலங்களைப் போல் மக்கள் சுதந்திரமான பயணத்தை முன்னெடுக்கக் கூடியதுமான வழி வகைகளையாவது ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

பஸ்ஸில் இருந்து இறங்கும் பயணிகள் துறைமுகத்தின் அருகே அமைந்துள்ள மண்டபத்தில் தங்கியிருந்த பின்னரே, படகில் ஏறச் செல்ல முடியும். இந்த மண்டபத்தில் இரண்டு வழிகள் உள்ளன. ஒரு வழியால் நயினாதீவுக்குச் செல்பவர்களும், அடுத்த வழியால் நெடுந்தீவுக்குச் செல்பவர்களும் சென்று படகில் ஏறவேண்டும். நயினாதீவுக்குச் செல்வதற்கென ஒதுக்கப்பட்ட வாயிலில் இரும்புத் தடுப்புக்கள் எதுவும் கிடையா.







## யாழ்ப்பாணத்தில் டிஜிட்டல் வங்கி முறை அறிமுகம் செய்துள்ளது கொமர்ஷல் வங்கி

யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள வாடிக்கையாளர்கள் மத்தியில் இணைய வங்கி சேவை மற்றும் நடமாடும் (கையடக்க் தொலைபேசிகள் மூலமான) வங்கி சேவை போன்ற டிஜிட்டல் வங்கி முறையை அறிமுகம் செய்யும் பணிகளை அண்மையில் கொமர்ஷல் வங்கி மிகவும் சுறுசுறுப்பாக மேற்கொண்டது.


யாழ்ப்பாணத்தில் அண்மையில் வங்கி மேற்கொண்ட இந்த நடவடிக்கையில் சுமார் 100 பேர் பங்கேற்றனர். வங்கியின் இணைய மற்றும் நடமாடும் சேவைகள் பற்றி இவர்களுக்கு விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் துரிதமாக அதிகரித்து வரும் வர்த்தக நடவடிக்கைகள் அதி நவீன தொழில்நுட்பம் மற்றும் சேவைகள் என்பனவற்றின் தேவையை நாடி நிற்கின்றன என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் வங்கிச் சேவைப் பிரதானி பிரதீப் பந்துவன்ஸ. கொமர்ஷல் வங்கி அதன் முன்னேற்றகரமான டிஜிட்டல் வங்கிச் சேவைகள் மூலமாக இந்தத் தேவையை பூர்த்தி செய்யும் நிலையில் இருக்கின்றமை மகிழ்ச்சி அளிக்கின்றது. நடமாடும் மற்றும் இணைய வங்கி சேவைகள் தொடர்பாக அளிக்கப்பட்ட விளக்கங்கள் வாடிக்கையாளர்களை பெரும் மகிழ்ச்சிக்கு ஆளாக்கியிருக்கின்றது. இது சம்பந்தமான பல கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. வாடிக்கையாளர்கள் இந்த சேவைகள் குறித்து தெரிந்து கொண்டமை அவர்கள் மத்தியில் திருப்பதியை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

கொமர்ஷல் வங்கியின் இணைய வங்கிப் சேவையின் கூட்டாண்மை பிரிவுக்கான சேவைகள் கூட்டாண்மை வாடிக்கையாளர்கள் நன்மை கருதி அதிக பாதுகாப்பு மேம்பாட்டுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. கூட்டாண்மை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி இரண்டு அடுக்கு பிரவேச முறையிலான புதிய பாதுகாப்பு முறையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு வாடிக்கையாளர் தனக்கு மிகவும் பிடித்த ஒரு ஒளிப்படத்தை பாதுகாப்பு அறிமுகப் ஒளிப்படமாக இந்த இணையத்தளத்தில் சேர்த்துக் கொள்ளலாம். வாடிக்கையாளர் இதில் பிரவேசிக்கின்ற போது அந்த ஒளிப்படம் காட்சிப்படுத்தப்படும்.கடவுச் சொல்லை பாவித்து பிரவேசிக்கும் முன் தாங்கள் பிரவேசிக்கும் தளம் சரியானதா என்பதை உறுதி செய்து கொள்ள இந்த முறை உதவும். மேலும் கணினித் திரையில் ஒரு கீபோர்ட்டும் வழங்கப்படும். வாடிக்கையாளர்கள் விருப்பமாயின் இந்த கீபோர்ட்டை பாவிப்பதன் மூலம் தமது கடவுச் சொற்கள் திருடப்படுவதைத் தடுக்கலாம்.

ஒரு நிறுவனத்துக்காக வைப்பிலிடப்பட்ட காசோலையை பட உருவில் இதன் மூலம் பார்வையிடலாம். தமது நிறுவனத்துக்காக வைப்பிலிடப்படும் ஒரு காசோலையை பட வடிவில் இணையத் தளம் ஊடாக பார்வையிடும் வசதியை இலங்கையில் முதன் முதலாக அறிமுகம் செய்துள்ள வங்கி என்ற பெருமையும் இதன் மூலம் கொமர்ஷல் வங்கிக்கு கிடைத்துள்ளது. வழமையான கொடுப்பனவுகளை பதிவு செய்து கொள்ளல் மற்றும் அந்த கொடுப்பனவுகளை உரிய காலத்தில் நிறைவேற்றல் என்பன போன்ற சேவைகளை வருடம் 365 நாள்களும் செய்து கொள்ளும் வசதி இதன் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஏற்றுமதி இறக்குமதி தேவைகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் அவற்றை நியாயப் படுத்தும் ஆவணங்கள் என்பனவற்றையும் இனிமேல் இணையத் தளம் ஊடாகவே பதிவேற்றும் வசதி இந்தப் புதிய சேவை ஊடாக வழங்கப்பட்டுள்ளது. கொமர்ஷல் வங்கி இந்த சேவை ஊடாக கூட்டாண்மை நிர்வாக வசதி ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் கம்பனிகள் தமது தேவைக்கு ஏற்றவாறு உள்ளக பாவனை அதிகாரங்களை வங்கியோடு தொடர்பு கொள்ளாமலேயே முகாமைத்துவம் செய்து கொள்ளவும் வழியமைக்கப்பட்டுள்ளது. நிதி பரிமாற்றங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு மட்டத்திலான அங்கீகார முறை கூட்டாண்மை வாடிக்கையாளர்கள் நவீன தொழில்நுட்பத்தைப் பாவிக்கின்ற போது ஆகக் கூடுதலாக வசதிகளை வழங்குகின்றது. (த)

# வாசகர் திருமுகம்



## நாடகத்தை ரசித்தவர்களுக்கு தொலைபேசியால் இடையூறு

ஒருத்தியை இழுத்து வந்து இயேசு பிரான் முன்னிலையில் நிறுத்துகின்றனர். இழுத்து வந்தவர்களால், அவள் மீதான குற்றச்சாட்டுக்கள் அடுக்கடுக்காய் முன் வைக்கப்படுகின்றன. குற்றச் சாட்டின் தாக்கத்தை மக்களின் மனதில் ஆழமாகப்பதிப்பதற்காக அந்த வேளையில் உரிய பின்னணி வாத்திய இசை, இசைக்கப்படுகின்றது.

'இவள் ஒரு விபசாரி...... இவளுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும்' என்றவாறாக, அவளை இழுத்து வந்தவர்கள் கூக்குரல் இடுகின்றனர். இயேசு பிரானின் வாயிலிருந்து எத்தகைய வார்த்தைகள் வரப்போகின்றன என்று எதிர்பார்க்கும் வேளையில், அனைத்து வாத்தியங்களும் அடங்கி நிசப்தம் நிலவுகின்றது. அதற்கான தீர்ப்பை ஆண்டவன் எவ்வாறு வழங்கப் போகின்றார்? அவருடைய தீர்க்கமான குரல் எவ்வாறு இருக்கப் போகின்றது? போன்ற எதிர்பார்ப்புகள் அந்தநிசப்தத்தில்மேலும்மேலோங்குகின்றது.

இவ்வேளையில்...... 'லண்டன் என்றால் நல்லது....எதுக்கும் நாங்களும் ஒருக்கால் நேரிலே பார்க்க வேணும் கதைக்க வேணும்.... விசாரிக்காமல் செய்ய ஏலுமே? என்று ஒரு அன்ரியின் குரல் அந்த நிசப்தத்தைக் குலைத்துக்கொண்டு வெளிக்கிளம்புகின்றது. அவருடைய கதிரையைச் சூழ இரண்டு அல்லது மூன்று மீற்றர் சுற்றளவிற்கு அவவின் தொலைபேசி உரையாடல் குரல் ஒலித்தது. இது அவவையே திரும்பிப் பார்க்க வைத்தது. இவ்வாறாக அந்த சுற்று வட்டத்துள் குறைந்தது 15–20 பேர் வரை அந்நாடக ஓட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, இத்தகைய இடைஞ்சலுள் சிக்கிக்கொண்டனர் என்று கூறலாம். அவருடைய தொலைபேசி உரையாடல் ஒரு 10 நிமிடம் வரை தொடர்ந்தது.

பணம் கொடுத்து நுழைவுச் சீட்டு எடுத்து திருமறைக் கலாமன்றத்தினரின் 'அன்பில் மலர்ந்த அமர காவியம்' தவக்கால ஆற்றுகையை, பேரப்பிள்ளைகளுடன் பார்த்து அனுபவம் பெற வந்த எமக்கு, அந்தத் தொலைபேசி உரையாடல் ஓர் அநாகரிகச் செயற்பாடாகத் தெரிந்தது. 'வெளியிலே போய்க் கதையுங்கள்' என்று அதிலிருந்த ஒருவர் கூறியிருந்தால் அது மேலும் அநாகரிகமாக இருந்திருக்கும். சரி, நாமாக வேறு இடம் மாறுவோமென்றாலும், நாடக ஓட்ட ஒழுங்கமைப்பில் அதுவும் ஏனையோருக்கு இடையூறாக அமையலாம் என்ற எண்ணத்தில் வாளாவிருந்து, தொல்லை பொறுத்தோம்.

ஆள்களோடு ஆள்களாக இருந்து – சமூகமாக இத்தகைய ஆற்றுகைகளைப் பார்வையிடுவதன் மூலம் சமூக இசைவாக்கம் கட்டியெழுப்பப்பட்டு வருவது ஒன்றும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நாடகத்தின் சமூகமயமாக்கும் பண்பே அதிற்றான் தங்கியுள்ளது. ஒன்றாக இணைந்து நடிப்பது, ஒன்றாக இருந்து இரசிப்பது, ஏற்படும் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது என்றவாறாக நாடகத்தின் சமூகப் பண்புகள் விரிவானவையாகும்.

தற்காலத்தில் தமக்கு மிகவும் பிடித்த, சமூக முன்னேற்றத்திற்கு ஒவ்வாத கலாசார பிறழ்வுகளைத் தூண்டுகின்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில், தனியன்களாக, இளஞ்சமுதாயம் மூழ்கிப் போகின்ற இந்நாளில் ஓரளவேனும் நம்பிக்கைக் கீற்றினை இத்தகைய ஆற்றுகைகளே அளிக்கின்றன.

அங்கு வந்தும் நிம்மதியாக ஒரு நாடகத்தைப் பார்த்து இலயிக்க முடியாதிருப்பது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. எனவே, தொடர்ந்தும் ஓரிருநாள்கள் இடம்பெறப்போகின்ற திருமறைக் கலாமன்றத்தின் ஆற்றுகை தொடங்குமுன், இரசிகப் பெருமக்களுக்கு, 'தொலைபேசியில் உரக்கப்பேசி இடையூறு விளைவிக்க வேண்டாம்.' என்கின்ற ஒரு அறிவித்தலை ஏற்பாட்டாளர்கள் மேற்கொள்வது நல்லது என எண்ணுகின்றேன்.

***செ.செல்வராஜா,அரியாலை.***

கேலிச் சித்திரம்




# படையினரால்தான் வடக்கில் பிரச்சினை

வடக்கில் படையினரால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் யாவும் சிவில் சமூகத்தால் மேற்கொள்ளப்படவேண்டும். இராணுவத்தின் தலையீடே வடக்கில் இருக்கும் பிரச்சினை.

இவ்வாறு வடக்கில் உள்ள உண்மை நிலையை இப்போதாவது புரிந்துகொண்டிருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. நான்கு நாள் பயணமாக வடக்குக்கு வருகைதந்த அவர், பல இடங்களிலும் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டார். நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு சென்றிருந்த பிரதமர் அங்கு இடம்பெற்ற கலந்துரை யாடலிலேயே இவ்வாறு கூறியிருக்கிறார். இராணுவத்தினரே வடக்கில் இடம்பெறும் பல பிரச்சினைகளுக்கு மூலகாரணமாக உள்ளார்கள் என்பதை ரணில் தனது பயணத்தின்போது உணர்ந்துகொண்டார் போலும். தற்போது வடக்கில் இருக்கும் பிரச்சினை என்னவென்றால், படையினரால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் யாவும் சிவில் சமூகத்தினரால் மேற்கொள்ளப்படவேண்டும். எனவே, சிவில் அமைப்புக்களை பலப்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது என்று ரணில் கிளிநொச்சியில் கூறியிருக்கிறார்.

வடக்கில் இடம்பெறும் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு படையினரே காரணம் என்பதை பிரதமர் ரணில் இப்போதாவது புரிந்து கொண்டமை பாராட்டப்படவேண்டியது. மீள்குடியேற்றம், காணி அபகரிப்பு உட்பட வடக்கில் மக்களின் பல்வேறு விடயங்களில் தொடர்ச்சியாக இராணுவத் தலையீடே இருந்து வந்தது. மஹிந்த அரசின் காலத்தில் வடக்கில் இராணுவ நிர்வாகமே செயற்படுத்தப்பட்டது. சிவில் அதிகாரிகள் இருந்த போதும், அவர்களிடம் அதிகாராங்கள் வழங் கப்படவில்லை. வடக்கு மக்களின் சிவில் நிர்வாக விடயங்கள் உட்பட அனைத்து விடயங்களையும் தீர்மானிப்பவர்களாகவும், நடைமுறைப்படுத்துபவர்களாகவும் இராணுவத்தினரே இருந்துவந்தனர். யாழ்.மாவட்ட படைத் தளபதியே அரச அதிகாரிகளையும் வழிநடத்தும் ஒருவராக இருந்தமையால், இங்கு முழுக்க முழுக்க இராணுவ நிர்வாகமே செயற்பாட்டில் இருந்தது.

மக்களால் முன்னெடுக்கப்படும் ஜனநாயக ரீதியான செயற்பாடுகள் உட்பட அனைத்துக்கும் இராணுவத்தினரால் முட்டுக்கட்டைகள் ஏற்படுத்தப்பட்டுவந்தன. மக்களின் குரல்களுக்கு மதிப்பளிக்கப்படவில்லை. இராணுவ அதிகாரமே மேலோங்கியிருந்தது. இதனால் மக்களால் சுதந்திரமாக செயற்படமுடியாத நிலை காணப்பட்டது. படையினரால் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்மையால், மக்கள் சுதந்திரமாக கருத்து வெளியிடுவதற்கு அஞ்சி வாழ்ந்தார்கள்.

ஆயினும், புதிய அரசு பதவி ஏற்ற பின்னர் இந்தச் செயற்பாட்டில் சற்றுத் தளர்வான நிலைமை காணப்படுகிறது. ஆனாலும் இராணுவ நெருக்கடி இன்னும் முற்றுமுழுதாக வடக்கிலிருந்து நீங்கிவிடவில்லை. படைகளுக்கான காணி சுவீகரிகரிப்பு நடவடிக்கைகள் அமைதியான முறையில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை, புதிய அரசு உறுதி அளித்தவாறு மீள்குடியமர்வு நடவடிக்கைகளும் நடைபெறவில்லை. மீள்குடியமர்வின்போதும் இராணுவத்தின் செயற்பாட்டுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட வலி.வடக்கின் வயாவிளான் மற்றும் வளலாய் பகுதிகளில் பொதுமக்களின் காணிகளை சிறிய அளவில் விடுவித்துவிட்டு, அதற்கப்பால் நிரந்தர பாதுகாப்பு வேலிகளை இராணுவத்தினர் அமைத்துள்ளனர். இந்த நடவடிக்கை எதிர்காலத்தில் அந்தப் பகுதிகளைத் தாண்டி, மக்கள் மீளக்குடியமர முடியுமா என்ற சந்தேகத்தை தோற்று வித்திருக்கின்றது.

இவ்வாறாக புதிய அரசின் ஆட்சியிலும் இராணுவத்தின் அதிகாரங்கள் அவ்வளவு குறைந்ததாகத் தெரியவில்லை. அரசின் அறிவிப்புக்களை இராணுவம் உதாசீனம் செய்கின்றமையானது, அரசின் கட்டுப்பாட்டில் இராணுவத்தினர் இல்லையா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

எனவே இந்த விடயத்தில் அரசு, இராணுவத்தின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி சிவில் நடவடிக்கைகளை ஊக்குவிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

வடக்குக்குப் பயணம் மேற்கொண்ட பிரதமர் ரணில் இங்கு இராணுவத்தின் செயற்பாடுகள் –நடவடிக்கைகள் எவ்வாறு உள்ளன என்பதை நன்கு அறிந்து உணர்ந்திருப்பார். அதனால்தான் அவர், வடக்கில் இராணுவத்தினால்தான் பிரச்சினைகள் உருவாகின்றன என்று கூறியிருக்கிறார். ஆகவே, வடக்கில் இராணுவ நெருக்கு வாரத்தைக் குறைத்து மக்களின் சுதந்திரமான கருத்து வெளிப்பாட்டுக்கும் நடமாட்டத்துக்கும் ஏதுவான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் பிரதமருக்கும் அரசுக்கும் உண்டு. அதனை அவர்கள் விரைவாகச் செய்து, வடக்கு மக்களின் சுதந்திரத்தை உறுதி செய்யவேண்டும்.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பிரதமரின் வடக்கு வருகையும் அள்ளித் தெளித்த வாக்குறுதிகளும்

வடக்குக்கு வருகை தந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டிருந்த சிலபல நடவடிக்கைகளும், வெளியிட்ட சில கருத்துக்களும் இந்தப் பிரதேச மக்களின் மனங்களைப் பெரிதாகக் கவராவிட்டாலும் கூட, முன்னயை பெருந்தலைவர்களின் வருகைகளின் போது காணப்பட்டதைவிட, ஏதோ ஆக்க பூர்வமான செயற்பாடுகளுக்குக் கட்டியம் கூறுவதுபோல் அமைந்திருந்ததை அவர்களால் உணரக் கூடியதாக இருந்தது.

வடக்கின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கண்டுகொள்ளாததுபோல் நடந்துகொண்டமை அவருக்குத் திருப்தியளிப்பதாக இருந்திருக்கலாம். ஆனால் வடக்கு மக்களின் பெருமதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவரான முதலமைச்சர் இந்த மக்களின் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர். அவர் எடுக்கும் எந்த அரசியல் செயற்பாடும், இந்த மக்களின் நலன் சார்ந்த தாகவே இருக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

அதே மக்கள்தான் மத்தியில் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதிப் பதவியில் அமர்த்தினார்கள். அதன் மூலம் ரணில் விக்கிரமசிங்காவை பிரதமர் பதவியிலும் அமர்த்தக் காரணமாக இருந்துள்ளார்கள்.

அந்த வகையில் அரசியலில் நீண்ட அனுபவம் கொண்டவரும், தமிழ் மக்களின் ஆதரவை தொடர்ந்து எதிர்பார்க்கும் நிலையிலுள்ளவருமான ரணில் விக்கிரமசிங்க, வடக்கு மாகாண முதலமைச்சரை ஓரங்கட்ட முயன்றமை நிச்சயமாக தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்க மாட்டாது. இனிவரும் காலங்களில் இந்த நிலைமை நிவர்த்தி செய்யப்படவேண்டியது அவசியம். எக்காரணம் கொண்டும் தொடரலாகாது.

அதே சமயம் இராணுவத்தினர் மத்தியில் பிரதமர் பேசிய சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் அவர்களிடம் திரும்பிக் கொடுக்கப்படவேண்டியதன் நியாயத்தை அவர்களுக்கு எடுத்துக் கூறியமை ஆச்சரியமளிப்பதாகும். இராணுவத்தினரின் செயற்பாடுகளை கடந்த காலத்தில் பதவியிலிருந்த அரசு, செல்லப்பிள்ளைகளை நடத்துவது போல நடத்தி ஊக்கப்படுத்திக் கொண்டிருந்தது. விடுதலைப்புலிகளை அவர்கள் வெற்றி கொண்டார்கள் என்பது மட்டும் அதற்குக் காரணமாக இருக்கவில்லை. இராணுவத்தினர் மட்டுமல்ல அவர்களின் குடும்பங்கள், உறவினர்கள், நண்பர்கள் என்று ஏராளமான பேரினமக்களின் வாக்கு வங்கிகளில் அந்த அரசு தங்கி இருந்தது.

அதேநிலைதான் இன்றைய அரசுக்கும் உள்ளது. அந்த வாக்கு வங்கிகளை சிதைத்துவிட அவர்கள் விரும்பவில்லை. அதன் விளைவே ரணில் விக்கிரமசிங்க இராணுவத்தினரை "தாஜா" செய்து பேச வேண்டிய தேவையை ஏற்படுத்தி இருக்கும்.

இவை எப்படி இருந்தாலும், இராணுவத்தினர் சிவில் செயற்பாடுகளில் இறங்கி செயற்படுவதுபற்றி பொதுமக்கள் சார்பில் தெரிவித்த கருத்துக்களை அவர் கவனமாகச் செவிமடுத்துள்ளார். புலனாய்வாளர்களால் தாங்கள் அநாவசிய தலையீடுகளுக் குள்ளாகி வருவதுபற்றி முன்னாள் போராளிகள் தெரிவித்த முறைப்பாடுகளை அரசு கவனத்தில் எடுப்பது அவசியம். குடும்பங்கள் சிதைவுற்றுப் போவதற்கு இது காரணமாகி விடக்கூடும். மேலும் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் முன்பள்ளி நிலையச் செயற்பாடுகளில் கூட இராணுவம் தலையிடுவது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி செயலகத்தில் மக்கள் குறைகளைக் கேட்டறிந்த பிரதமர், இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் சிவில் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். எனவே இது ஒரு முக்கிய பிரச்சினை என்பதை அவர் உணர்ந்திருப்பது வரவேற்கத்தக்கது.

அத்துடன் வடக்கு மாகாணத்தின் பிரச்சினைகளைக் கையாள்வதற்கென தனியாக ஓர் அலுவலர் பிரிவை தமது காரியாலயத்தில் நிறுவவிருப்பது பற்றியும் அறிவித்துள்ளார். இவை பொதுவில் வரவேற்கக் கூடிய விடயங்கள்.

இருந்த போதிலும், பிரதமர் இப்பொழுது தெரிவித்துள்ள கருத்துக்களும், ஏற்கெனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தில் அறிவித்து விட்டுச் சென்ற வாக்குறுதிகளும் விரைவாக இல்லாவிட்டாலும், படிப்படியாகவாவது செயற்படுத்தப்படவேண்டும். செயற்படுத்தப்படும் என்றே மக்கள் நம்புகிறார்கள்.


ஆனால் எந்த நிமிடத்திலும் பொதுத் தேர்தல் ஒன்று வரலாம் என்ற சூழ்நிலையில் இவையாவும் தேர்தல் சூறாவளியில் அடித்துக்கொண்டு போய் விடக்கூடும் என்ற சந்தேகமும் நிலவாமலில்லை.

அவ்வாறு தேர்தல் ஒன்று அவசரமாக வந்தாலும், தமிழ் மக்களின் ஆதரவு தேவைப்படவே செய்யும். அதனால் அரசுத் தலைவர்கள் தாம் அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் அத்திசை நோக்கி தமது கவனங்களைத் திருப்பவேண்டும்.

# இலட்சிய உறுதியும் சிந்தனைத் தெளிவும் நிறைந்த சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளை

## இன்று அவரது 34ஆவது நினைவு தினம்

■ நப்பின்னை



கடையில் பொதி சுற்றித் தந்த மிகப் பழைய செய்தித்தாளின் இரு பக்கங்கள் கிடைத்தன. அதை எடுத்துப் பார்த்த பொழுது, அதில் தந்தை செல்வா கூறிய வரிகள் தென்பட்டன. அதை வாசித்த பொழுது அதிர்ச்சியும் மகிழ்ச்சியும் கிடைத்தன. தந்தை செல்வா 1964 இல் கூறிய அந்த வார்த்தைகள் இன்று எவ்வளவு பொருத்தமாக அமைந்துள்ளது என்பதுதான், அவ்வகை உணர்வுகள் ஏற்படக் காரணமாக அமைந்தது.

1960 இல் கோப்பாய்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நின்று வெற்றி பெற்றவர் பின்னர் கொள்கைகளிலிருந்து மாறுபடத் தொடங்கினார்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் அவரை விடுத்துப் புதியவரை நியமிப்பதற்காகக் கோப்பாய்த்தொகுதித் தமிழரசுக் கட்சிக்கிளைகளை மீள நிறுவுவதில் தந்தை செல்வா நேரடியாகப் பங்காற்றினார்.

"நாடாளுமன்ற உறுப்பினர் இல்லாமல் எதற்காக ஐயா இந்தக் கிளைக் கூட்டத்தை நடத்துகின்றீர்கள்" என்று ஒரு கட்சி உறுப்பினர் தந்தை செல்வாவைக்கேட்டார். அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே தந்தை செல்வா பின்வருமாறு கூறினார். இது நடந்து 1964 இல் ஆகும்.

"எமது கட்சி தமிழ் மக்களின் உரிமைகளை மீட்பதற்காக நாடாளுமன்றத்தைப் பயன்படுத்தி வருகின்றது. நாடாளுமன்றத்தின் மூலம் உரிமைகள் பெற முடியாத நிலையில், நாடாளுமன்றத்துக்கு வெளியே அறவழியில் போராட்டம் நடத்துகின்றோம். இந்தத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் , கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வருகிறார் இல்லை. அவர் மீது நடவடிக்கை எடுத்து அவரைக் கட்சியிலிருந்து விலக்குவது பெரிய விடயமல்ல. ஆனால் அவருக்கு அடுத்த தேர்தலில் நாம் இடம் கொடுக்காமல் புதிய ஒருவரை இந்தத் தொகுதியில் நிறுத்தவுள்ளோம். கட்சியின் கொள்கைகள் தான் முக்கியம். கொள்கையை விடத் தனி மனிதர்கள் பெரியவர்கள் அல்ல. கட்சிக் கொள்கைகளை மீறுபவர்களைக் கட்சியில் வைத்திருக்க முடியாது. உங்களுக்கு ஒன்று சொல்கின்றேன். கட்சிக் கொள்கைகளை நீங்கள் உங்கள் இலட்சியமாக ஏற்கவேண்டும். ஒருவேளை இந்தச் செல்வநாயகம் கட்சிக்கொள்கைகளை மீறி நடந்தால் நீங்கள் என்னை ஆதரிக்கக் கூடாது. கட்சியைத் தான் ஆதரிக்க வேண்டும். கட்சியின் இலட்சியத்தை அடைய நீங்கள் உழைக்க வேண்டும் என்று செல்வா அன்று கூறியிருந்தார்.

தனி மனிதரிலும் பார்க்க இனத்தின் உரிமைக்கான கொள்கைகளும் இலட்சியங்களும் மேலானவை என்று அன்று தந்தை செல்வா கூறியிருந்தார். அவரது பிறந்த நினைவு நாளான மார்ச் 31இல் இதனை நினைவு கூருவது மிகப் பொருத்தமானதாகும். அத்துடன் இந்த மார்ச் 31, பிறிதொரு வகையிலும் முக்கியமான நாளாகும்.

தந்தை செல்வா 1964இல் எவரை முதன்மைப்படுத்தி கோப்பாய் கிளையில் பேசினாரோ, எவரை 1965 இல் கோப்பாய் தொகுதி நாடாளுமன்ற வேட்பாளராக நிறுத்தி வெற்றியடைய வைத்தாரோ அந்தப் பெருந்தகை சி.கதிரவேற்பிள்ளையின் மறைந்த நாளும் மார்ச் 31ஆகும். தந்தை செல்வா எவ்வளவு மென்மையானவரோ அதேபோன்று குண இயல்புகளைக் கொண்டவர் கதிரவேற்பிள்ளை. தந்தை செல்வா மென்மையானவராக இருந்தாலும் கொள்கையிலும் இலட்சியத்திலும் மிகவும் உறுதியானவர். அதே போன்ற சிந்தனையுடையவர்தான் கதிரவேற்பிள்ளையும். இருவருக்கும் ஏமாற்று அரசியலில் சிறிதளவு கூட நம்பிக்கை கிடையாது.

**தமிழினத்தை நிரந்தரமாக இரண்டாம் தரக் குடிமக்களாகத் தள்ளியமையை விளங்கப்படுத்தியும், தமிழ் மக்களின் தொன்மையையும் எதிர் காலம் எப்படி அமைய வேண்டும் என்பது பற்றியும் 1973 ஆம் ஆண்டு கொழும்புக்கு வருகை தந்திருந்த அணிசேரா மாநாட்டுத் தலைவர்களுக்குக் கதிரவேற்பிள்ளை விளக்க அறிக்கை ஒன்றைக் கையளித்தார்.**

1972 இல் கொண்டுவரப்பட்ட புதிய குடியரசு அரசியல் யாப்பு, தமிழினத்தை நிரந்தரமாக இரண்டாம் தரக் குடிமக்களாகத் தள்ளியமையை விளங்கப்படுத்தியும் தமிழ் மக்களின் தொன்மையையும் எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என்பது பற்றியும் 1973 ஆம் ஆண்டு கொழும்புக்கு வருகை தந்திருந்த அணிசேரா மாநாட்டுத் தலைவர்களுக்குக் கதிரவேற்பிள்ளை விளக்க அறிக்கை ஒன்றைக் கையளித்தார்.

அயல்நாடுகளாக இருப்பதா அல்லது என்றென்றும் மோதிக் கொள்ளும் நிலைமையில் இருப்பதா என்பதை உலகம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதை அதில் விளக்கியிருந்தார். சமாதான சகவாழ்வா, சதா மோதலா என்ற அந்த அறிக்கை மிகவும் சிறப்பானது என்று பலராலும் போற்றப்பட்டது.

இத்துடன் அவர் நின்றாரில்லை. நாடாளுமன்றத்துக்குச் செல்லாமல் கட்சியின் தொண்டனாக தமிழினத்துக்காக உழைக்க விரும்பினார். தனது தொகுதியைச் சிறுபான்மைச் சமூகத்தில் ஒருவருக்குக் கொடுக்க விரும்பினார். எப்படியாவது பின்கதவால் தன்னும் நுழைந்து நாடாளுமன்ற உறுப்பினராகலாம், ஏன் அமைச்சராகக் கூட வரலாம் என்று நினைப்பவர்கள் மத்தியில் இவர் மாறுபட்டவராக இருந்துள்ளார். காங்கேசன்துறைத் தொகுதியில் வேட்பாளர் தெரிவில் ஏற்பட்ட சிக்கலினால் இவர் கோப்பாயில் மீண்டும் போட்டியிட்டார்.

இவர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளில் சிலவற்றை இங்கு நினைவு கூர்வது சிறப்பாகும். நாடாளுமன்றத்திலே வரவு –செலவுத் திட்டத்தின் மீது இவர் உரையாற்றுகையில் "நாங்கள் எங்களுக்கான சிறந்த பொருளாதார வரவு – செலவுத் திட்டத்தை தயாரித்து வளமான நாட்டை உருவாக்குவோம். உங்கள் நாட்டின் வரவு – செலவுத் திட்டத்தைப் பற்றி அக்கறைப்படாமல் இருப்போம். ஆனால் இப்பொழுது உங்கள் வரவு – செலவுத் திட்டத்தால் எமக்கும் பாதிப்பு இருப்பதால் அவை பற்றிச் சிலவற்றை கூற விரும்புகிறேன்" என அவர் கூறினார். இது எவ்வளவு ஆழமான கருத்து என்பது தெரிகின்றது.

இதய நோயாளியான கதிரவேற்பிள்ளை இந்திராகாந்தியைச் சந்திக்கச் சென்று தமது இறுதி முடிவை எய்தினார்.

தந்தை செல்வா பிறந்த திகதியில் அவரின் இலட்சியக் கனவை நிறைவேற்றப்பாடுபட்ட கதிரவேற்பிள்ளை என்னும் சிந்தனையாளரும் அரசியல்வாதியும் மறைந்தமை தமிழினத்துக்கு ஏற்பட்ட மாபெரும் இழப்பாகும்.

# தமிழர்களின் தனிப்பெரும் தலைவராக விளங்கிய தந்தை செல்வநாயகம்


■ மு.ஈழத்தமிழ்மணி

ஈழத் தமிழர்களின் தனிப்பெரும் தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்களது 117ஆவது பிறந்த தினம் இன்று தமிழ் மக்களால் கொண்டாடப்படுகின்றது.

தந்தை செல்வா 1898 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி மலேசியாவில் பிறந்து, கொழும்பில் கல்விகற்று விஞ்ஞானப் பட்டதாரியாகி, ஆசிரியராகப் பணிபுரிந்து சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். 1924ஆம் ஆண்டு சட்டப் பரீட்சையில் சித்தியடைந்து சிவில் சட்டத் துறையைத் தெரிந்தெடுத்து சட்ட வல்லுநராகத் திகழ்ந்தார்.

1944ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி ஜி.ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் உருவாக்கப்பட்டது. அந்தக் கட்சியின் உப தலைவராக எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜி.ஜி.பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது சம பல பிரதிநிதித்துவத் திட்டத்தைக் கொண்டிருந்தார். அவர் ஆங்கிலத்தில் நிகழ்த்திய உரையைக் கண்டு சோல்பரி ஆணைக்குழுவினர் அதிசயித்தனர். இருந்தாலும், அவரது சம பிரதிநிதித்துவக் கொள்கையை இனவாத நோக்கம் கொண்டதெனக் கூறி, சோல்பரி ஆணைக்குழுவினர் நிராகரித்து விட்டனர். சோல்பரி ஆணைக்குழு சமபல பிரதிநிதித்துவத் திட்டத்தை நிராகரித்தமையினால் சோல்பரி அரசியல் அமைப்பை நிராகரிக்கும்படியான முடிவை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர் எடுத்திருந்தனர். 1947ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் முன் இந்தக் கொள்கையை முன்வைத்து இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி போட்டியிட்டது. அந்தத் தேர்தலில் காங்கேசன்துறைத் தொகுதியில் இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு தந்தை செல்வநாயகம் வெற்றிபெற்றிருந்தார்.

தந்தை செல்வநாயகத்தின் நாடாளுமன்ற பிரவேசத்துடன் அரசியல் பணி ஆரம்பமாகியது. தமிழ் இனத்தின் அரசியல் தலைவர்களின் சுயநலப் போக்கால், நிதானமான, நேர்மையான, உறுதியான, உண்மையான, உரிமைக்கான வழிகாட்டலைச் செயல் வடிவில் காண்பிக்க முடியாத பதவிகளுக்கு மயங்கிய தலைவர்களின் கால கட்டத்தில் தூய்மையான எண்ணத்துடன் துணிந்து இலங்கையில் வாழுகின்ற மலையகத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை அடி நாதமாகக் கொண்டு ஈழத் தமிழர்களின் விடிவுக்கான கொள்கையான சமஷ்டியை முன்வைத்து 1949ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் நாள் அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கினார்.



இன்று அவரது 117ஆவது பிறந்த தினம்

> 1947ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் முன் இந்தக் கொள்கையை முன்வைத்து இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி போட்டியிட்டது. அந்தத் தேர்தலில் காங்கேசன்துறைத் தொகுதியில் இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு தந்தை செல்வநாயகம் வெற்றிபெற்றிருந்தார்.

தந்தை செல்வநாயகம் அவர்களின்வழிகாட்டலையும், கொள்கைகளையும் ஈழத் தமிழர்கள் முழு மனதோடு ஏற்று அங்கீகரித்தனர். தந்தை செல்வநாயகத்தினது அரசியல் வழிகாட்டல்களும் செயற்பாடுகளும் புதியதொரு கோணத்தில் புதிய பரிமாணத்தைத் தொட்டு நின்றன. நீதி, நேர்மையான, அரசியல் சமுதாயத்தை உருவாக்க, தமிழ் பேசும் மக்களிடையே புரையோடிப் போயிருந்த பிரதேச வாதம், சாதி வாதம், இனவாதம், மத வாதம் எனப் பின்னிப் பிணைந்திருந்த சகல விதமான வேறுபாடுகளுக்கு எதிராக ஒரு மனிதனாக இருந்து கொண்டு கொள்கையிலும் இலட்சியத்திலும் பற்றுக்கொண்டு மிக உறுதியாகச் செயற்பட்டு வந்தார்.

ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி முதற் பிரதமரான டி.எஸ்.சேனநாயக்க தலைமையில் உருவாகிய அமைச்சரவையில் சேர்ந்து கொண்டது. இதன் விளைவாகவே தந்தை செல்வநாயகம் காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறினார். தமது தலைமையிலான தமிழரசுக் கட்சியை ஆரம்பித்து ஒற்றை ஆட்சி முறையில் தமிழ் இனத்துக்கு விமோசனம் கிட்டாது சமஷ்டி முறையே தமிழர் பிரச்சினைக்கு தீர்வைத் தரும் என்று கூறியே தமிழ் மக்கள் மத்தியில் கொள்கைப் பரப்புரைகளை முன்னெடுத்துச் சென்றார்.

1950ஆம் ஆண்டு தந்தை செல்வநாயகம் தமது கட்சியான தமிழரசுக் கட்சியின் வளர்ச்சி ஆண்டு என்று பிரகடனம் செய்தார். தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் தமிழ் அரசுக் கட்சியின் உப கிளைகளை அமைத்து, தமது கொள்கைகளை முன்னெடுக்கவும், செயற்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். மூலைமுடுக்குகளில் எல்லாம் பரப்புரைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு சமஷ்டிக் கொள்கை பற்றி தெளிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டன.

1951ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் 14ஆம் 15ஆம் நாள்களில் தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாடு திருகோணமலையில் நடைபெற்றபோது கட்சியின் தலைவராக அவர் தெரிவு செய்யப்பட்டார். தந்தை செல்வநாயகம் தமது உறுதியான கொள்கைப் பிரகடனத்தில்; தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம். தமிழ் தேசிய இனத்துக்கு சுதந்திரமாக வாழும் உரிமை உண்டு. தமிழ் பேசும் மக்கள் தமது பாரம்பரிய வரலாற்றுப் பெருமையுடன் சுதந்திரமாக வாழ்வதற்கு, தமிழர்கள் வாழும் பிரதேசமாக தமிழ் அரசு அமைக்கப்படல் வேண்டும் என்று வலியுறுத்திக் கூறினார்.

தந்தை செல்வாவினது உரையின் உறுதி தமிழர்கள் மத்தியில் நம்பிக்கையை ஊட்டியது. இந்த நாடு ஒரு மொழிக்கோ, ஓர் இனத்துக்கோ சொந்தம் இல்லை. இந்த மண்ணில் பிறந்த மக்கள் எல்லோரும் இந்த மண்ணின் மைந்தர்கள் தான் என்பதை ஆணித்தரமாக நிரூபிக்க சமஷ்டி அரசு தான் ஒரே வழி எனத் தனது எண்ணக் கிடக்கையின் வாயிலாக உறுதிபட உரைத்தார்.

தந்தை செல்வநாயகம் ஈழத் தமிழ் இனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு குரல் கொடுக்கவே 1957ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் திகதி பிரதமராக இருந்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டார். பின்னர் தமிழர்கள் சகல உரிமைகளையும் பெற்று விடுவார்கள் எனக் கருதிய இனவாதிகளாலும், அரசியல் ஆதாயம் தேட முனைந்தவர்களாலும் அந்த ஒப்பந்தம் கிழித்தெறிய வேண்டிய நிலைக்குள்ளானது. அன்றே தந்தை செல்வநாயகத்தின் தீர்க்க தரிசனம் தெட்டத் தெளிவாக தமிழ் இனத்தின் மத்தியில் தெரிந்திருந்தது.



1947ஆம் ஆண்டு தமது அரசியல் வாழ்வை ஆரம்பித்த தந்தை செல்வநாயகம் 1977ஆம் ஆண்டு ஆரம்பகாலம் வரை தமிழ் இனத்தின் விடுதலைக்காக இறுதிவரை போராடினார். 30 ஆண்டுகள் வரை தமிழ் இனத்தின் குரலாகவும், தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் திகழ்ந்தார். அது மட்டுமன்றி, தந்தை செல்வநாயகம் புத்தளம் பள்ளிவாசல் தொழுகையின் போது பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட முஸ்லிம் மக்களுக்காக அந்த வேளையில் நாடாளுமன்றத்தில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இருந்தும், தமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துக் குரல் கொடுக்கத் திராணியற்று இருந்தபோது தந்தை செல்வாவே எதிர்த்துக் குரல்கொடுத்து அனைத்து மக்களின் கண்களையும் திறக்க வைத்தார். இதனை தந்தை செல்வநாயகத்தின் நூற்றாண்டு விழாவின் போது மனம் உருகி நினைவு கூர்ந்தார் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலை வரும் ஸ்தாபகருமான மறைந்த அஷ்ரப்.

20ஆம் நூற்றாண்டில் ஈடு இணையில்லா தமிழ்த் தலைவராக வாழும் காலத்திலேயே போற்றப்பட்ட தந்தை செல்வநாயகம் எவரையும் உதாசீனம் செய்யும் – மனம் நோக வைக்கும் பண்புடையவர் அல்லர் என்பதை அவர் காலத்தில் அவருடன் வாழ்ந்த அரசியல் தலைவர்கள் ஆணித்தரமாகக் கூறியுள்ளனர். மெலிந்த உருவம், மெல்லிய குரலில் நாடாளுமன்றத்திலே உரையாற்றும்போது அவரது பேச்சைக் கேட்பதற்காக தமது காதுகளை மிகக் கூர்மையாகப் பலரும் வைத்துக் கொள்வார்கள்.

தந்தை செல்வநாயகம் தமது இறுதிக் காலத்தின்போது தமிழ் இனத்தை ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறியிருந்தார். தமிழ் மக்களைஇன்று காப்பாற்றுவது யார்? தந்தை செல்வாவைப் போன்று வேறு தலைவர்கள் உலகத் தமிழர்கள் வரலாற்றில் பிறப்பெடுக்கவில்லை. உருவாகவும் இல்லை. எத்தனை தலைமுறை கடந்தாலும் தந்தை செல்வாவின் தியாகமும், தன்னலமற்ற உழைப்பும் தமிழர்கள் மத்தியில் மங்காது நிலைத்து நிற்கும்.

# நிலையான மகிழ்வைத் தரும்

எமது வாழ்வில் எட்டாத ஆசைகளை வளர்த்து அவற்றுக்காக முயன்று நிம்மதியை இழந்து விடுவதிலும் பார்க்க, உள்ளதை வைத்துக் கொண்டு திருப்தியுடன் கூடிய நேரிய முயற்சியால் உயர்வதே நிலையான மகிழ்வைத் தரும்.

விரலுக்கேற்ற வீக்கம் என்பது போல் எமது நிலைக்கேற்ற வகையிலும் இறைவனுக்கு ஏற்புடைய செயல்களிலும் ஈடுபடும் போது இறைவனின் கரம் எமது வாழ்வை உயர்த்தும்.

## தவக்காலச் சிந்தனை



எமக்குத் தரப்பட்ட வாழ்வும் வளமும் வறுமையும் செழுமையும் இறைவனின் கொடையாகும். எமக்கு மேல்நிலையில் உள்ளோரை எண்ணி அங்கலாய்ப் பதை விடுத்து எம்மைவிட குறைந்த வளங்களுடன் வாழ்வோரை நினைத்து திருப்திகொள்வோம். ஏனெனில் பறவைகள், காட்டுச் செடிகள், மலர்களைப் பாருங்கள். அவை விதைப்பதும், அறுப்பதும் இல்லை. சேர்த்து வைப்பதும் இல்லை, ஆடைகளுக்காக அலைவதும் இல்லை. ஆனால் அவற்றுக்கெல்லாம் கடவுள் உணவும் அழகும் சேர்த்து வாழ்வளிக்கிறார் என்றால் இவற்றைவிட மேலான மனிதனை கடவுள் அணி செய்து நலன்களைப் பொழிய மாட்டாரா?

எனவே எதிர்காலத்துக்கான கவலையைவிட்டு நீதி, நேர்மை, நம்பிக்கை, விடாமுயற்சியுடன் இறைவனின் வழிநடத்தலில் திருப்தியுடன் வாழ்வோம். இறையரசின் செல்வங்களை மிகையாகப் பெறுவோம்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## தைரியசாலியே பாக்கியசாலி

ஒழுக்கத்தில் உறுதி கொள்ளுங்கள். தைரியத்தை ஒருபோதும் இழக்காதீர்கள். கோழையே வாழ்வில் பாவத்தைச் செய்கிறான். தைரியசாலிகள் மனதால் கூட பாவம் செய்ய முடியாது.

சுயநலமே ஒழுக்கக் கேடு. சுயநலம் இன்மையே நல்லொழுக்கம். இதுவே ஒழுக்கத்திற்கான இலக்கணம். எப்போதும் உற்சாகமுடன் இருப்பதே ஆன்மிக வாழ்வில் ஈடுபடுவதற்கான முதல் அறிகுறி.

எளியவர்களுக்கு சேவை செய்பவன் கடவுளுக்கே சேவை செய்த பாக்கியத்தை அடைகிறான்.

# ஆரோக்கியத்தை பாதிக்கும் ஊறுகாய்

என்ன தான் ஊறுகாயைத் தினமும் கொஞ்சமாக எடுத்துக் கொண்டாலும், அது கொஞ்சம் கொஞ்சமாக உயிரைக் கொல்லும். இப்போது ஊறுகாயை அன்றாடம் எடுத்து வந்தால், என்ன பிரச்சினைகள் வரும் என்பதை பார்க்கலாம்.... ஊறுகாயில் பதப்படுத்தும் பொருளான சர்க்கரை சேர்க்கப்பட்டிருப்பதால், நீரிழிவு இருப்பவர்கள், ஊறுகாயை அறவே தவிர்க்க வேண்டும். இல்லாவிட்டால் மோசமான நிலைமைக்கு உள்ளாகக்கூடும். ஊறுகாயில் எண்ணெய் அதிகம் சேர்ப்பதால், இதய நோய்க்கு வழிவகுக்கும். எனவே இதயம் சம்பந்தமான நோய்கள் இருப்பவர்கள் ஊறுகாயைத் தவிர்ப்பது நல்லது. இரத்த அழுத்தம் உள்ளவர்கள் ஊறுகாயை தவிர்க்க வேண்டும். இதனால் உடலில் இரத்த அழுத்தம் அதிகரிப்பது தடுக்கப்படுவதோடு, அதனால் இதய நோய் வருவதையும் தவிர்க்கலாம். ஏனெனில் ஊறுகாயை தொடர்ந்து உட்கொண்டு வரும் போது, ஊறுகாயில் உள்ள சாறானது வயிற்றில் பிரச்சினைகளை ஏற்படுத்தும். அடிவயிற்றில் வலி, பிடிப்புக்கள் மற்றும் சில சமயங்களில் வயிற்றுப் போக்கைக் கூட உண்டாக்கும். ஊறுகாயில் பதப்படுத்தும் பொருள்கள் மற்றும் அதிக அளவிலான உப்பு சேர்க்கப்பட்டிருப்பதால், அவற்றை அன்றாடம் எடுத்து வரும் போது, அவை உடலில் நீர்த்தேக்கத்தை ஏற்படுத்தும். இதனால் வயிறு எப்போதும் மந்தமாக இருப்பது போன்ற உணர்வை உணரக்கூடும். மேலும் உப்பு சம்பந்தமான நோய் வரவும் அதிக வாய்ப்புள்ளது. என்ன தான் ஊறுகாய் உணவின் சுவையை அதிகரித்தாலும், இவற்றை அன்றாடம் உணவில் சேர்ப்பது நல்லதல்ல. அதற்காக ஊறுகாயை சாப்பிடவே கூடாது என்று சொல்லவில்லை. அன்றாடம் சாப்பிடுவதைத் தவிர்ப்பதோடு, வீட்டிலேயே ஆரோக்கியமான முறையில் ஊறுகாயைச் செய்து சாப்பிடுங்கள்.

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 30 | 40 | 20 | 60 |
| கத்தரி | 20 | 80 | 20–30 | 20 | 30 | 40–60 |
| கரட் | 80 | 80 | 100–120 | 80 | 80–100 | 90–140 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 35–40 | 60 |
| பயிற்றை | 50 | 60 | 70 | 40 | 40–50 | 60 |
| பாகல் | 80 | 80 | 80 | 80 | 80–70 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 40 | 50 | 50 | 50–55 | – |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 90 | 80 | 80–90 | 80–90 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 40–60 | 70 | 50–80 | 80 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 35–40 | 60–80 |
| தக்காளி | 40 | 60 | 40 | 30 | 40–50 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 40 | 60–70 | 60–80 |
| கீரை | 20 | 40 | 30 | 10 | 20–25 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 30 | 20 –25 | 10 |
| பச்சை மிளகாய் | 50 | 60 | 40 | 40 | 40–50 | 80 |
| புடோல் | 40 | 60 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 60 | 30 | 30 | 25–30 | 60 |
| வெண்டி | 50 | 80 | 30 | 40 | 40 | 20–50 |
| போஞ்சி | 80 | 120 | 100 | 100 | 90–100 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 140 | 120 | 130–140 | 180 |
| தேங்காய் | 60 | 55 | 60 | 50 | 40–50 | 40–60 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 80 | 80–90 | 90 |
| தேசிக்காய் | 80 | 80 | 60–70 | 40 | 40–50 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 10 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 120 | 80 | 140–180 |
| இராசவள்ளி | 120 | 80 | 120 | 80 | 80–100 | 120 |
| பனங்கிழங்கு | – | 02.50 | – | – | 05 | 05 |

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 600 | 800 | 400 | 600 |
| நண்டு | 400 | 300 | 250 | 200 | 400 |
| கணவாய் | 500 | 500 | 600 | 400 | – |
| பாரை | 400 | 400 | 500 | – | 330 |
| சுறா | 550 | 400 | 650 | 500 | – |
| சீலா | 350 | 300 | 400 | 300 | 250 |
| விளை | 350 | 400 | 450 | 300 | 300 |
| முரல் | 350 | 300 | 350 | 300 | 250 |
| கும்பிளா | 400 | 200 | 400 | 300 | 270 |
| கிழாக்கன் | 350 | 500 | 400 | 300 | 300 |
| ஒரா | 300 | 300 | 350 | 300 | – |
| திரளி | 300 | 250 | 300 | 300 | – |
| நகரை | 200 | 200 | 300 | 100 | – |
| சூடை | 100 | 150 | 150 | 200 | 50 |
| ஒட்டி | 150 | 150 | 300 | 100 | – |
| திருக்கை | 150 | 250 | 250 | 200 | 140 |
| பாலை | 300 | 150 | 500 | 300 | – |
| வாளை | 100 | 100 | 300 | 200 | 200 |
| கொய் | 60 | 100 | 100 | 50 | – |
| மதனம் | 180 | 200 | 250 | 200 | 200 |

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 8 | | |
| | 5 | 6 | 2 | | | 4 | | |
| 8 | | | | | 1 | 7 | 5 | 9 |
| 7 | 9 | | | 1 | | 5 | 4 | 8 |
| | | | 9 | 3 | 4 | | | |
| 1 | 6 | 4 | | 7 | | | 2 | 3 |
| 3 | 2 | 9 | 8 | | | | | 5 |
| | | 1 | | | 9 | 3 | 8 | |
| | | 8 | | | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதி கள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையி லும் நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண் டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 1 | 2 | 5 | 8 | 6 | 9 | 7 |
| 8 | 7 | 6 | 3 | 9 | 4 | 2 | 5 | 1 |
| 9 | 2 | 5 | 7 | 1 | 6 | 4 | 3 | 8 |
| 1 | 9 | 8 | 6 | 3 | 2 | 5 | 7 | 4 |
| 4 | 6 | 3 | 5 | 7 | 9 | 1 | 8 | 2 |
| 7 | 5 | 2 | 8 | 4 | 1 | 3 | 6 | 9 |
| 5 | 3 | 9 | 1 | 2 | 7 | 8 | 4 | 6 |
| 6 | 1 | 7 | 4 | 8 | 5 | 9 | 2 | 3 |
| 2 | 8 | 4 | 9 | 6 | 3 | 7 | 1 | 5 |

# நாளை

**பங்குனி-18**
**புதன்கிழமை**
**01.04.2015**

திதி: துவாதசி பி.ப.12.10
நட்சத்திரம்: மகம் பி.ப.04.26 வரை
சுபநேரம்: 04.41–06.11 வரை
இராகுகாலம்:12.11–01.41 வரை


2015 | மார்ச் 31 | செவ்வாய்க்கிழமை
உதயன்

# பயணம், தண்ணீர் இவற்றை கனவில் கண்டால்...

தண்ணீர் கனவில் வந்தால் என்ன பலன். ஒரு இடத்தில் தண்ணீர் இருப்பது போலக் கனவு கண்டால், பிரச்சினைகள் விலகும். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். வறண்ட குளம் இருப் பது போல கனவு கண்டால், புதிய செலவுகள் அதிகம் உண்டாகும். எதிர்பார்த்த இடங்களில் இருந்து நல்ல தகவல்கள், பணம் சம்பந்தபட்ட தகவல்கள் வரத் தாமதமாகும் அல்லது அதில் ஏதாவது தடைகள் உண்டாகும். குளத்தில் அதிக தண்ணீர் இருப்பது போலக் கனவு கண்டால், பெரிய இடத்தில் இருந்து ஆதரவும், அவர்களால் பல நன்மைகளும் உண்டாகும். நீண்ட நாள்களாக இருந்த பிரச்சி னைக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்கும்.


குளத்தில் தாமரைப் பூக்கள் இருப்பது போலக் கனவு கண்டால், பணவரவு உண்டாகும். கடன் சுமை குறையும். நல்ல நல்ல நண்பர்களின் ஆதரவினால் வியாபார விருத்தியும் குடும்ப ஒற்றுமையும் ஏற்படும். குளத்தில் கால் கழுவுவதைப் போலக் கனவு கண்டால், தரித்திரம் விலகி முகத்தில் புதிய உற்சாகம் ஏற்படும். நாள்பட்ட நோய்களால் ஏற்பட்ட பணவிரயமும், உடல் பலவீனமும் அகலும். ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிச் செல்வீர்கள். குளத்தில் இருக்கும்போது முதலை உங்கள் காலைப் பிடிப்பது போலக் கனவு கண்டால், எடுக்கும் முயற்சியில் வெற்றியைப் பெறுவீர்கள். இருந்தாலும் சிறிய பிரச்சினைகளையும் தடைகளையும் சந்திக்க நேரும். அதை மனத் தைரியத்தோடு சமாளித்தால் லாபகரமாக அமையும். குளத்தில் குளிப்பதுபோல கனவு கண்டால், இறைவனால் ஏற்படும் நன்மைகளை எவராலும் தடுக்க முடியாது. உங்களுக்குக் கிடைக்கும் நற்பெயரையும் வெற்றியையும் எவராலும் பறிக்க இயலாது. அடுப்புக் கரி வைரமாகும் ஆனால் வைரம் மறுபடியும் அடுப்புக்கரி ஆகாது. அதுபோல வெற்றியைப் பெற்ற நீங்கள் தோல்வியை சந்திக்க மாட்டீர்கள். தண்ணீரில் தத்தளிப்பது போலக் கனவு கண்டால், புதிதாக அறிமுகமான நட்பால் சிரமம் ஏற்படும். பணவிரயமும் உண்டாகும். நெருங்கிய உறவினர்களால் மனச்சங்கடங்கள் இருக்கும். திடீர் தனலாபமும் ஏற்படும். அருவியில் இருந்து தண்ணீர் கொட்டுவது போலக் கனவு கண்டால், பணவரவு இருக்கும். வேலையில் நல்ல முன்னேற்றமும் பதவி உயர்வும் ஏற்படும். சந்தோஷமான செய்திகள் கிடைக்கும். செல்வாக்கு உயரும். தண்ணீரில் உங்கள் வீடு இருப்பது போலக் கனவு கண்டால், செல்வம் உங்கள் இல்லம் தேடி வரும். உறவினர்களால் தொல்லையும் வீண் அலைச்சலும் ஏற்படும். நண்பர்களால் நன்மையும் பணவரவும் இருக்கும். தண்ணீரில் மூழ்குவது போலக் கனவு கண்டால், குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். பசுவைத் தேடி கன்று வருவது போன்று எப்பொழுதோ செய்த நன்மைகளின் பலன்கள் உங்களுக்கு இப்போழுது கிடைக்கும். செடிகளுக்கும், மரங்களுக்கும் தண்ணீர் விடுவது போலக் கனவு கண்டால், உங்களுக்கு நன்மை செய்யவே பிறந்தவர்கள் போல் சிலர் உங்களைத் தேடி வந்து உதவுவார்கள். அவர்களால் மனம் குளிர்ச்சியடையும். புதிய முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

களைப்பாக இருப்பது போலக் கனவு கண்டால், வெற்றிக்காகப் போராடிக் கொண்டு இருந்த நீங்கள், வெற்றி பெறும் காலத்தின் அருகில் சென்று கொண்டு இருக்கிறீர்கள் என்று உணருங்கள். அதற்கான முயற்சிகளை இன்னும் வேகமாகவும் விவேகமாகவும் செய்தால் வெற்றிக் கனி உங்கள் கையில். எல்லோரும் உறங்குவது போலக் கனவு கண்டால், அடுத்தவர்களுக்த அறிவுரை கூறும் அந்தஸ்துக்கு வருவீர்கள். உயர்வான பலன்களைப் பெறுவீர்கள். பயணம் செய்வது போலக் கனவு கண்டால் என்ன பலன். வாகனத்தில் பயணம் செய்வது போல கனவு கண்டால், பொழுதுபோக்கான விடயங்களில் அதிகம் பங்கு கொள்ளும் சூழ்நிலை ஏற்படும். புகழ் மங்கி இருந்தவர்கள் புகழின் உச்சிக்கே போவீர்கள். வாகனத்தை தள்ளிக் கொண்டு போவது போல கனவு கண்டால், பிரச்சினைகளில் இருந்து எப்படி விடுபடுவது என்று தெரியாமல் அவதிப்படுவீர்கள். உங்களுக்கு உதவ சில நல்ல உள்ளம் படைத்தவர்கள் முன் வருவார்கள். பொதுவாகவே இரவு ஒரு மணிக்கு கனவு கண்டால் ஒரு வருடத்துக்குள் பலன் கிடைக்கும். இரண்டு மணிக்கு கனவு கண்டால் மூன்று மாதத்துக்குள் பலன் கிடைக்கும். மூன்று மணிக்கு கனவு கண்டால் ஒரு மாதத்துக்குள் பலன் கிடைக்கும். விடியற்காலையில் கனவு கண்டால் உடனே பலிக்கும். ஆனால் பகல் கனவு பலிக்காது என்கிறது கனவு சாஸ்திரம். சிலருக்கு கனவு கண்ட சில நாள்களிலேயே பலிக்கும். நல்ல கனவு கண்டால் மகிழ்ச்சி அடைவோம். அதுவே எதிர்மாறான கனவு கண்டால் அந்த கனவை நினைத்து நினைத்தே வேதனைப்படுபவர்களும் இருப்பார்கள். அப்படித் தீய கனவைக் கண்டவர்கள் இறைவனை நம்பிக்கையுடன் வணங்கினால் தீய கனவுகளும் வெறும் கனவாகவே ஆகிவிடும். மொத்தத்தில் இறைவன் ஒருவனே பெரியவன். அவனையே முழு மனதுடன் நம்பினால் சங்கடங்கள் விலகி வாழ்நாள் முழுவதும் எதிலும் சாதிக்கலாம்; புகழ் பெறலாம்.



## கனவுகளின் பலன்கள்

# திருமணத்தின் பின்னர் வாழும் இடம் புது இடமானால்...



திருமணத்தின் பின்னர் நீங்கள் உங்கள் பகுதியில் இருந்து வேறு இடத்துக்குச் சென்றால், அந்தப் பகுதி மொழி வழக்கில் உள்ள சிறிய சிறிய வார்த்தைகளையாவது முதலில் கற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் செல்லும் பகுதியிலுள்ள சுற்றுலா தலங்கள், முக்கிய இடங்கள், கோயில்கள் ஆகியவற்றையும் முன்னதாகவே அறிந்து வைத்துக் கொள்ளுங்கள். (இணையத்தளம் உதவிக் கரம் நீட்டத் தயாராக உள்ளது.)

புதிய இடத்தில் நண்பர்களைத் தேடி அலைய வேண்டாம். இருக்கவே இருக்கிறார்கள் 'இன்ஸ்டன்ட் நண்பர்கள்'. அதாவது உங்கள் கணவரின் நண்பர்களின் மனைவிகள். அதில் உங்களுக்கு பிடித்தவரை நெருக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

உங்கள் பகுதி பற்றிய சுவாரஸ்யங்களை அறிந்து கொள்ள உங்கள் பால்காரர், தபால்காரர், காய்கறிக்காரர் அனைவரிடமும் நட்பாகப் பழகுங்கள். (முன்னெச்சரிக்கையும் அவசியம்)

உங்கள் பகுதியில் உள்ள பஸ், ரயில், விமானவசதிகளைத் தெரிந்து வைத்து கொள்வதுடன், தொலைபேசி எண்களையும் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். வேறு இடங்களில் இருந்து உங்கள் வீட்டுக்கு வரும் வழியையும் அறிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

புதிய பகுதியின் பிரபலமான உணவு வகைகளைத் தயாரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். (தினமும் பாராட்டு மழையில் நனையலாம்.)

பழைய இடத்து நண்பர்களிடமும் தொடர்பில் இருக்கத் தவறாதீர்கள். தனிமையை இனிமையாக்க பழைய நண்பர்களின் தொடர்பு உதவும்.

# பெண்கள் எந்த வயதில் அழகு?






பொதுவாக, பெண்கள் டீன் ஏஜில் தான் அழகாகத் தெரிவார்கள் என்பது பெரும்பாலானோரின் கருத்து. ஆனால் நடுத்தர வயதில்தான் பெண்கள் ஜொலிக்கிறார்கள் என்று இந்த கருத்துக்கணிப்பு சொல்கிறது. பெண்கள் எந்த வயதில் அழகாக இருப்பார்கள் என்பது குறித்து நடத்தப்பட்ட இந்த ஆய்வில் பெண்கள் 30 வயதில் மற்றவர்களுக்கு அழகாகத் தெரிவார்கள் என்று தெரியவந்தது. ஆண்களிடம் இது பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களே அழகாகவும், கவர்ச்சியாகவும் இருப்பதாக நிறையப் பேர் கூறியுள்ளனர்.

இந்த ஆய்வை மேற்கொண்டவர்கள் இறுதியாக இதற்கான காரணத்தைக் கண்டு பிடித்தார்கள். அதன்படி இளம்வயதில் குடும்பச் சூழ்நிலையால் தம்மைப் பற்றி கவலைப்படாமல் இருக்கும் பல பெண்கள், திருமணம் முடிந்து குழந்தை பெற்றுக் கொண்டு ஓரளவு வாழ்க்கையில் தம்மை நிலை நிறுத்திக் கொண்ட திருப்தியில் தங்களை அழகுபடுத்திக் கொள்கின்றனர். அந்த வயதில் தான் அவர்கள் மற்றவர்களை கவரும் உடைகளையும், அழகு சாதனங்களையும் பயன்படுத்தத் தொடங்கு கிறார்கள். மற்றவர்களுக்கு அழகு தேவதையாகத் தெரிகிறார்கள் என்று தெரிவிக்கிறது இந்த ஆய்வு.



# மானும்..ஓநாயும்

ஒரு ஊரில் மான் கூட்டம் ஒன்று வசித்து வந்தன.அவற்றுள் ஒரு சின்ன மான் மிகவும் புத்திசாலியாய் இருந்தது. அதே நேரம் தன் புத்திசாலித்தனத்தைக் கண்டு மற்ற மான்களிடம், சற்று கர்வமாகவே நடந்துவந்தது.ஒரு நாள் எல்லா மான்களும் மேய்ச்சல் முடிந்து திரும்புகையில் இருட்ட ஆரம்பித்தது..ஆனால் அப்போதும் அந்தச் சின்ன மான் திரும்பி வரவில்லை.. 'இருட்டில் எந்த மிருகமாவது வந்து உன்னை அடித்து உண்டு விடும்'என்று வயதான மான் ஒன்று அறிவுரை கூறியும் சின்ன மான் கேட்கவில்லை..'சரி' என மற்ற அனைத்து மான்களும் திரும்பின.. அந்த நேரம் அங்கு வந்த ஓர் ஓநாய் சின்ன மான் தனியாய் இருப்பதைப் பார்த்து ...அதை கொன்று உண்ண விரும்பியது.. உடனே சின்ன மான் புத்திசாலித்தனமாக என்னை நீ உண்பதில் எனக்கு ஆட்சேபனை யில்லை..ஆனால் அதற்கு முன் உன் இனிய குரலில் பாட்டு ஒன்று கேட்க ஆசை என்றது.

ஓநாயும் சின்ன மானின் கடைசி விருப்பத்தைக் கேட்டுவிட்டுப் போகட்டும் என்ற எண்ணத்தில் தன் கொடூரக்குரலால் பாட ஆரம்பித்தது. அதன் குரல் கேட்ட வேட்டைக்காரர்கள் சிலர் அங்கு ஓடி வந்து ஓநாயைக் கொன்றனர். சின்ன மான் உயிர் தப்பியது.

கர்வம் இல்லாமல் ...மூத்த மான் சொன்ன அறிவுரையைக் கேட்டிருந்தால் சின்ன மானுக்கு இந்த நெருக்கடி வந்திருக்காது. ஓநாயும் தன் கொடூரக்குரலை பற்றி புரிந்துகொண்டு பாடாமல் இருந்திருந்தால் இறந்திருக்காது..






# பாப்பா... பாப்பா...

பாட்டி தேடும் பாப்பா!
பாட்டுப் பாடும் பாப்பா!
பாங்காய்ப் பாடும் பாப்பா!
ஆட்டம் போடும் பாப்பா!
அழகாய் ஆடும் பாப்பா!
பாட்டி தேடும் பாப்பா!
பாய்ந்து ஓடு பாப்பா!
வீட்டை நாடு பாப்பா!
விரைவாய் நாடு பாப்பா!



# அறிந்ததும் அறியாததும்!

- தேன், மிக எளிதாக ஜீரணமடையும் ஒரு உணவுப்பொருள். ஏன் தெரியுமா? அது ஏற்கனவே தேனீக்களால் ஜீரணிக்கப்பட்டு விட்டது.
- டைட்டானிக் கப்பலைக் கட்ட ஆன மொத்தச் செலவு சுமார் 7 மில்லியன் டொலர்கள். ஆனால், அதை பற்றி ஜேம்ஸ் கமரூன் படமாக எடுக்க ஆன செலவு சுமார் 200 மில்லியன் டொலர்கள்.
- நீங்கள் உங்கள் கைவிரல்களை 'நெட்டி' முறிக்கும்போது ஏற்படும் சத்தத்துக்குக் காரணம்...நம் உடம்பில் நைட்ரஜன் வாயுவில் உள்ள குமிழ்கள் உடைவதே.
- இரத்த ஓட்டம் இல்லாத மனித உடலில் உள்ள ஒரே பாகம்...கண்விழித்திரை. அது நேரடியாக காற்றில் இருந்து ஒட்சிசனை எடுத்துக்கொள்கிறது.


# காலத்தை வென்று பிரகாசியுங்கள்

**தோ**ல்வியும் மனத்தளர்வும் எல்லோருக்கும் சகஜம் என்றாலும், வெற்றியாளர்களுடைய சோர்வும், மனத் தளர்வும் மிகக்குறுகிய காலமே அவர்களிடம் காணப் படுகின்றன. அவர்கள் மிக வேகமாக அதிலிருந்து மீண்டு விடுகிறார்கள். இந்த விஷயத்தில் தான் தோல்வியாளர்கள் முக்கியமாக வித்தியாசப்படுகிறார்கள். இவர்கள் அந்த நிராகரிப்பை ஏற்றுக் கொண்டு பின் வாங்கி விடுகிறார்கள். பின் அந்தப்பக்கம் தலை வைத்தும் படுப்பதில்லை.

உண்மையில் ஒரு துறையில் பேரார்வம் உங்களுக்கு இருக்குமானால், நீங்கள் அதில் ஏதோ சாதித்துப் பிரகாசிக்க முடியும் என்று அர்த்தம். மற்றவர்கள் உங்கள் ஒளியை மறைத்து விட முடியாது. உங்கள் பேரார்வமும், அது தூண்டும் உழைப்புமாகச் சேர்ந்து உங்களைத் தீபமாகப் பிரகாசிக்க வைக்கும். அப்படித் தீபமாகப்பிரகாசிப்பது பெருமைக்கும், பாராட்டுக்கும் உரிய விஷயம் தான். ஆனால் நீங்கள் அணையும் முன் பல தீபங்கள் ஏற்ற உதவியாக இருந்தால் உங்கள் ஜோதி நீங்கள் அணைந்த பின்னும் பல தீபங்களாக ஒளிவீசிக் கொண்டேயிருக்கும். நீங்கள் காலத்தை வென்று பிரகாசித்துக் கொண்டிருக்க முடியும்.



இறைவன் உங்களை அவசரப்படுத்துவதில்லை. இப்படி ஆடு, அப்படி ஆடு என்று உங்களை நிர்ப்பந்திப்பதில்லை. எப்படிக் காய்களை நகர்த்துகிறீர்கள் என்பதில் உங்களுக்கு பூரண சுதந்திரம் உண்டு. நீங்கள் காய்களை நகர்த்தும் வரை இறைவன் பொறுமையாகவே காத்திருக்கிறான். ஒரு முறை நகர்த்திய பிறகு வாபஸ் வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்வதற்கு இந்த ஆட்டத்தில் இடமில்லை. அதேசமயம் நீங்கள் காய்களை நகர்த்திய பிறகு அதை வைத்து இறைவன் காயை நகர்த்தும் போது அதை விமர்சித்தால் இறைவன் பொருட்படுத்துவதில்லை. இறைவனைப் பொறுத்த வரை நீங்கள் காய்களை நகர்த்துவதில் தான் உங்கள் சாமர்த்தியத்தைக் காட்டுகிறீர்களே ஒழிய உங்கள் கருத்துகளுக்கு இந்த ஆட்டத்தில் இடமில்லை. இறைவன் கண்டிப்பாக விதிகளை மீறுவதில்லை. தப்பாட்டம் ஆடுவதில்லை. நீங்களும் அப்படியே ஆட வேண்டும் என்ற அடிப்படை நாணயத்தை உங்களிடம் அவன் எதிர்பார்க்கிறான். ஆனால் கண்ணுக்குப் புலப்படாதவன் அசந்திருப்பான், கவனிக்க மாட்டான் என்று நீங்கள் அழுகுணி ஆட்டம் ஆடினால் நீங்கள் தோற்பது உறுதி. விதிகளுக்கு புறம்பாக ஆடத்துவங்கும் போதே உங்கள் தோல்வி தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. இந்த ஆட்டத்தின் சுவாரசியமான அம்சமே,



இந்த ஆட்டம் எத்தனை காலம் நீடிக்கும் என்பதை நீங்கள் அறியாதது தான். ஆட்டம் திடீரென்று எந்த நேரமும் இறைவனால் முடித்து வைக்கப்படலாம். இறைவனாக முடிக்கிற வரை எப்படி ஆடிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை வைத்துத் தான் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படுகிறது. ஆட்டத்தை உற்சாகமாகவும, நேர்மையாகவும்,புத்திசாலித்தனமாகவும் ஆடிக் கொண்டிருக்க முடிந்தால் ஆட்டத்தில் நீங்கள் வெற்றியடைந்து விட்டீர்கள் என்று அர்த்தம். தந்திரமாகவோ, வஞ்சக மாகவோ, முட்டாள்தனமாகவோ ஆடி வந்தால் தோல்வி யடைந்து விட்டீர்கள் என்று அர்த்தம். இந்த வாழ்க்கை தான் உங்களுக்குக் கிடைக்கும் ஒரேயொரு மிகப்பெரிய சந் தர்ப்பம். இது முடியும் போது எல்லாமே முடிந்து போகிறது.

# ஊழல் புரிந்தவர்களும் அமைச்சர்களாகின்றனர்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, மார்ச் 31

தேசிய அரசு என்ற ரீதியில் பல நடவடிக்கைகள் நிறுத்தப்படுகின்றன. ஊழலைக் கண்டுபிடிக்கப் போகின்றோம் என்று புறப்பட்டார்கள். ஆனால் தற்போது ஊழலுக்குரியவர்கள் சிலர் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களாக மாறுகின்றார்கள் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட முறக்கொட்டாஞ்சேனை இராம கிருஸ்ண மிஷன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலைகளைப் பொருத்த மட்டில் நாம் எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பல்வேறு சேவைகளைச் செய்து வருகின்றோம். அது மட்டுமல்லாது தற்போது கிழக்கு மாகாண சபையில் கல்வி அமைச்சைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்றிருப்பதால் அதன் மூலம் எமது தேவைகளை இயன்றளவு மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எமது மாகாண கல்வியமைச்சர் எமது மாகாணத்தை வளப்படுத் துவதில் மிகவும் முனைப்புடன் இருக்கின்றார். பாடசாலைகளுக்கு என்ன தேவை இருக்கிறது. மாணவர்களை எவ்வாறு கல்வி ரீதியாக மேம்படுத்தலாம் எமது சமுகத்தைக் கல்வியில் எவ்வாறு முன்கொண்டு வரலாம் என்கின்ற நிலைப்பாட்டில் அவர் இருப்பதால் எதிர்காலத்தில் எமது மாகாண சபையினூடாக எமது கல்வி நிலையை உயர்த்த முடியும் என எதிர்பாக்கின்றோம்.

எமது பாடசாலைகளில் இன்னும் இராணுவம் குடிகொண்டிருக்கின்றது. ஆனால் முன்பு பாதுகாப்பின் நிமித்தம் அரச கட்டடங்கள் பாடசாலைகளில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. ஆனால் தற்போது எதுவித போர்ச் சூழலும் இல்லாத காலம் என்று கூறப்படும் போது ஏன் இந்த இராணுவங்கள் இன்னும் அரச கட்டடங்கள், பாடசாலைகளில் இருக்க வேண்டும். அந்த ரீதியில் எமது முறக்கொட்டாஞ்சேனை பாடசாலையில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும். பாடசாலை நடவடிக்கைகளுக்காக அவை கையளிக்கப்பட வேண்டும். நான் விரைவில் பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்து எமது பாடசாலைகளில் இருக்கும் இராணுவ முகாம்களை அகற்றுவது தொடர்பில் கலந்துரையாட இருக்கின்றேன்.

நாம் மட்டக்களப்பில் பல இடங்களை இனம் கண்டிருக்கின்றோம். முறக்கொட்டாஞ்சேனை பாடசாலை, குருக்கள்மடம் பாடசாலை உட்பட இன்றும் புனாணையில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட வேண்டிய மக்களின் சொந்த உறுதிக் காணியில் இராணுவத்தினர் இருக்கின்றார்கள்.

தற்போது இந்த நாட்டில் ஒரு சீரான நிலை இருக்கின்றது என அரசாங்கம் கூறுகின்றது. அத்துடன் இந்த ஆட்சி மாற்றத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெரும் பங்களிப்பைச் செய்திருக்கின்றது. அந்த வகையில் அவர்கள் எமக்கு உரியவற்றை வழங்க வேண்டும். எமது நீதியான கோரிக்கைகளை அவர்கள் தீர்க்க முன்வர வேண்டும்.

இன்று அரசின் மத்தியில் பாரிய விமர்சனம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவராக யாரை நியமிப்பது என்பது பற்றி விமர்சனங்கள் நாடாளுமன்றத்திலும் அதற்கு அப்பாலும் பேசப்படுகின்றன. இதில் விசேடம் என்னவென்றால் நாம் ஒரு தேசிய இனம் நாங்கள் தமிழர்கள் நாம் சிறுபான்மை இனம் அல்ல. அதனை நான் ஒரு போதும் ஏற்றுக்கொள்பவனும் இல்லை. அது போலவே இஸ்லாமிய மக்களும் இந்த நாட்டில் தேசிய இனம் தான்.

எனவே இரண்டு தேசிய இனங்களும் இன்று ஒத்துக் கொண்டிருக்கின்றது. நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித்தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தான் வரவேண்டும் என ஏற்றுக் கொண்டுள்ளன. உண்மையிலேயே நாடாளுமன்றத்தில் நாங்கள் மூன்றாவது இடத்தில் இருக்கும் கட்சி. முதலாம், இரண்டாம் இடத்தில் உள்ள கட்சிகள் இணைந்து ஆட்சி அமைத்தால் மூன்றாவது கட்சியே எதிர்க்கட்சியாக வேண்டும்-என்றார். (த-40)

# அமைச்சுப் பதவியை துறக்கிறார் கரலியத்த

கொழும்பு, மார்ச் 31

புத்த சாசன மற்றும் ஜனநாயக ஆட்சி பிரதியமைச்சராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முன்னிலையில் பதவியேற்றுக்கொண்ட திஸ்ஸ கரலியத்த, அந்த பிரதியமைச்சர் பதவியை துறக்கப்போவதாகத் தெரிவித் துள்ளார்.

அரசினால் அவசரமாக வழங்கப்பட்ட இந்தப் பிரதியமைச்சர் பதவியை தான் துறக்கப்போவதாகவும், தன்னுடைய ஆதரவாளர்கள் எதிர்ப்பதனாலும்- அவர்களுக்கு விருப்பம் இன்மையினாலும் இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாங்கள் எவருமே எதிர்ப்பார்க்காத விடயங்கள் எங்களுடைய மத்திய குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. எதிர்பார்க்காத அமைச்சுப் பதவிகளுக்கு நாம் நியமிக்கப்பட்டோம். அன்று நான் சாரமும் சேர்ட்டும் அணிந்திருந்தேன். அமைச்சுப் பதவியை ஏற்பதற்குச் சென்றிருந்தால் தேசிய உடையிலேயே சென்றிருப்பேன்.

மத்திய குழுவில் இருந்த 20 பேரில் 17 பேர், இந்த அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்குமாறு என்னிடம் கேட்டுக்கொண்டனர். எனினும், அமைச்சுப் பதவியை நான் பொறுப்பேற்றமை குறித்து மதவாச்சித் தொகுதியிலுள்ள 70 கிராமங்களுக்கு சென்று கேட்டேன். அதற்கு அவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றால் வாக்குகளைப் பெறுவதற்கு கிராமங்களுக்கு வரவேண்டாம் என்றும் கிராமத்தவர்கள் தெரிவித்தனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கு நான் சென்றுவிட்டதாக சிலர் தெரிவிக்கின்றனர். நான், மக்களின் விருப்பங்களுக்கு மதிப்பளிக் கின்றேன். புத்தசாசன அமைச்சுக்கு கரு ஜயசூரிய பொருத்தமானவர். எனினும், அவர் கடும் முட்கள் நிறைந்த பாதையிலேயே பயணிக்கின்றார் என்றும் அவர் கூறினார். (த).




பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர்

**செல்வநாயகம் சதீஸ்குமார்**

B.BA F.M SP PGDE, PG Dip In Spl-Edu, MEd

அவர்கள் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 26.03.2015 இல் நடைபெற்ற தேசிய கல்வி நிறுவக பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி (MEd) பட்டம் பெற்றமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

ஆசிரியர் நலன்புரிக்கழகம்.

(58272)(4.7) யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.



உளமார வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், தீவகக் கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகருமான

**பாலசுந்தரம் ஜெயரூபன்**

அவர்கள் 26.03.2015 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி (MED) பட்டம் பெற்ற ஆசிரியரை வாழ்த்தி நிற்பதுடன் மேலும் பட்டங்கள் பெற்று உயர்வடைய வாழ்த்தி நிற்கின்றோம்.

Best Wishes

பாடசாலைச் சமூகம்
யா/நாரந்தனை றோ.க மகாவித்தியாலயம்
ஊர்காவற்றுறை.

மருதடியான் துணை

**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்
மஞ்சத்திருவிழா விஞ்ஞாபனம்**

மருதடியான் அடியவர்களே!

மருதடியானுடைய மஹோற்சவம் கடந்த 22.03.2015 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உற்சவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்று (31.03.2015) செவ்வாய்க்கிழமை 10ஆம் திருவிழா மஞ்சத் திருவிழா காலை 9.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி பகல் 12.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையுடன் சுவாமி உள்வீதி வலம்வருதல் நடைபெறும். தொடர்ந்து வழமைபோல் அன்னதானம் இடம்பெறும்.

மாலை 5.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையைத் தொடர்ந்து 6.30 மணிக்கு அழகாக வர்ணம் தீட்டப்பெற்று புது மெருகு ஊட்டப் பெற்ற திரு மஞ்சத்தில் எம்பெருமான் விசேட மேளக்கச்சேரியுடன் வீதி வலம் வருகின்ற தெய்வீகக் காட்சியும் இடம்பெறும்.

மெய்யடியார்கள் இறைவனது அற்புதக்காட்சியைக் காண்பதற்கு மருதடியான் பெருங்கோயில் நாடிவந்து சுவாமியைத் தரிசனம் செய்து பெரும் பேறு அடைவீர்களாக.

தர்மகர்த்தா சபை,
மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய்.

**விற்பனைக்குண்டு**

**மோட்டார் சைக்கிள்கள்**

1. HUNK - NPBAO-XXXX
2. PHOENIX 125 - NPBAL-XXXX
3. DELUXE - NPBAQ-XXXX (KILINOCHCHI)
4. PASSION PRO - NPBAQ-XXXX (KILINOCHCHI)

**முச்சக்கர வண்டிகள் (BAJAJ)**

1. NPHL-XXXX (AUTO RE 2 STROKE)
2. NPQE-XXXX (AUTO RE 2 STROKE)
3. NPYD-XXXX (AUTO AR4S)

தொடர்புகளுக்கு:
மேனகாந் 0773644409/0770608074
KILINOCHCHI-0773414740/0212280108

TRADE FINANCE AND INVESTMENTS PLC
74 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9997, 021 222 1898

TV களி மலிவு விற்பனை

SONY Wega Flat 14"-5000/=, 21"-10000/=, 25" - 14000/=, SONY DVD-3000/=, ரேடியோ சசெற்-3000/=, BOX, குளிர்சாதனப்பெட்டி-20000/=

சோனி ரேற்ட் சென்ரர்
(கொமர்ஷல் வங்கி எதிரில்) (58061)(4.3.7)
56, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். T.P: 077 044 0570

**Nalin Information Technologies (PVT) ltd**

**வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு!**

எமது நிறுவனத்தில் திருத்த வேலைகளுக்காக 01.01.2015 தொடக்கம் 01.03.2015 வரையான காலப்பகுதியில் ஒப்படைத்து இதுவரை மீளப்பெறப்படாத பொருட்களை அவற்றிற்குரிய பற்றுச்சீட்டுகளை சமர்ப்பித்து எதிர்வரும் 01.04.2015ம் திகதிக்கு முன்னதாக மீளப்பெற்று உதவும் வண்ணம் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பொறுப்பேற்கத் தவறும் எதுவித பொருட்களிற்கும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் நிர்வாகம் பொறுப்பேற்காது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

ஒத்துழைப்பிற்கு நன்றி.

நளின் சேவை மையம்

NALIN Information Technologies Pvt Ltd
195/4, Parameswara Junction, Palaly road, Thirunelveli
222-1166 | 0777667974 | nalin/it

பாராட்டி வாழ்த்துகின்றோம்



நகுலேஸ்வரன் மைதிலி தம்பதியரின் அன்பு புதல்வியும், யாழ். வேம்படி உயர்தர பாடசாலை மாணவியுமான

**செல்வி. ந. லலிதாஜினி**

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சையில் 8A,B பெறுபேற்றினை பெற்று சித்தியடைந்தமையை பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல சாதனைகளை புரிய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாசமிகு:
மாமா, மாமி, அம்மம்மா மற்றும் குடும்பத்தினர்,
ஆனந்தன், சிவராஜினி

Best Wishes

மைதிலி நகைமாடம்
89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# வேம்படி 28 பேர், யாழ்.இந்து 18 பேர் ஜி.சி.ஈ சாதாரண தரத்தில் 9 ஏ சித்திகள்.

யாழ்ப்பாணம் மார்ச் 31.
ஜி.சி.ஈ சாதாரண தரப்பெறுபேறுகள் நேற்று வெளியாகின. இதனடிப்படையில் யாழ்ப்பாணத்தில் யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 28 பேர் 9 ஏ சித்திகளுடன்முதலாம் இடத்திலும், யாழ். இந்துக்கல்லூரியில் 18 பேர் 9 ஏ சித்திகளுடன் இரண்டாம் இடத்திலும் உள்ளன. கிளிநொச்சியில் கிளிநொச்சி மத்திய கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது. முல்லைத் தீவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது. மன்னாரில் மன்னார் சென். சேவியர் பெண்கள் கல்லூரி முதலிடத்தில் உள்ளது. வவுனியா மாவட்டத்தில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி முதலிடத்தில் உள்ளது.

## யாழ்ப்பாணம்

**யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி –9ஏ**
சி.கிருத்திகா, த.லக்ஷுஶ்ரீகா, இ.ஆர்த்தி, ச.மாதங்கி, தே.சுதனிகா, உ.கஜனி, மு.காஜத்திரி, க.கம்சனா, ச.கஸ்தூரிகா, யோ.சிவானி, இகிருஸ்னாகினி. யோ.சங்கவி, இ.சரண்யா, ச.சாரங்கா, சி.திவாகரி, பா.திவ்ஜா, க.கனிஸ்டியா, சி.அபினஜா, ர.ஆதித்தியா, இ.யோகினி, யோ.கேசினி, வி.லூசியா நிரோஜினி, க.மாதுரி, ச.மதுஷஜு, அ.நிரூஜா, ம.பிருந்தினி, சு.சுபநிலா, சா.தேனுஷா.

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி –9ஏ**
ஏ.ஆரங்கன், பிமிஷாந், எஸ்சண்முகபவான், கே.சிறீதுசன், எம்.வக்சாலன், ஆர்.நிதூசன், எஸ்.சிவகுமார், ஆர்.சோபன், எஸ்.ராகுலன், எஸ்.சாரங்கன், எஸ்.திவாகரன், பி.வைகுந்தன், வி.விக்னாகயன், ஆர்.ஹரிஹரன், எஸ்.இந்துஜன், ரி.தக்சாஜன், எஸ்.ஜனுஜன், சந்திரசேகரன் முகுந்தன்.

*ஹாட்லிக் கல்லூரி –9 ஏ*
கே.புவின்தாஸ், கே.ராகுலன், எஸ்.துளசியன், ஜே.துஸ்ஜந்தன், எஸ்.சுகிர்தன், எஸ்லலிதாகாந்தன், எஸ்.அனோஜ், கேகவிதாஸ், ஆர்.ராகவன், ஆர்.தனீசன், பி.கனிமருதன்.

*சாவகச்சேரி இந்துக்கல்லூரி– 9ஏ*
ரவீந்திரன் மதுஸா, விஜயதாசன் மதனிகா, யோகநாதன் அனோஜன், சிவானந்தம் சோபனா, தனபாலு பிரதீபன், கனகதுரை தர்சன், இரவிக்குமார் விஹானி, சிவராஜா மேனகா.

*கொக்குவில் இந்துக்கல்லூரி*
எஸ்.தர்சாகினி 9 ஏ, வி.சாரங்கா 9 ஏ, எஸ்.இந்துஜன் 8ஏ,பி

*மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை*
பி.துஜிதா 9ஏ, எஸ்.சிந்துஜா 9ஏ, ரி.சங்கவி 9ஏ

*உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை*
எஸ்.வினோதினி 8ஏ,பி, கே.பவனிதா 7ஏ,2பி, பி.பவித்திரா 7ஏ,2பி.

*வடமாராட்சி இந்து மகளிர் கல்லூரி*
ச.திவிசா 9ஏ, ச.துர்க்கா 9ஏ, சு.விஜேந்தினி 9ஏ, சி.சங்கவி 9ஏ.
வல்வை மகளீர் கல்லூரி
கே.கோபிகா 5ஏ,பி,3சி
ஏ.கிருஷாந்தி 4ஏ,2பி,3சி.

*நெல்லியடி மத்திய கல்லூரி*
த.அபிசேகா 9ஏ, கி.யுவேகா 9ஏ, பா.பவித்திரா 8ஏ,பி, ஸ்ரீ.நிவேதன் 8ஏ,பி.

*வடமாராட்சி. பெண்கள் மத்திய கல்லூரி*
யு.தர்சனா 9ஏ, எம்.சங்கீர்த்தனா 9ஏ, வி.ஜானகி 9ஏ.

## மன்னார்

*மன்னார் சென்.சேவியர் பெண்கள் கல்லூரி*
ச.மதுசாயினி 9ஏ, சோ.நிதுசா 9ஏ, செ.வேயின் 9ஏ, ரி.ஜேரோமி 9ஏ.

*மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி*
ஏ. நிவேதன் 8ஏ,பி அருண்பிரசாத் 8ஏ,பி றியான்; 8ஏ,பி, வென்தரன் 8ஏ,பி

*மன்னார் கருங்கண்டல் றோ.க.த. ம.வி.*
ஏ.ஜெனார்த்தன் 7ஏ,2பி மெரின் தெயத்தா 3ஏ,3பி,சி,2எஸ் சி.தட்சாயினி 2ஏ,3பி,2சி,

*மன்னார் ஆண்டான்குளம் அ.த.க பாடசாலை*
எஸ் மதுசன் 4ஏ,2பி,2சி,எஸ் எம்.ஜெஸ்மின்கதிஜா 4ஏ,2பி,சி, 2எஸ்.

*மன்னார் பெரியமடு ம.வித்தியாலயம்*
செ. மேரிசெல்சியா 2ஏ,4பி,சி, 2எஸ்.

*மன்னார் இலுப்பக்கடவை அ.த.க பாடசாலை*
ரி. ரவிகாந் 2ஏ,2பி,2சி,2எஸ்.

*மன்னார் இலுப்பைகடவை புனித ஜோசவாஸ் ம.வி*
ஏ.கௌசலா 2ஏ,3பி,2சி,எஸ்.

*மன்னார் வட்டக்கண்டல் அ.த.க பாடசாலை*
சி. லக்சிகா 4ஏ,2பி,2சி
எஸ்.யசோதா 3ஏ,3பி,சி,2எஸ்

*மன்னார். சின்னப்பண்டி விரிச்சான் அ.த.க பாடசாலை*
யே.டில்சனாசெரோ ஏ,3பி, 2சி,எஸ்.

*மன்னார் தேவன்பிட்டி றோமன் கத்தோலிக்க த.க.பா*
ச.சகாயவேகினி 2ஏ,3பி,2சி,எஸ்.

*மன்னார். பேரிண பண்டிவிரிச்சான் அ.த.க பாடசாலை*
யே. பிறிஞ்சியா 2ஏ,4பி,2சி,எஸ்

## கிளிநொச்சி

*கிளிநொச்சி மத்திய கல்லூரி*
இ.சாரலன் 8ஏ,சி,நா.கிசோதரன் 8ஏ,எஸ், வே.நவயுகன் 4ஏ,4பி, எஸ்,மோ அக்ஸயன், 4ஏ,3பி,2சி சி. லக்ஸன், 4ஏ,3பி,சி,எஸ்,ம.பிரசாந், 4ஏ,3பி,சி,த.தர்சிகன் 4ஏ,2பி, 2சி,எஸ்,ம.சிறீவானி 4ஏ,2பி, 2சி,எஸ்,யோ.துஸ்யந்தி 4ஏ, 3சி, 2எஸ்.

*கிளிநொச்சி இந்து கல்லூரி*
ச.பிரமிலன் 5ஏ,3பி,சி,ப.நவநீதன் 5 ஏ , 3 பி , சி , எ ஸ். ஜெனித்தா 5ஏ,3பி,சி,சி.தர்மிலா 5ஏ,3பி,சி

*கிளிநொச்சி சென். திரேசா பெண்கள் கல்லூரி*
அட்சயா 8ஏ,பி, யதுர்சனா 5ஏ, 3பி,சி, திசாந்தினி 4ஏ,3பி,2சி, சந்துஜயா 4ஏ,பி,2சி,எஸ், டிலக்ஸனா 4ஏ,பி,2சி,எஸ், யோகிதா 4ஏ,2பி,2சி

*முழங்காவில் மகாவித்தியாலயம்*
ந.அகல்யா 8ஏ,சி, மு.தர்மிலன் 6ஏ,2பி,எஸ்,சி.மெல்கி 3ஏ, 2பி, 2சி,எஸ் ,வி.நிறோஜன் 2ஏ,3பி, 3சி ரூ.டுயஸ்ருபீன்சன் 2ஏ,3பி,சி, 2எஸ்.

*பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம்*
யோ.டினோஜன் 4ஏ,பி,2சி,எஸ், வி.கயல்விழி ஏ,2பி,3சி,2எஸ்

*பூநகரி மதியகல்லூரி*
ஈ.கீர்த்திகா 8ஏ,எஸ் ,பா.நீலாம் பரி 6ஏ,2பி,த.தமிழ்பிரியன் 5ஏ,பி, 2சி,எஸ்

*செல்லையாதீவு அ.த.க பாடசாலை*
ச. டினோயா ஏ,பி,3சி,3எஸ்

*வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம்*
ந.தமிழந்தன் 3ஏ,பி,3சி,எஸ், புதிவியா 3ஏ,பி,3சி,எஸ், சு.மதுசன் 2ஏ,3பி,சி,2எஸ்

*இராமநாதபுரம் மகாவித்தியாலயம்*
எம்.நுர்மிகா 8ஏ,பி

## முல்லைத்தீவு

*புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி*
சி.தர்சீகன் 9ஏ, ச.மதுரன் 9ஏ, அ.திருக்குமரன் 9ஏ.

*உடையார் கட்டு மகா வித்தியாலயம்*
எஸ்.சயித்தா 8ஏ,சி, சி.கர்ணிசன் 8ஏ,சி,இ.பாவலன் 6ஏ,2பி,சி.

*முல்லைத்தீவு மகாவித்தியாலயம்*
அ.மதனராணி 6ஏ,3பி
ம.குபிலன் 6ஏ,2பி,சி

## வவுனியா

*றம்பைக்குளம் மகா வித்தியாலயம் –9ஏ*
ம.கம்சனா, தே.இலக்கியா, ச.கேதிகா, தி.திவ்ஜா, சூ.சகோசினி, சி.நிலானி, வ.நிதுர்ஷஜு, தா.தனுராகவி.

*நெடுங்கேணி மகா வித்தியாலயம்*
*க.சிந்துயா 5பி,2சி*

*புதுக்குளம் மகா வித்தியாலயம்*
சுகிர்தன் 7ஏ,பி,சி, யதுர்ஷா 7ஏ,பி,சி

*கனகராஜன்குளம் மகாவித்தியாலயம்*
பி.தரன்சிகா 6ஏ,2பி,சி, சி.அபிசாளினி 3ஏ,3பி,சி,எஸ்.

*புளியங்குளம் இந்துக் கல்லூரி*
ச.வாமினி 3ஏ,3பி,சி,எஸ்

*குளவிசுட்டான் ம.வி.*
ச.விதுர்ஷா 5ஏ,2பி,2சி, ம.துர்க்கா 4ஏ,2பி,2சி

*ஓமந்தை மத்திய கல்லூரி*
சி.நித்தியதாரணி 4ஏ,பி,3சி,எஸ், கி.நிலானி 4ஏ,பி,2சி,2எஸ், ரி.நிவேதா 3ஏ,பி,2சி,2எஸ்.

*சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்*
கணேஸ்வரி 4ஏ,பி,2சி,2எஸ்.

*சின்ன அடம்பன் பாரதி வித்தியாலயம்*
அ.அஞ்சனா ஏ,4பி,சி.

*கல்மடு மகா வித்தியாலயம்*
கலையரசன் 4ஏ,3பி,சி.

*கோவில் புளியங்குளம் முத்தமிழ் மகா வித்தியாலயம்*
என்.நளாயினி 4ஏ,4பி,சி
(த–ரி–21–108–109)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 14.03.1932

இறைவன் அடியில் 02.03.2015



**அமரர் கதிரவேலு பொன்னம்பலம்**

கடந்த 02.03.2015 இல் இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்ப தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நாளை (01.04.2015) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும்.
இந்த நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை மேற்கு, மீசாலை. குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்கள்

### பரமநாயகம் ஒலிவர் குணராஜ்



நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாயகம் ஒலிவர் குணராஜ் நேற்று (30.03.2015) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமநாயகம்-மகிழ்மணி தம்பதியரின் அன்பு மகனும், ஜெயமலரின் அன்புக் கணவரும், வலறின் பிரதீபா (ஆசிரியை-கைதடி நவின்ஸ் பாடசாலை), டொறின் ஜெயதீபா (ஆசிரியை-அக்கராயன் மகா வித்தியாலயம்), கிறிஸ்மி ஜெகதீபா (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சண்டிலிப்பாய் பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சான் பெனட், சுரேஸ் ஆகியோரின் அன்பு மாமனும், ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31.03.2015) செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

(58284) (10)

---

### திருமதி தனலட்சுமி ஓங்காரசோதி



மாதகல் மேற்கைச் சேர்ந்த திருமதி தனலட்சுமி ஓங்காரசோதி 29.03.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா-யோகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஓங்காரசோதியின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசரட்ணம் மற்றும் இராசகுமார் (இந்தியா), கதிரமலைராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுகந்தி (மலேசியா), துஷ்யந்தி (இந்தியா), வாசுகி (ஜேர்மனி), நளாயினி (பிரான்ஸ்), சிவயோகினி (லண்டன்), தயாளினி (இந்தியா), பராங்கதன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும், தணிகைக்குமார் (மலேசியா), கபிலன் (ஜேர்மனி), நந்தகுமார் (பிரான்ஸ்), ஜெயரூபன் (லண்டன்), காலஞ்சென்ற சுரேஸ்குமார் மற்றும் பிறேமிளா (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியும், தனுஷா, பிரஷா, குகதீசன், தேவி பிரியா லக்சுமி பிரவீன், றம்மியா, கஸ்தூரி, தனுஷன், அபிக்குட்டி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2015) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு மாதகலில் நடைபெற்று, பூதவுடல் மாதகல் போதி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
பிள்ளைகள்
(0776872822)

மாதகல் மேற்கு, மாதகல்,
சங்கக்கடை (அருகில்)

(C/17286) (10)

# ஊழல் பேர் வழிகள் தேர்தலில் வேண்டாம்

## அர்ஜுண ரணதுங்க ஜனதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 31

நாடாளுமன்றத் தேர்தலின் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள ஊழல் பேர் வழிகளுக்கு வேட்பு மனுக்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டாமென அமைச்சர் அர்ஜுண ரணதுங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கெட்ட மனிதர்களிடையே நல்ல மனிதர்களையல்ல நல்ல மனிதர்களிடையில் நல்லவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கே அடுத்துவரும் தேர்தலில் மக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டியுள்ளதாகவும், அதன் மூலமாகவே கடந்த ஜனவரி 8 ஆம் திகதி பெற்ற அரசியல் வெற்றியை பேணிக் காத்துக் கொள்ள முடியுமெனவும் அந்தக் கடிதத்தில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

குடும்ப ஆதிக்கமொன்றிலிருந்து மீண்டெடுத்துள்ள இந்த நாட்டை மீளவும் குடும்ப ஆதிக்கமொன்றுக்குள் கொண்டு வருவதற்கான சதி முயற்சிகள் இன்று களமிறக்கப்பட்டு வருவதோடு கடந்த காலத்தில் மக்கள் பணத்தைச் சூறையாடிய தரப்பினர் உடைகளை மாற்றி புதிய உடைகளை அணிந்து கொண்டு மீளவும் மக்கள் பணத்தைச் சூறையாடுவதற்கு முயற்சித்து வருவதாக வும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி 8 இல் தங்களது தலைமையில் இலங்கையின் வரலாற்றிலேயே மாபெரும் திருப்பமொன்று ஏற்பட்டுள்ளது. முதற்தடவையாக வடக்கிலும் தெற்கிலுமுள்ள அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் சமூகங்களை ஒரே குறிக்கோளை நோக்கி இட்டுச் செல்வதற்குத் தாங்கள் திறன் பெற்றுள்ளீர்கள். ஒன்றுக்கொன்று முரணான அடையாளப்படுத்தல்களைக் கொண்டுள்ள இரு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூட இன்று ஒரே மேசையில் அமர்ந்து பேசி ஒருமைப்பட்ட தீர்மானங்களுக்கு வருவதற்கு தங்களது தலைமைத்துவம் வழிசமைத்துள்ளது. அதற்குச் சமமான விதத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான வேட்பு மனுக்களை வழங்கும் விடயத்தில் ஒரே மேசையில் அமர்ந்து பேசி நாட்டுக்கு நலன் பயக்கும் தீர்மானங்களை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுப்பதாகவும் அமைச்சர் அர்ஜுண ரணதுங்க தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(த-22)

## கைலாசபிள்ளையார் ஆதீனகர்த்தா நேற்றுக் காலமானார்

நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலய பிரதம குருவும் ஆதீன கர்த்தாவுமான மணிக்குருக்கள் (வைத்தீஸ்வரக் குருக்கள்) நேற்றுத் திங்கட்கிழமை காலமானார்.

யாழ்ப்பாண இராஜதானியின் ஆரியச் சக்கரவர்த்தியால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ கைலாசநாதர் ஆலயத்தின் ஆதீனகர்த்தாவாக வும் பிரதம குருக்களுமாகப் பணிசெய்தோரின் வாரிசான மணிக்குருக்கள், மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஆலயத்தின் ஆதீன கர்த்தாவாகவும் பிரதம குருவாகவும் தொண்டாற்றியவர்.

அவரது தகனக்கிரியைகள் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் இடம் பெறும். (அ)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

---

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை பரமலிங்கம்



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பரமலிங்கம் 28.03.2015 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை கண்மணி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை-நவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஈசு என்று அழைக்கப்படும் ஈஸ்வரியின் அன்புக் கணவரும், கலைச்செல்வி (நோர்வே), மயூரன் (பொலீஸ் உத்தியோகத்தர்), தர்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கபிலன் (நோர்வே), சுகுமார் செந்தூரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சச்சிதானந்தன், சற்குருநாதன் மற்றும் சண்முகநாதன் ஆகியோரின் சகோதரனும், பாலசுப்பிரமணியம், இந்திராணி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜசிக்காவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2015) புதன்கிழமை இல.08, செம்மணி ஒழுங்கை A.V றோட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(58283) (10) தகவல் : குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்



மலர்வு 17 . 08 . 1934

உதிர்வு 29 . 03 . 2015

### திரு.பொன்னுத்துரை திலகதாஸ்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்டவரும் பாராளுமன்ற ஹன்சாட் பத்திரிகையில் ஆசிரியராக பணிபுரிந்தவருமான திரு.பொன்னுத்துரை திலகதாஸ் 29.03.2015 ஞாயிற்றுக்கிழமை அன்று தெஹிவளையில் காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னுத்துரை, சரஸ்வதியின் அன்புப் புதல்வரும் லீலாதேவியின் அன்புக் கணவரும் சசிலா, கிரிஜா, சந்திரபால், பாஸ்கரன், காலஞ்சென்ற நடேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மலர்தேவியின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிவசேகரத்தின் மைத்துனரும் சுரேஷன், முரளிதரன், அபிராமி, ரோஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும் டிலன், கிரன், ஜனன், தானியா, விதுஷன், தனஞ்ஜெயன், வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும் கோபிகிருஷ்ணா, கோகுலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வியாழக்கிழமை 02.04.2015 அன்று காலை 10.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்


தகவல் : மனைவி,பிள்ளைகள்

இல.17,எபனேசர் பிளேஸ்,தெஹிவளை.தொ.பேசி : 0112723100

---

## மரண அறிவித்தல்

### வித்துவான் ஆ.தா.ஆறுமுகம் B.A.



(ஓய்வுபெற்ற அதிபர் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப்பிறப்பிடமாகவும், கயந்தப்பை கொல்லங்கலட்டி, சோடக்கன் இளவாலை, நியூசிலாந்து ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை ஆறுமுகம் 29.03.2015 ஞாயிற்றுக்கிழமை நியூசிலாந்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-சின்னக்குட்டிப்பிள்ளை தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான கந்தவனம்-சேதுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவஞானாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இளமுருகன் (முன்னாள் விரிவுரையாளர் பொறியியல் பீடம், பேராதனை பல்கலைக்கழகம்) மற்றும் இளங்கோ (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நியூசிலாந்தில் வதியும் நிர்மலா, கணேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும், நியூசிலாந்தில் வதியும் மீனநயனி (மதுரா), அரவிந் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, கனகசுந்தரம், வன்னித்தம்பி, செல்லத்துரை, செல்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2015) புதன்கிழமை வெலிங்டன் நியூசிலாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
இளவாலை.

நியூசிலாந்து :- 006447923442 (58276) (10)

---

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கலட்சுமி (தங்கம்) பாலசுப்பிரமணியம்

பிறப்பு 04 . 11 . 1950



இறப்பு 30 . 03 . 2015

வவுனியா, பூந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கலட்சுமி (தங்கம்) பாலசுப்பிர மணியம் 30.03.2015 திங்கட்கிழமை காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் பாலசுப்பிரமணியம் (Former Superintendent Surveyor) அவர்களின் அன்பு மனைவியும், மதிவண்ணன் (பொறியியலாளர் கட்டார்), தாரிணி (Q5 -Water Board Colombo), Dr.மைதிலி (National Hospital Colombo), அவர்களின் அன்புத் தாயாரும், சமறிமதிவண்ணன் வைகுந்தன் (Reginal manager Coconut Development Board), Dr.லக்ஸ்மன் (National Hospital Colombo), அவர்களின் அருமை மாமியாரும், காலஞ்சென்ற தர்மலிங்கம்+ செல்லம்மா தம்பதியரின் புத்திரியும், எழுதுமட்டுவாழைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறு முகம் சின்னம்மா அவர்களின் மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா இல்லத்தில் நடைபெறும். தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கல்வியற்கல்லூரி வீதி,
பூந்தோட்டம்,
வவுனியா.

தகவல்:
Dr.தனுசன்
077 077 0176

(56244)(4.3.7)

---

## ஸ்ரீ கைலாசப்பிள்ளையார் கோயில்
## (மூன்றாம் கைலாயம்)



### பிரம்மஸ்ரீ கு.மணிக்குருக்களின் கைலாசபதப்பிராப்தி அறிவித்தல்

(மரண அறிவித்தல்)

யாழ்ப்பாண இராஜதானியை நிறுவிய சிங்கை ஆரியச்சக்கரவர்த்திகளின் இராஜகுருவாகவும் நல்லூர் ஸ்ரீ கைலாச நாதரின் ஆதீன குருவாகவும் இருந்த ஸ்ரீ கெங்காதர ஐயரின் வம்சத்தில் வந்தவரும் நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவிலின் பிரதமகுருவும் ஆதீனகர்த்தாவுமாகிய பிரம்மஸ்ரீ கு.மணிக்குருக்கள் (வைத்தீஸ்வரக்குருக்கள்) தேகவியோகமடைந்தார்.

அன்னார் மேற்படி தேவஸ்தான பரம்பரை ஆதீன கர்த்தாவாக இருந்த காலஞ்சென்ற குருசாமிக்குருக்கள் சீதாலட்சுமி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், கமலாதேவி, காலஞ்சென்ற குமாரசாமிக்குருக்கள் மற்றும் சகுந்தலாதேவி, சறோஜாதேவி, காலஞ்சென்ற பாலகிருஷ்ணசர்மா மற்றும்சுந்தரலக்ஷ்மி, கோபாலன்சர்மா, ஜானகிதேவி காலஞ்சென்ற யோகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாவித்திரி அம்மா, லஷ்மிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகசுலோசனா, மீனலோஜினி, ஜெயலட்சுமி, விஜயலட்சுமி, யோகாம்பிகை, விஜயாம்பிகை, ஆனந்தகுருசாமிசர்மா, லலிதாதேவி ஆகியோரின் சித்தப்பாவும், மைதிலிதேவி அன்னபூர்ணா, கைலாஷ்சர்மா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், ந.கெங்காதரக்குருக்கள், சி.சிவபாலசர்மா, பா.சுந்தர்ராஜசர்மா, சா.சிவபாலசர்மா, இ.சுப்பிரமணிய சர்மா, ஜெ.விசாகன் சர்மா, ஆ.ஜீவஹர்ஷிணி, எம். நடராஜன்சர்மா ஆகியோரின் அன்பு மாமனும், ஸ்ரீ கணேஷ்சர்மா, ஸ்ரீ.அபிராமி, சி.ஸ்ரீவத்ஸ சர்மா, சி.விஸ்வாதிகா, சு.மைத்திரேயன்சர்மா, சு.வார்ஷேயன்சர்மா, சி.சாம்பவி, சி.கார்த்திகன், சு.ஐங்கரன், சு.ஸ்ரீகரன், வி.வருண்சர்மா, வி.வர்ஷி, ஆ.சின்மயீ, ஆ.தருணி, ந.தீட்சிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, புகழுடல் செம்மணி இந்து மயானத்தில் அக்னியுடன் சங்கமமாகும்,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் மற்றும் ஸ்ரீ கைலாச விநாயகர் மெய்யடியார்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
கு.கோபாலன்சர்மா,
கு.ஆனந்தகுருசாமிசர்மா,
ஆதீனகர்த்தாவும் பிரதமகுருவும்,
ஸ்ரீ கைலாசப்பிள்ளையார் கோயில்,
யாழ்ப்பாணம்.

(58274) (10)

## ஐ.நாவின்

கடந்த ஜனவரி மாதம், மைத்திரிபால தலைமையிலான அரசு பதவியேற்ற பின்னர், இலங்கைக்கு வந்துள்ள ஐ.நாவின் முதலாவது உயர்மட்டப் பிரதிநிதி இவராவார். (ந–5)

## மீனவர்

பிரச்சினை குறித்து தனியானதொரு சந்திப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்கமைய, நாளை மறுதினம் காலை ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் சந்திப்பு நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பில், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர், வடக்கு மாகாணத்திலுள்ள மீனவர் சங்கங்கள் கலந்து கொள்ளவுள்ளன. இந்தச் சந்திப்பில், வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து முழுமையாக ஆராயப்படவுள்ளது.

இதற்கு மேலதிகமாக, தமிழக மீனவர்கள் – இலங்கை மீனவர்கள் இடையில், கடந்த வாரம் சென்னையில் பேச்சு நடத்தப்பட்டது. இந்தப் பேச்சின் போது, இந்திய மீனவர்கள் தரப்பில் ஆறு அம்சத் திட்டம் முன்வைக்கப்பட்டது. குறிப்பாக, மூன்று ஆண்டுகளுக்கு இலங்கை கடற்கரையிலிருந்து 5 கடல் மைல் தொலைவில், ஆண்டுக்கு 83 நாள்கள் மீன்பிடிக்க அனுமதி கோரும் யோசனையும் உள்ளடங்குகின்றது. இது குறித்து தீர்மானிப்பதற்கு, இலங்கை அரசு கால அவகாசம் கோரியிருந்தது. இந்த விடயம் குறித்தும் இந்தக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ந–5)

## தமிழர்

அமெரிக்க செனட் குழு உறுப்பினர்கள், வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் வடக்கு மாகாண சபையினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அதன்போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், வடக்கில் எவ்வாறான நிலைமைகள் காணப்படுகின்றது என்பது தொடர்பில் ஆராய்வதற்காக, வடக்குக்கு பயணம் மேற்கொண்டதாக, அமெரிக்க செனட் உறுப்பினர்கள தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பிரதானமாக இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டினர். காணி மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பிலேயே அதிகம் கலந்துரையாடினர்.

புதிய அரசு பதவியேற்ற பின்னர் காணிகள் விடுவிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. சில காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் அந்த நடவடிக்கைகளில் வேகம் போதாது. மக்களின் காணிகளை உடனடியாக விடுவிப்பதற்குரிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. ஆனால் அதனை அரசு செய்யவில்லை. காணி உரித்து மாகாண சபைக்கு உரியதாக இருக்கின்ற போதிலும், அதனை இன்னமும் வழங்கவில்லை.– என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

கடந்த அரசும் இதே போன்று மாகாணத்துக்கே உரித்தான காணி அதிகாரத்தை வழங்கவில்லை. தற்போதைய அரசு அதனை எங்களிடம் வழங்கினாலேயே பெரும்பாலான காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க முடி யும்.– என்றும் அவர்கள் குறிப்பிட் டனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தாமதிக்கப்படுகின்றது. பொது மன்னிப்பில் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும். ஆயினும் அரசு அதனைச் செய்ய முன்வரவில்லை. தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு வீணடிக்கப்படுகின்றது.– என்றும் வடக்கு மாகாண சபையினர் சுட்டிக்காட்டினர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அமெரிக்க செனட் உறுப்பினர்கள், இப்பொழுதுதான் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. உடனடியாக விளைவுகளை எதிர்பார்க்க முடியாது. படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. எனவே தொடர்ந்தும், சரியான விடயங்கள் நடக்கும் என்று பதிலளித்தனர். (ந–5)

## இப்படி

உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்குக்கு மூன்று நாள் பயணமாக வந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த சனிக்கிழமை மாலை, கீரிமலையில் அமைக்கப்பட்டு வரும் ஜனாதிபதி மாளிகையைச் சென்று பார்வையிட்டிருந்தார். அதன்பின்னர் நேற்றுக் கொழும்பில் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

“மஹிந்த அரசின் மோசடிகள் பல உள்ளன. இது தொடர்பில் நாம் விசாரணை செய்துவருகின்றோம். இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சு, திறைசேரி, கணக்காய்வாளர் திணைக்களம் என்பன தமது கடமைகளை நிறைவேற்றவில்லை. இவை தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. நாம் இந்த ஊழல், மோசடி குறித்து விசாரணை நடத்திவருகின்ற நிலையில், குற்றவாளிகளைப் பாதுகாக்கின்றோம் என்று சிலர் கூறுகின்றனர். இடம்பெற்றுள்ள மோசடிகளைக் கண்டுபிடிக்க நாம் மேற்கொள்ளும் விசாரணைகள் குறித்து எவரும் பேசுவதில்லை. நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உள்ளது. அதனால், இந்த வேலைகளை நாடாளுமன்றம்தான் செய்யவேண்டும்.”– என்றும் அவர் குறிப்பிட்டார்.

“மஹிந்த அரசு யாழ்ப்பாணத்தில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் அரச மாளிகையை அமைத்துள்ளது. இது போன்ற அரச மாளிகையை எமது மக்கள் வாழும் இடங்களில் அமைக்க முடியாது. அப்படிச் செய்தால் சிங்கள மக்கள் நாட்டைவிட்டு விரட்டியிருப்பார்கள். தமிழ் மக்கள் இன்றுவரை பொறுமையாக இருந்தது பெரிய விடயம்”– என்றும் அவர் கூறினார்.(ந–5)

## ஆதரவற்ற

அதையடுத்து குறித்த பாதிரியார் தலைமறைவாகியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

சிறுமிக்கு ஒரு இளைய சகோதரனும் உண்டு. பெற்றோர் இல்லை. அதனால் சிறுமி இல்லம் ஒன்றில் தங்கியிருந்தார். அங்கிருந்து சிறுமியை மருத்துவர் ஒருவரும் அவரது தாயும் அழைத்துச் சென்று வளர்த்து வந்தனர். சகோதரனை வேறு யாரோ அழைத்துச் சென்றனர். அதன்பின்னர் சில ஆண்டுகள் கடந்ததும் மருத்துவர் வெளிநாடு சென்றுவிட்டார். அவரின் தாயால் சிறுமியைப் பராமரிக்க முடியவில்லை. அவர் சிறுமியை மீண்டும் இல்லம் ஒன்றில் ஒப்படைத்தார். அதன்பின்னர் குறித்த போதகர் சிறுமியைத் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று வளர்த்து வந்துள்ளார். அந்தப் போதகருக்கு மனைவியும் உள்ளார்.

போதகரின் மனைவி வீட்டில் இல்லாத சந்தர்ப்பங்களில் சிறுமியை அவர் துஷ்பிரயோகத்துக்குட்படுத்த முயன்றார் என்று கூறப்படுகின்றது. இது 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடந்துள்ளது என்றும் கூறப்படுகின்றது. அதன்பின்னர் போதகர் வெளிநாடு சென்றுள்ளார். 2012ஆம் ஆண்டு அவர் மீளவும் திரும்பி வந்துள்ளார். அதன்பின்னர் சிறுமியை அவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்ச்சியாக நடந்து வந்த நிலையில் சிறுமி கடந்த வாரம் இதுகுறித்து வெளியே கூறியுள்ளார்.

அதையடுத்து சிறுமி முன்னர் வளர்த்தவர்களின் உதவியுடன் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்துள்ளார் விடயம் வெளியானவுடன் குறித்த போதகர் கொழும்பு சென்றுவிட்டார் என்று கூறப்படுகின்றது. அதன்பின்னர் அவர் வீடு திரும்பவில்லை. அவர் தலைமறைவாக உள்ளார் என்று பொலிஸார் கூறுகின்றனர். (ந–4,421)

## உரிமைகள்,

“ஐக்கிய நாடுகள் சபை எட்டுக் கருத்துக்களை நல்லாட்சிக்குரிய குணாம்சங்கள் என்கிறது. ஐக்கியப் பாட்டுடன் ஆட்சி நடத்துதல், பங்குபற்றலுடன் ஆட்சி நடத்துதல், சட்டத்திற்கு அமைவாக ஆட்சி நடத்துதல், பயன் அளிப்பதாகவும் திறனுடையதாகவும் ஆட்சி நடத்துதல், பதிலளிக்குந்தன்மைக்கு அமைவாக ஆட்சி நடத்துதல், வெளிப்படையான தன்மையுடன் ஆட்சி நடத்துதல், மக்கள் மனமறிந்து ஆட்சி நடத்துதல் மற்றும் நேர்மையாகவும் அணைப்புடனும் ஆட்சி நடத்துதல் என்பவையே அவை.

ஐக்கியப்பாட்டுடன் ஆட்சி நடத்துவது என்பது எமது செல்நோக்குகளை, இலக்குகளை எல்லோரும் புரிந்து கொண்டு முன் செல்லல் என்பதாகும். ஆட்சியில் அதன் அலகுகளான ஆசிரியர்களும் அதனுள் ஏற்கப்படுகின்றீர்கள். பங்குபற்றல் என்று கூறும்போது எந்த ஒரு முரணான கருத்துடையவர்களையும் புறந்தள்ளி வைக்காது இருத்தலாகும். எல்லோர் கருத்தையும் நாம் ஏற்று நடக்க முடியாவிட்டாலும் கருத்துக்கு மதிப்பளித்து அவரின் கருத்தை மறுதலிக்கலாம்.

சட்டத்துக்கு அமைவாக ஆட்சி நடத்தப்பட வேண்டும். எமது ஆட்சி முறை பயனளிப்பதாகவும் திறனுடையதாகவும் இருக்க வேண்டும். அது ஆசிரியர்களாகப் போகும் உங்களுக்கு முற்றிலும் பொருந்தும்.”– என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

### பதிலளிக்க வேண்டும்

“பதிலளிக்கும் தன்மை என்பது மிக முக்கியமானது. நாங்கள் அரச ஊழியர்கள் அல்லது அதிகாரத்தில் உள்ளவர்கள். ஆகவே எங்களை எவரும் கேள்வி கேட்க முடியாது என்று நடப்பது எமக்குத் தலைகுனிவையும் தோல்வியையும் தரும். எமது நடவடிக்கைகளை விமர்சனத்துக்கு உள்ளாக்குவது எமது நன்நடத்தையை வெளிக்கொண்டுவருவதற்கு ஏதுவாக அமையும். ஆனால் தவறான, பிறழான விமர்சனங்களை மக்கள் அரசியல் காரணங்களுக்காகவும், பொறாமையாலும், பொறுக்கமாட் டாத் தன்மையாலும் முன்வைக்க எத்தனிக்கின்றார்கள். எனவே பதில ளிக்குந் தன்மையைக் கைவிடலா காது.”– என்றும் முதலமைச்சர் தெரி வித்தார்.

“வெளிப்படைத்தன்மை தொடக்கத்திற்குரியது என்றால் பதிலளிக்குந் தன்மை முடிந்தபின் எழுவது. நாம் வெளிப்படைத்தன்மையுடன் நடந்து கொள்கின்றோம் என்றால் எமது நடவடிக்கைகள் சட்ட, சம்பிரதாய, நியாயத்துக்கு அமைய இருக்க வேண்டும். எப்பொழுது நாங்கள் வெளிப்படைத் தன்மையைப் புறக்கணிக்கின்றோமோ அப்பொழுது எதோ ஒரு சுயநலங் கலந்த நன்மையை பெற உத்தேசித்துள்ளோம் என்று அர்த்தம்.”– என்றும் அவர் குறிப்பிட்டார்.

“நேர்மையற்ற எமது செயல்கள் யார் யாரையோ பாதிக்கும் என்பதை மறக்கக் கூடாது. தான்தோன்றித் தனமாக நடந்து கொள்வது ஈற்றில் வருத்தத்தையே தரும். தான்தோன்றித் தனமாக நடந்து கொண்டவர்கள் மக்களால் தூக்கி எறியப்பட்டுள்ளார்கள். பட்டதாரிகளான நீங்கள், ஆட்சி முறை பற்றியும் அதிலுள்ள அதி சூட்சுமங் கள் பற்றியும் அறிந்திருப்பது அனைவருக்கும் நன்மை பயக்கும்.”– என்றும் முதலமைச்சர் தெரிவித் தார். (ந–4)

## யாழ். உட்பட

மற்றும் ரயில்வே நிலையம் ஆகியவற்றில் முதல்கட்ட மாக இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் போது, மைத்திரிபால சிறிசேனவின் நூறு நாள் திட்டத்தில் இலவச ‘வை–பை’ சேவையும் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கமைய இந்தத் திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், கொழும்பு, பொலநறுவை, காலி, அம்பாந்தோட்டை, கண்டி, இரத்தினபுரி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலேயே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சம்பிரதாய நிகழ்வு, கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் நடைபெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில், தொலைத்தொடர்பு மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் கலந்து கொண்டார். தனி நபர் ஒருவருக்கு ஒரு செக்கனுக்கு 512 கிலோபைட் என்ற அடிப்படையில் இணைய வேகம் கிடைக்கும் வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இது இணைய நெரிசலைப் பொறுத்து மாறுபடும். மேலும், எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னதாக ஆயிரம் பொது இடங்களில் இலவச ‘வை–பை’ சேவை ஆரம்பிக்கப்படும்.

தற்போது, கொழும்பு கோட்டை ரயில் நிலையம், புறக்கோட்டை பொது மற்றும் தனியார் பஸ் நிலையங்கள், கண்டி தலதா மாளிகை, கொழும்பு கோட்டை மிதக்கும் சந்தை, கொழும்பு சட்டக்கல்லூரி, கொழும்பு பொது நூலகம், தெஹிவளை மிருகக்காட்சிச் சாலை, கொழும்பு குதிரைப் பந்தயத் திடல், கொழும்பு பொலிஸ் தலைமையகம், காலி, யாழ்ப்பாணம் ரயில் நிலையங்கள், கோட்டை டச் வைத்தியசாலை, காலிமுகத்திடல், பத்தரமுல்லையிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், கொழும்பு அருங்காட்சியகம், கராப்பிட் டிய வைத்தியசாலை, இரத்தினபுரி அருங்காட்சியகம், பொலன்னறுவை ஆதார வைத்தியசாலை, மாத்தறை பஸ் நிலையம், பொலன்னறுவை பஸ் நிலையம், மிரிஜ்ஜாவில தாவரவியல் பூங்கா, யாழ்ப்பாணம் பொது நூலகம், கண்டி மற்றும் பேராதனை ரயில் நிலையம் ஆகிய இடங்களில் இலவச ‘வை–பை’ சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும். (ந–5)

## விபத்தில்

சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்தார். இந்த விபத்து கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் பகுதியில் நேற்று அதிகாலை 6 மணியளவில் நடந்துள்ளது. 31 வயதுடைய கிருஸ்ணபிள்ளை தயாளன் என்பவரே உயிரிழந்தவராவார். கிளிநொச்சி முட்கொம்பனில் இருந்து கிளிநொச்சி பஸ் நிலையத்துக்குப் பயணித்த அரசபஸ் ஸ்கந்தபுரம் கரும்பு பிள்ளையார் ஆலயத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த தயாளனை மோதியுள்ளது. அவர் உடனடியாக அக்கராயன் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும்போது உயிரிழந்தார். பஸ் சாரதியை அக்கராயன் பொலிஸார் கைது செய் துள்ளனர். (ந–21)

## டெங்கு பரவும்

செய்யப்பட்டு அவற்றில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் உடனடியாகவே அழிக்கப்பட்டன. 200 இற்கும் மேற்பட்ட இடங்கள் நுளம்புக் குடம்பிகளுடன் இனங்காணப்பட்டுள்ளன என்று யாழ்.பிராந்திய சுகா தார சேவைகள் பணிமனை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டுகளைப் போன்றே இந்த வருடமும் பருவமழையைத் தொடர்ந்து ஏப்ரல் மாதம் முதல் யூலை மாதம் வரையான காலங்களில் டெங்கு நோய் பரவும் ஆபத்துள்ளது. பருவ மழையின் முன் டெங்கு பரவும் இடங்களை அழிக்க வேண்டும். அதை நோக்காகக் கொண்டு சுகாதார அமைச்சு மார்ச் 26 முதல் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரையான காலப் பகுதியை தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தி பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்கள், பொது இடங்கள், குடியிருப்பு வீடுகள் போன்றவற்றின் சுற்றாடல்களில் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்கள் இல்லாதிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிமனை தெரிவித்துள்ளது. (ந–4)

## பஸிலை

நிதி மோசடி விசாரணை பிரிவுக்குச் சமூகம் அளிக்குமாறு உத்தரவிட கோரும் மனு அவரது சிரேஷ்ட சட்டத்தரணி யு.ஆர் டீ சில்வா சமர்ப்பித்திருந்தார்.

அந்த கோரிக்கையை நீதிவான் நிராகரித்ததுடன் முன்னர் விடுக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் செயற்பட்டுச் சந்தேகநபரை முன்னிலைப் படுத்துமாறும் அவர் சந்தேக நபரின் சட்டத்தரணிக்கு அறிவுறுத்தினார்.

சிரேஷ்ட சட்டத்தரணி யு.ஆர் டீ சில்வாவுடன் 20 சட்டத்தரணிகள் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு ஆதர வாக நீதிமன்றில் பிரசன்னமாயிருந்தனர்.

நிதி மோசடி முறைப்பாடு தொடர்பில் நிதி மோசடி பொலிஸ் விசாரணைப் பிரிவு இன்றி இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற நிதி மோசடி, கடந்த ஜனாதிபதி தேர்தலுக்காக திவிநெகும திணைக்களத்தின் ஊடாக பணம் செலவு செய்தமை, மாநாட்டுக்காக 70 மில்லியன் ரூபா செலவு செய்தமை மற்றும் 2006ஆம் ஆண்டு இலங்கைக்கு கொள்வனவு செய்யப்பட்ட மிக் விமானங்களில் நான்கை திருத்தியமைப்பதற்காக 145 இலட்சம் ரூபாவைச் செலவு செய்தமை உள்ளிட்ட நிதி மோசடிகள் பலவற்றுடன் அவர் தொடர்பு பட்டிருப்பதாக, நிதி மோசடி பொலிஸ் பிரிவில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுகவீனம் காரணமாக அமெரிக்காவுக்குச் சென்றுள்ள முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மீண்டும் இலங்கைக்கு திரும்புவதாக எதிர்பார்த்து இருப்பதாக அவர் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருந்த சிரேஷ்ட சட்டத்தரணி யு.ஆர் டீ சில்வா தெரிவித்தார். இதேவேளை, அவர், ஏப்ரல் மாதம் 20ஆம் திகதிக்கு பின்னர் நாடு திரும் புவார் என்று எதிர்பார்க்கப்படுகின் றது. (த)

## ரயில்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் செல்லும் யாழ்தேவி புகையிரதம் காலை 6.30 மணிக்கு யாழில் இருந்து புறப்படவுள்ளது.

அதேவேளை, மு.ப. 11 மணிக்கு யாழில் இருந்து செல்லும நகர் சேர் கடுகதி மு.ப. 10.10 மணிக்கு புறப்படும் அதேநேரம், இரவு 7.05 இற்கு புறப்படும் நேர தபால் புகையிரதம், இரண்டாம் திகதி முதல் இரவு 7 மணிக்கு தனது பய ணத்தை ஆரம்பிக்கும்.

அதேநேரம், கொழும்பில் இருந்து, யாழ்ப்பாணத்திற்கு மு.ப.7.15க்கு பயணத்தை ஆரம்பிக்கும் யாழ்தேவி மு.ப. 06.05க்கு அங்கிருந்து தனது பயணத்தினை ஆரம்பிக்கும்.

கொழும்பில் இருந்து 8.15 ற்கு பயணத்தினை ஆரம்பிக்கும் இரவு தபால் புகையிரதம் எதிர்வரும் 1 ஆம் திகதியில் இருந்து, 8.40 மணிக்கு புறப்படும். காலை 5.50 மணிக்கு பயணத்தினை கல்கிசையில் இருந்து ஆரம்பிக்கும் குளிரூட்டப்பட்ட கடுகதி புகையிரதம் 5.45 மணிக்கு கல்கிசையில் இருந்து புறப்படும்.

ஞாயிற்றுக்கிழமை மட்டும் மு.ப. 10 மணிக்கு யாழில் இருந்து புறப்படும் புகையிரதம் இரண்டாம் திகதிக்கு பின்னர், மு.ப. 9.10 மணிக்கு யாழில் இருந்து புறப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந–106)

## கீரிமலை

இந்த மாளிகையை ஆறு நட்சத்திர விடுதியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்த மாளிகை அரச, அரை அரச அல்லது வேறு பொருத்தமான நிறுவனங்களுக்கு, வழங்குவதற்கு அமைச்சரவையில் அனுமதி பெற்றுள்ள நிலையில் பிரதமர் ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இலவச ‘வை–பை’ சேவையை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“யாழ்ப்பாணம், கீரிமலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரச மாளிகையைக் கட்டியுள்ளார். 200 ஏக்கர் நிலப்பரப்பில், 200 கோடி ரூபா செலவில் இந்த மாளிகை கட்டப்பட்டுள்ளது. அந்த மாளிகையில் 10 அறைகளும், இரண்டு சாப்பாட்டு அறைகளும், ஒரு சமையலறையும் உள்ளன என்று குறிப்பிட்ட ரணில், சமையல் அறையிலிருந்து சாப்பாட்டு அறைக்கு அரை மைல் தூரம் உள்ளது. அப்படியாயின் எப்படிச் சுடச்சுட சாப்பிடுவது?”-- என்று சிரித்துக் கொண்டே கேள்வியெழுப்பினார்.

“ஜனாதிபதி தனக்கென்று ஓர் அறையை அமைத்துள்ளார். அந்த அறையிலேயே ஓர் ரயில் நிலையத்தை அமைத்து விடலாம். அந்தளவு விசாலமாக உள்ளது. ஜனாதிபதி அங்கு தனக்கு மட்டும் அப்படி அறை அமைக்கவில்லை. அங்கு தனது மனைவிக்கும் அவ்வாறு பெரிய அறை அமைத்துள்ளார். அதனை விட அங்கு மேலும் 4 சுகபோக அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதனைவிட ஜனாதிபதி நீச்சலடிப்பதற்கு தனியான நீச்சல் தடாகமும் அமைக்கப்பட்டுள்ளது.”– என்றும் அவர் தெரிவித்தார்.

“நான் உலகில் பல ஹோட்டல்களுக்குப் போயிருக்கிறேன். இந்த மாளிகையை பார்த்து, வாய் பிளந்து போனேன். பேசுவதற்கு ஒரு வார்த்தைகூட இல்லை. இது கிட்டத்தட்ட ஒரு சர்வதேச மாநாட்டு மத்திய நிலையம் போல உள்ளது. காங்கேசன்துறைக்கு ஏன் சர்வதேச மாநாட்டு மத்திய நிலையம் என்று நான் கேட்கிறேன். ஜனாதிபதியுடன் பேசி இதை 6 நட்சத்திர ஹோட்டலாக்க நடவடிக்கை எடுக்க உள்ளேன்.”– என்றும் அவர் தெரி வித்தார். அதேவேளை கடந்த மூன்றாம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி மைத்திரி, குறித்த மாளிகையைப் பார்வையிடச் சென்றிருந்தார். அதன் ஆடம்பரத்தை பார்த்து வெறுப்பில் அரைவாசியிலேயே வெளியேறியிருந்தார். (ந–5)

# 579 குடும்பங்கள் சொந்த இடத்துக்கு

### சம்பூர் மீள்குடியேற்றம் தொடர்பில் கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு

திருகோணமலை, மார்ச் 31

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சம்பூரில் இருந்து இடம் பெயர்ந்த 579 குடும்பங்கள் ஏப்ரல் மாத இறுதிக்குள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவர் என்று கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு வசதியாக அந்த இடத்தில் தற்போது உள்ள கடற்படைப் பயிற்சி முகாம் அருகில் வேறொரு இடத்துக்கு மாற்றப்படும். அந்தப் பகுதியில் இந்தியா மற்றும் ஜப்பானிய நிதியுதவியுடன், இரண்டு அனல்மின் திட்டங்களை நிறுவுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுடன் நான் கலந்துரையாடல் நடத்தியிருந்தேன். அவர்கள் அனல்மின் திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. எவ்வாறாயினும், அனல்மின் திட்டங்களைச் சுற்றிய பகுதிகளில், சுற்றாடல் பாதிப்புகள் இருக்கும். சுற்றாடல் பாதிப்புகள் குறித்த கரிசனைகளால் அனல்மின் திட்டப் பகுதிகளை அண்டி மீள்குடியேற்றம் இடம்பெறாது.

மொத்தமாக 822 குடும்பங்கள் 4 முகாம்களில் வசிக்கின்றன. அவற்றில் 579 குடும்பங்கள் சம்பூரைச் சேர்ந்தவை. தற்போது கடற்படைப் பயிற்சி முகாம் அமைந்துள்ள பகுதியில் தான் மீள்குடியேற்றம் இடம்பெறும். அது கடற்படையின் அடிப்படைப் பயிற்சி முகாமாகும்.

இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களில் பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றனர். இடம்பெயர்வதற்கு முன்னர், குறித்த பிரதேசத்தில் வசித்த மக்கள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். வாக்காளர் பட்டியலை அதற்கு பயன்படுத்தலாம். எம்மால் 579 குடும்பங்களை பரிசீலிக்க முடியும். வெளியில் இருந்து எவரையும் கொண்டு வரமாட்டோம். எனினும், இடம்பெயர்ந்த மக்கள் இழப்பீட்டைப் பெற்றிருந்தால், அவர்கள் மீளக்குடியேற முடியாது.

அந்தப்பகுதியில் அனல் மின் நிலையம் அமைப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 1, 500 ஏக்கர் நிலம் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த நிலத்தில், 800 ஏக்கரை திரும்பவும் பொதுமக்களுக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

மனிதாபிமான அடிப்படையிலேயே, இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மனிதர்கள் மனிதர்களாக மதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ-சி)



திருகோணமலை நகரசபையால் இவ்வருடம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய நுழை வாயிலின் கம்பீர தோற்றமே இது. இவ் நுழை வாயில் கிழக்கு மாகாணத்தின் தமிழர் பண்பாட்டின் கலை, கலாசார விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. (வ-40)

## த.தே.கூ. எதிர்க்கட்சியானால் நாம் ஆதரவு வழங்கத் தயார்

### கல்வி இராஜாங்க அமைச்சர் வவுனியாவில் தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 31

தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சியாகும் சந்தர்ப்பம் கிடைக்குமாயின் தமது ஆதரவு நிச்சயமாக இருக்கும். நானும் எதிர்க்கட்சி வரிசையிலேயே அமருவேன் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

வவுனியா, பூவரசன்குளம் மகா வித்தியாலயத்தில் தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை நேற்றுமுன்தினம் திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்:

தேசிய அரசில் இணைந்து கொள்ளாத தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஏன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கவேண்டும் என்று பேரினவாதிகள் கூறுகின்றனர். நாட்டின் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் நாம் வர முடியாத தேசிய இனங்கள். இவ்வாறு இருக்கையில் நாம் ஏன் எதிர்க்கட்சித் தலைவராக வரக் கூடாது?

தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சியாகும் சந்தர்ப்பம் வந்தால் நிச்சயமாக நாம் கைகொடுப்போம். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் நாமும் அமருவோம். வட பகுதியில் நிலவிய அதிகார பிரச்சினைகள் பல இன்று நீக்கப்பட்டு கடிவாளம் அகற்றப்பட்டு வருகிறது – என்றும் தெரிவித்தார். (வ)

## கம்பத்துடன் மோ.சைக்கிள் மோதுண்டு இருவர் சாவு

மட்டக்களப்பு, மார்ச் 31

மட்டக்களப்பு – வாழைச்சேனை பிரதான வீதியில் கிரான் சந்தியில் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர். இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 7மணியளவில் இடம்பெற்றது.

உயிரிழந்த இருவரும் கிரான் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் செங்கலடி நீர்ப்பாசன திணைக்களத்தில் பணிபுரியும் ஆதித்தன் (வயது–34) மற்றும் விநாயகம் ஜெயபிரதாப் (வயது–24) என்றும் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் வாழைச்சேனை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை – பொத்துவில் பிரதான வீதியில் நேற்று மாலை 7.30 மணியளவில் ஓட்டோ ஒன்று நாயுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி காயமடைந்தார். (வ)



மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற பங்குனித் திங்கள் திருவிழாவில் பக்தர்கள் காவடி, கர்பூரச்சட்டி எடுத்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்... (வ-105)

## மட்டுவில் பன்றித்தலைச்சி ஆலயத்தில் நடைபெற்ற பங்குனித்திங்கள் திருவிழா

கொடிகாமம், மார்ச் 31

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் பங்குனித்திங்கள் திருவிழா மிகவும் சிறப்பான முறையில் நேற்று இடம்பெற்றது.

தமிழ் விஜயவருடம் பங்குனி அம்மன் ஆலயங்களில் பெரும் விசேடமான திருவிழாக் காலமாகும். இந்த வகையில் யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியில் அமைந்துள்ள மட்டுவில் அம்மன் கோயில் 3 ஆவது பங்குனித்திங்கள் மகோற்சவ திருவிழா பல பூசகர்கள் இணைந்து மந்திரித்து பூசைகள் செய்ய, பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ காவடிகள், கற்பூரச்சட்டிகள் ஏந்தியவாறு பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். மறுபுறம் பக்தர்கள் சர்க்கரைப்பொங்கல், பாற்கஞ்சி, குழையல் சாதம் போன்றவற்றை பொங்கிப்படைத்து நேர்த்தியை நிறைவேற்றிக்கொண்டதுடன் மற்றைய பக்தர்களுக்கும் பகிர்ந்துண்டனர். (வ-105)

## ஆணின் சடலம் மீட்பு

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சவுக்கடி வேம்புப் பகுதியிலிருந்து சிதைவடைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் வெள்ளிக்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

உருக்குலைந்த நிலையில் காணப்படும் இந்தச் சடலம் 67 வயதுடைய ஏறாவூர் ஏ.கே.எம்.வீதியைச் சேர்ந்த இஸ்மாலெப்பை அலியார் வெள்ளத்தம்பியினுடையது என்று அடையாளம் காணப்பட்டது. (வ)

# அரசு அறிமுகப்படுத்திய தேர்தல் முறைமை தொடர்பில் கவனம் செலுத்த வலியுறுத்து

திருகோணமலை, மார்ச் 31

அரசால் அறிமுகப்படுத்தப்பட வுள்ள தேர்தல் முறையில் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் பாதிப்படையும். எனவே இந்த விடயத்தில் மலையக அரசியல் தலைமைகள் விசேட கவனம் செலுத்த வேண்டும். அது மட்டுமல்லாது, அரசியல் உரிமைகள், அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்கள் குறித்து இன்னும் சரியான முன்வைப்புகள் இடம்பெறவில்லை. எனவே, இது குறித்தும் நாம் சிந்திக்க வேண்டிய தேவை எழுந்திருக்கின்றது என்று மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் அ.லோரன்ஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

புதிய தேர்தல் முறை தொடர்பில் மலையகக் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் உரிய அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. இலங்கையில் உள்ள தேர்தல் தொகுதிகளில் ஒரேயொரு தேர்தல் தொகுதி மட்டுமே மலையக மக்களுக்கு உரியதாக இருக்கின்றது.

இலங்கையில் அதிகூடுதலான வாக்காளர்களைக் கொண்ட தேர்தல் தொகுதியாக நுவரெலியா– மஸ்கெலியா தேர்தல் தொகுதி காணப்படுகின்ற நிலையில் இதுவே மலையக மக்களுக்குச் சொந்தமான தேர்தல் தொகுதியாகவும் உள்ளது. இந்தத் தேர்தல் தொகுதியை மூன்று அல்லது நான்காகப் பிரித்து உறுப்பினர்களைத் தெரிவு செய்ய முடியும். இதனால் மலையக மக்களுக்கு நன்மை ஏற்படும்.

மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குறைந்தபட்சம் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களாவது தெரிவு செய்யப்படுதல் வேண்டும். நுவரெலியா மாவட்டத்தில் 6 தேர்தல் தொகுதியும் பதுளை மாவட்டத்தில் 2 தேர்தல் தொகுதியும், கண்டி மாவட்டத்தில் 2 தேர்தல் தொகுதியுமாக மொத்தம் 10 தேர்தல் தொகுதிகள் மலையக மக்களின் நலன்கருதி உருவாக்கப்படுதல் வேண்டும்.

கலப்பு முறை தேர்தலை உள்ளடக்கியே விகிதாசார முறையின் மூலம் மேலும் 6 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படல் வேண்டும்.

மலையக மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம், அரசியல் உரிமைகள், அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்கள் குறித்து சரியான முன்வைப்புகள் இடம்பெறவில்லை என்பதோடு இவை தொடர்பில் பேசப்படாதுள்ளன.

எனவே, இது ஒரு பேசுபொருளாக மாற்றப்பட வேண்டும். புதிய தேர்தல் முறை குறித்து விழிப்புடன் செயற்படாது மௌனம் சாதிப்போமானால் எதிர்காலத்தில் எமது சமூகம் பெரிய பின் விளைவுகளைச் சந்திக்க வேண்டி ஏற்படும்– என்று தெரிவித்தார். (வ-சி)

# அனல் பறந்தது இறுதியாட்டம் போராடி வென்றது அன்ரனிஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாண வெற்றிக்கிண்ணத்துக்கான பொறி பறந்த இறுதியாட்டத்தில் சமநிலை தகர்ப்பு உதைகள் கைகொடுக்க யங் கம்பன்ஸை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது பாசையூர் சென்.அன்ரனிஸ்

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம், யாழ் மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கிடையே நடாத்தி வந்த யாழ்ப்பாண வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாசை யூர் சென்.அன்ரனிஸ் விளையாட் டுக் கழகம் மோதியது.



ரசிகர்களின் ஆதரவு, சம பலமான வீரர்கள் இவ்றோடு சேர்ந்து வெற்றிக்கிண்ணம் என்ற ஒன்றும் ஒட்டிக்கொள்ள ஆட்டத்தில் விறுவிறுப்புத்தன்மை தானாகவே தொற்றிக்கொண்டது. ஆட்டத்தின் ஆரம்பத்தில் ரசிகர்களின் பேரிரைச்சல் ஆதிக்கம் செலுத்திய காரணத்தினால் இரு அணி வீரர்களும் சற்றுத் தடுமாற்றமடைந்தனர். இதனால் இரு அணிகளினதும் தடுப்புச்சுவர் சற்று பலவீனமாகவே காணப்பட்டது. முதல் பாதியில் கோல் பெறும் சந்தர்ப்பங்கள் இரு அணி வீரர்களுக்கும் தாராளமாகக் கிடைத்த போதிலும் எவையும் பயன்படுத்தப்படவில்லை. இதே நிலைமை நீடிக்க ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளும் எந்தவொரு கோலையும் பதிவுசெய்யவில்லை.

விறுவிறுப்புக்கள் அதிகரிக்க எதிர்பார்ப்புக்கள் இரட்டிப்பாக ஆட்டத்தின் இரண்டாம் பாதி ஆரம்பமானது. ஆட்டத்தின் முதல்பாதியில் இருந்த போராட்டத்தன்மை இரண்டாவது பாதியில் பல மடங்காக அதிகரித்துக் கொண்டது. பாசையூர் அன்ரனிஸ் அணியின் முன்கள வீரர் இலகுவாக கோல்பெறும் சந்தர்ப்பத்தை தவறவிட முடிவு சமநிலைதான் என்பது இரண்டாம் பாதியின் மத்திய நிமிடங்களிலேயே தெளிவானது. முடிவில் எந்த அணியாலும் எதிரணியின் கோல்கம்பங்களை ஆக்கிரமிக்க முடியவில்லை. இதனால் ஆட்டம் எதிர்பார்த்தபடி சமநிலையிலேயே முடிவுக்கு வந்தது. கடைசியில் கிண்ணத்தைச் சொந்தமாக்கப் போகும் அணி எது என்று தெரிவதற்காக சமநிலைத் தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. வாய்ப்பைக் கச்சிதமாக பயன்படுத்திய பாசையூர் சென்.அன்ரனிஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

ஆட்டநாயகன் விருதை பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் தீலிபனும், சிறந்த கோல் காப்பளருக்கான விருதை கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் கோல்காப்பளர் மகிந்தனும், தொடர்நாயகன் விருதை பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் கலிஸ்ரனும் பெற்றுக் கொண்டனர்.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

(த–ரி–23)

# கோப்பாய் ம.வி , சோமஸ்கந்தா பெண்கள் உதைபந்து ஹீரோக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்ட தொடரில் 15வயது, 17வயதுப் பிரிவு பிரிவில் கோப்பாய் மகா வித்தியாலய அணியும், ,19 வயது பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியும் வெற்றிபெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றின.

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டங்களில் 15வயதுப். பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் கோப்பாய் மகாவித்தியாலய அணியை எதிர்த்து உரும்பிராய் சைவதமிழ் வித்தியாலய அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் கோப்பாய் மகாவித்தியாலய அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. தொடர்ந்து இடம் பெற்ற 3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து அத்தியார் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி அணி 2:1என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

17வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் கோப்பாய் மகாவித்தியாலய அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலய அணி மோதிக் கொ[ண்]டது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் கோப்பாய் மகாவித்தியாலய அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. 3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியை எதிர்த்து உரும்பிராய் சைவத்தழிழ் வித்தியலாய அணி மோதிக் கொண்டது இந்த ஆட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமி டத்தை தனதாக்கிக் கொண்டது.

19வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி அணியை எதிர்த்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்[டத்]தில் புத்தூர் சேமஸ்கந்தாக்கல்லூரி அணி 2:0 என்ற செற்க்ணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. தொடர்ந்து இடம்பெற்ற 3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து முத்துத்தம்பி மகாவித்தியாலய அணி மோதிக் கொண்டது. இந்த ஆட்டத்தில் நீர்வேலி அத்தியார் கல்லூரி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

(த–ரி–23)

# ஹொக்கி ஆட்டங்களில் இனி வடக்கு நடுவர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 31.

யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை ஹொக்கிச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட ஹொக்கி மத்தியஸ்தர்களைத் தெரிவுசெய்வதற்கான தேசிய மட்டப் பரீட்சையில் வடமாகாணத்தில் தோற்றியவர்களில் 60 வீதமானோர் சித்தியடைந்திருப்பதாக ஹொக்கி சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தேசிய ஹொக்கி நடுவர்களைத் தெரிவுசெய்வதற்கான பரீட்சை வடமாகாணத்தில் முதல் தடவையாக கடந்த வருடம் பரியோவான் கல்லூரியில் நடைபெற்றது. இந்தப் பரீட்சைக்கு ஆண், பெண் இரு பாலாருமாக 80 பேர் பங்குபற்றியிருந்தனர். பங்குபற்றிய 80 பேரில் 48பேர் (60வீதமானோர்) சித்தி பெற்றதுடன் அவர்களுடைய பெயர் விபரமானது இலங்கை ஹொக்கி சம்மேளனத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

புதிய மத்தியஸ்தர்கள் தேர்வு தொடர்பாக இலங்கை ஹொக்கிச் சம் மேளனத்தின் செயலாளர் காமினி ஜெயசிங்க தெரிவிக்கையில், – 'மிக அதிகளவானவர்கள் ஆர்வத்துடன் கருத்தரங்கில் கலந்துகொண்டமை மகிழ்ச்சியளி[க்]கின்றது. பரீட்சையில் சித்திபெற்றவர்கள் சர்வதேச ரீதியிலான ஆட்டங்களுக்கு மத்தியஸ்தம் வகிக்கும் அளவுக்கு வரவேண்டும். உங்களது செயற்பாட்டில் நேர்மையான ஹொக்கி ஆட்டங்கள் அரங்கேற வேண்டும்.' என்றார்.

மேற்படி பரீட்சையில் ஆண்களில் ஶ்ரீ. ஶ்ரீறஜீவனும் பெண்களில் க. மதுஷாவும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்டதுடன் ஶ்ரீ. ஶ்ரீறஜீவன் ஏற்கனவே தேசிய மட்ட ஹொக்கி ஆட்டங்களுக்கு மத்தியஸ்தம் வகித்துவருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.(த–ரி–422)

# சென்.மேரிஸ், விக்னேஸ்வரா அடுத்த சுற்றுக்குள் நுழைவு

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரனையுடன் வளர்மதி விளையாட்டுக்கழகம் தனது 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வீனஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 8:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம் பெற்ற ஆட்டத்தில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. அதில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த–ரி–23)



# யங்ஹென்றிஸ் அசத்தல் வெற்றி


யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வளர்மதி விளையாட்டுக்கழகம் தனது 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத் தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை யங் ஹென் றிஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த–ரி–23)

# 20/20 உலகக்கிண்ணம் இந்தியாவில்




அடுத்த வருடத்துக்கான 20/20 உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஐ.சி.சி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

20/20 உலகக்கிண்ண தொடர் அடுத்த வருடம் இந்தியாவில் நடைபெறவுள்ளது என்ற விடயம் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தாலும் அவை ஐ.சி.சியின் உத்தியோகபூர்வ கருத்தாக அமையவில்லை. ஒரு உலகக்கிண்ணத் தொடர் முடிந்த பிற்பாடே அடுத்த உலகக் கிண்ணம் தொடர்பாக அனைத்து விளக்கங்களையும் ஐ.சி.சி வெளியிடும். இந்த அடிப்படையில் 2016 ஆம் ஆண்டின் 20/20 உலகக் கிண்ண தொடர் இந்தியாவில் நடைபெறவுள்ளதாக ஐ.சி.சி அறிவித்துள்ளது. சொந்த நாடுகளில் இடம்பெறும் தொடர்களில் அந்த கண்டத்தை சேர்ந்த நாடுகளே கிண்ணத்தை கைப்பற்றி வரும் நிலையில் உலகத்தின் அடுத்த எதிர்பார்ப்புஇந்தியா மீது திரும்பியுள்ளது. இதற்கான பிரத்தியேக இலட்சினையையும் ஐ.சி.சி வெளியிட்டுள்ளது.

(த–ரி)

# கிளார்க்கின் வழியில் ஹடின்

உலகக்கிண்ண இறுதியாட்டத்தோடு ஆஸ்திரேலியாவின் அணித் தலைவர் மைக்கல் கிளார்க் ஓய்வினை அறிவித்ததைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவின் அனுபவ வீரர் ஹடினும் ஓய்வினை அறிவித்துள்ளார்.

நியூஸிலாந்துடன் நடைபெற்ற இறுதியாட்டத்திவ் ஆஸ்திரேலியா மிக இலகுவாகக் கிண்ணத்தைக் கைப்பற்றி அசத்தியது. இந்த வெற்றிநடையுடன் ஆஸ்திரேலியாவின் கிளார்க் சர்வதேச ஒரு நாள் ஆட்டங்களுக்கு விடை கொடுத்தார். கிளார்க்கின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவின் இலக்குக்காப்பாளரும் அனுபவ வீரருமான ஹடின் தானும் ஓய்வினை பெறுவதாக அறிவித்துள்ளார். இது தொடர்பாக ஹடின் தெரிவிக்கையில்,



'கிளார்க்கைப் போலவே நானும் வெற்றியுடன் விடைபெற விரும்புகின்றேன். வெற்றியுடன் விடைபெறுவதென்பது பெரிய விடயமல்ல ஆனால் இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டே இந்த முடிவை எடுத்துள்ளேன். ஆஸ்திரேலியாவின் இளம் வீரர்கள் பலர் உள்ளார்கள். ஓய்வுபெற எண்ணும் வீரர்கள் இந்த வருடத்துடன் தமது முடிவை சீராக எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் இந்த வருடத்தில் அணிக்குள் இளம் வீரர்களை அறிமுகம் செய்தால்தான் அடுத்த உலகக், கிண்ண தொடருக்கு அவர்கள் தயாராக இருப்பார்கள்' என்றார்.

(ரி)

# கிண்ணத்துடன் மக்களை சந்தித்தது ஆஸ்திரேலியா





உலகக்கிண்ணத் தொடரில் கிண்ணம் வென்று நடப்புச் சம்பியன் அந்தஸ்தில் உள்ள ஆஸ்திரேலியா அணி நேற்று தனது ரசிகர்களிடத்தில் திறந்த வாகனங்களில் சென்றும் திறந்த வெளிகளில் நிகழ்ச்சிகள் நடத்தியும் மக்களை மகிழ்ச்சிப்படுத்தியது.

உலகக்கிண்ணத்தொடரின் பின்னர் கிண்ணம்வென்று நடப்புச் சம்பியன் அந்தஸ்தில் உயர்ந்த அணியை அந்த நாட்டு கிரிக்கட் கட்டுப்பாட்டுச்சபை திறந்த வாகனங்களில் அழைத்துச்சென்று மக்களிடத்தில் வீரர்களையும் கிண்ணத்தையும் காட்சிப்படுத்தி கௌரவிக்கும். ஆஸ்திரேலிய கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆஸ்திரேலிய வீரர்களையும் கிண்ணத்தையும் ஆஸ்திரேலியாவின் நெடுஞ்சாலைகளில் திறந்த வாகனங்களில் அழைத்துச்சென்று கௌரவித்ததுடன், மெல்போர்ண் திறந்த வெளி அரங்கில் ரசிகர்கள் வீரர்களை நேரில் சந்தித்து பார்வையிடவும் அனுமதித்திருந்தனர். கிண்ணத்துடன் வீரர்களை நேரில் கண்ட மக்களும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தனர். (த–ரி)

## கனவான் என்றால் மக்கலம்

உலகக்கிண்ணத் தொடரின் ஆஸ்திரேலியா கிண்ணம் வென்றாலும் கிளார்க் ஆட்டமிழந்து செல்லும் போது நியூஸிலாந்து அணித் தலைவர் மக்கலம் கொடுத்த மரியாதை ஏற்கனவே கனவான் தன்மையுடைய வீரர் என்று அழைக்கப்படும் அவரின் நிலையை இரட்டிப்பாக்கியுள்ளது.

உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து வெறும் 184 ஓட்டங்களையே வெற்றியிலக்காக நிர்ணயித்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா வெற்றியிலக்கை நெருங்கிக்கொண்டிருந்த பொழுது 20 பந்துப்பரி மாற்றங்களில் மேலதிகமாக 10 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் 74 ஓட்டங்களுடன் கிளார்க் ஆட்டமிழந்தார். கிளார்க்கின் இறுதியாட்டம் என்ற காரணத்தினால் தோல்வி உறுதி என்ற நிலையிலும் கிளார்க் ஆட்டமிழந்ததும் கிளார்க்கிடம் சென்று கரம் கொடுத்து அவருக்கு தனது ஆதரவினையும் ஆறுதலையும் தெரிவித்தார் மக்கலம். இந்தச் செயற்பாட்டை கிரிக்கட்டின் ஜாம்பவான்கள், ரசிகர்கள் பலரும் பெரிதும் பாராட்டியுள்ளனர். (த–ரி)

## வருத்தம் இல்லை



உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்தது தொடர்பாக எந்த வருத்தமும் இல்லை என்று …ஆஸிலாந்தின் அணித்தலைவர் மக்கலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மக்கலம் தெரிவித்ததாவது:–

கனவுகளோடு களமிறங்கிய நாங்கள் தொடர்ந்து சிறப்பாகவும், திரில்லாகவும் விளையாடி இறுதிச்சுற்று வரை முன்னேறிய பிறகு தோற்றிருக்கிறோம். அதனால் எங்களுக்கு எந்த வருத்தமும் இல்லை நாங்கள் களமிறங்கியபோதே ஆஸ்திரேலியா உலகக்கிண்ணத்தை கப்பற்றுவதற்கான ஆட்டத்தில் இறங்கிவிட்டது. உலக சாம்பியன் என்ற பெருமையோடு விடை பெறுவதற்கு மைக்கேல் கிளார்க் தகுதியானவர். நான் ஆட்டமிழந்த பந்து மிக வேகமாக சுழன்று வந்த பந்து. நாங்கள் திட்டமிட்டபடி எங்களால் செயல்பட முடியவில்லை. எனினும் நாங்கள் இரண்டாவது சிறந்த அணி என்ற பெருமையைப் பெற்றிருக்கிறோம்' என்றார். (த–ரி)

## சர்ச்சையில் ஹடின்

உலகக்கிண்ண தொடரின் இறுதியாட்டத்தில் நியூஸிலாந்து அணியை ஆஸ்திரேலியா இலகுவாக வீழ்த்தி கிண்ணம் வென்றது. இந்நிலையில், ஆஸ்தி ரேலிய அணியின் விக்கெட் கீப்பரான பிராட் ஹேடின், நியூஸிலாந்து அணியை தரக்குறைவாகப் பேசியுள்ளதுடன், தான் அவ்வாறுதான் பேசுவேன். நான் அவ்வாறு கூறியது சரிதான் என்றும் கூறிச் சர்ச்சையைக் கிளப்பியுள்ளார்.



நியூஸிலாந்து அணியின் வீரர்கள் மாட்டின் குப்தில் மற்றும் கிராண்ட் எலியொட் ஆகியோர் ஆட்டமிழந்து வெளியேறிய போது எதிரணியினரின் பலத்தை இழக்க செய்யும் வகையில் அவர்களை தரக் குறைவாகப் பேசினார் ஹடின்என்றுச்ச்சை எழுந்தது. இது குறித்து ஹடினிடம் கேட்டதற்கு, பிரண்டன் மக்கலமின் வீரர்களுக்கு இது தேவையானது. நான் அப்படி பேசியது சரியானது தான். அவர்கள் இறுதியாட் டத்தில் விளையாடத் தகுதி இல்லாதவர்கள்தான் என்று பதிலளித்துள்ளார். ஆட்டம் முடிந்த பின்னர் நியூஸிலாந்து அணி வீரர்களுடன் ஆஸ்திரேலிய அணி வீரர்கள் ஒன்றாக மது அருந்தியுள்ளனர். இதனை ஆஸ்திரேலிய அணி யின் வீரர்களில் ஒருவரான ஸ்ரிவன் ஸ்மித் கூறி தமது ஒற்றுமையைப் பெருமையாகத் தெரிவித்துள்ளார். ஆனால் ஹடின் இது தொடர்பாக தெரிவிக்கையில் 'இதற்கு முன்னர் ஆஸ்திரேலிய அணியினர் நியூஸிலாந்து நாட்டில் விளையாட சென்றிருந்தபோது அவர்கள் நம்மை எப்படி நடத்தினர். நியூஸிலாந்து அணிக்கு எதிராக மீண்டும் இறுதி ஆட்டத்தில் விளையாடும் வாய்ப்பு கிடைத்தால் அவர்கள் அனைவரையும் ஆட்டமிழக்க செய்வேன்' என கூறியுள்ளார். ஹடினின் இந்த சர்ச்சைகளால் சாதனையுடன் விடை பெற்றார் ஹடின் என்பதற்கு பதிலாகச் சர்ச்சையுடன் விடைபெற்றார் ஹடின் என்கின்றனர் கிரிக்கட்டின் ரசிகர்கள். (த–ரி)

## ஐ.சி.சியின் கனவு அணியில் சங்கா



உலகக்கிண்ண தொடர் முடிந்ததையடுத்து ஐ.சி.சி தனது கனவு அணியை அறிவித்துள்ளது இந்த அணியில் இலக்குக்காப்பாளராக குமார் சங்கக்கார இடம் பிடித்துள்ள அதேநேரம் இந்திய வீரர்கள் எவரும் இடம்பிடிக்கவில்லை.

உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் ஐ.சி.சி தனது அபிமான கனவு அணியை அறிவிப்பது அனைவரும் அறிந்ததே. அந்த வகையில் இந்த வருடம் வெளியாகிய கன்வு அணியில் அணித்தலைவராக மக்கலம் நியமிக்கப்பட்டுள்ளார். இலக்குக்காப்பாளராக சற்கா இடம்பிடித்துள்ளார். இவர்களை விட மார்டின் குப்தில், ஸ்டீவ் ஸ்மித், வில்லியர்ஸ், கிளென் மக்ஸ்வெல், கோரி ஆண்டர்சன், டேனியல் வெற்றோரி, மிட்செல் ஸ்டார்க், டிரெண்ட் போல்ட், மோர்னி மோர்கெல், ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். 12ஆவது வீரராக பிரெண்டன் டெய்லர் அறிவிக்கப்பட்டுள்ளார். இந்த அணியை தேர்வு செய்த ஐசிசி குழு, 'இதுதான் ஒரு சமநிலையான அணி, இந்த அணி எந்த அணியையும் இலகுவில் வீழ்த்த கூடியதாகும். தனது ஆக்ரோசமான, புதுவகை மற்றும் உத்வேகத் தலைமைத்துவத்தினால் 44 நாட்கள் நடந்த உலகக்கிண்ண தொடரில் நியூசிலாந்தை இறுதிக்கு அழைத்து வந்த மக்கலம் கப்டனாகத் தேர்வு செய்யப்பட்டார்' என்று தெரிவித்துள்ளது. கடந்த உலகக்கிண்ண தொடரில் அதிகப்படியான இந்திய வீரர்கள் கனவு அணியில் இடம்பெற்றிருந்த அதேநேரம் இந்த வருடம் எவரும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த–ரி)



## ஹோக்லியை ஆதரித்தார்
# யுவராஜ்

உலகக்கிண்ணத் தொடரில் போட்டியில் மோசமாகவிளையாடியதாக விமர்சனத்திற்குள்ளான விராட் ஹோக்லி மற்றும் அவரது காதலி அனுஸ்கா சர்மாவுக்கு யுவராஜ்சிங் ஆதரவு தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி ஆஸ்திரேலியாவை எதிர்கொண்டது. இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவுடன் போரிட்டு இந்தியாவின் வெற்றியை உறுதிப் படுத்துவார் என்று ஹோக்லியை நம்பியிருந்தார்கள் இந்திய ரசிகர்கள். ஆனால் சற்றும் எதிர்பாராத விதமாக ஹோக்லி ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். ஹோக்லி இவ்வாறு ஆட்டமிழந்ததற்கு கவனச்சிதைவே காரணம். கவனச்சிதைவுக்கு ஹோக்லியின் காதலி அனுஸ்கா சர்மாவே காரணம் என்று ரசிகர்கள் கண்டனம் தெரிவித்து வந்தனர். இந்த நிலையில் விராட் ஹோக்லி அனுஸ்கா ஆகியோருக்கு இந்திய அணியின் வீரர் யுவராஜ் சிங் ஆதரவு தெரிவித்துள்ளார். இது குறித்து ருவிட்டர் தளத்தில் கருத்து தெரிவித்துள்ள யுவராஜ்சிங், 'இந்திய ரசிகர்கள் விராட்ஹோக்லியை மதிக்க கற்றுக் கொள்ள வேண்டும். இன்னும் இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் அவர்தான். எதிர்காலத் தலைவரும் அவர்தான். விரைவில் அவர் மீண்டும் போர்முக்கு திரும்புவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவரது தனிப்பட்ட வாழ்க்கையும் கௌரவத்திற்குரியது. அதற்கேற்றவாறு ரசிகர்கள் நடந்து கொள்ள வேண்டும்' என்று கூறியுள்ளார்.

(ரி)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1113

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
ஆரம்பம் A/L - 2017
தொழில்நுட்பப் பிரிவு
புதிய வகுப்புக்கள்
04.04.2015
செயல்முறை கற்பித்தலுக்கான
அனைத்து வசதிகளும் கொண்ட வடக்கின் தனித்துவமான
முதல்தர தனியார் கல்வி நிறுவனம்.
0772487774

### மீள்குடியமர்வு தொடர்பான கலந்துரையாடல்

கிராம அலுவலர் பிரிவுகள்: வயாவிளான் மேற்கு (J 245)
வயாவிளான் கிழக்கு (J 244)
பலாலி தெற்கு (J 252)

இடம்: வயாவிளான் மத்திய கல்லூரி
காலம்: 03.04.2015
வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணி

அனைத்து கிராம மக்களும், பொது நிறுவனங்களும் இக் கலந்துரையாடலில் பங்குபற்றி ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கான ஒத்துழைப்பும், பங்களிப்பும் வழங்க முன்வருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வயாவிளான் மக்கள் சார்பில்
உ.சந்திரகுமாரன், வ.சந்திபசீலன்

(58260)(4.3.7)

### மரண அறிவித்தல்
### திருமதி மதிவதனி கந்தசாமி



வேலணை மேற்கு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மதிவதனி கந்தசாமி நேற்று (30.03.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தசாமியின் அன்பு மனைவியும், டர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்-வேலணை), பிரியா (கனடா), யமுனா (4ஆம் வருட மாணவி கலைப்பீடம்), செந்தூரி ஆகியோரின் அன்புத் தாயும், சந்திரகுமாரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2015) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக வேலணை அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

(C/17288) (10)

SPOKEN ENGLISH
தொழில்புரிவோர், இளைஞர், யுவதிகள், பல்கலை புகுமுக மாணவர்கள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
சனி, ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம் : 04.04.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 | பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 | பிரிவு 4 : மாலை 03.00-05.00
இலங்கையெங்கும் 7600 ஆசிரியர்கள், 20000 மாணவர்கள் கற்றும் பயன்பெற்ற பயிற்சிப்பாசறை.
பயிற்சிநெறி முடிவில் "DIPLOMA CERTIFICATE"
எமது கிளைகள்
சங்கானை 021 567 41 38
நெல்லியடி 021 3200 607
SAAMSON LANGUAGE SCHOOL
யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

FLC
FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்.
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 200
University இல் French விரிவுரைகளை பெற்று கொண்டவரும்)
Register now : 0779 789 456 / 021 221 7781
ஆரம்பம்: 04.04 சனி 10am No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 04.04 சனி 4pm. No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி
சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை

PHYSICS
PERSONAL CLASS
A/L-2017
ஆர 1.4.2015 புதன் 5.00PM
A/L - 2016
அலைகளும் அதிர்வுகளும்
ஆர 1.4.2015 புதன் 6.30AM
A/L - 2015
PAPER CLASS
வினாவிடை வகுப்பு
ஆர 1.4.2015 புதன் 6.30PM
• Group class ஆக படிக்க விரும்பியவர்கள் விரும்பிய பாட அலகை கற்கலாம்.
• SCIENCE CORNER இலும் வகுப்புக்களை படிக்க முடியும்.
ஆசிரியர் ம. ஸ்பெல்மன் (BSc)
இடம்: 10/10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(பெரிய கோவில், ரூடெக் அருகில்)
TP.No: 0776116724

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி ரோட்.
O/L DAY CLASS 8.00/2.00 மணி
ஆரம்பம் 3.4.2015 சனி 8.00 மணி
• இவ்வருடம் பிரிவு 5 மட்டுமே
• பிரிவு I 60 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி.
• கட்டுக்கட்டுப்பாட்டுடன் நடக்கும் ஒரே நிறுவனம்.
• யாழ். நகரில் DAY CLASS இங்கு மட்டுமே
அனுமதி இன்று முதல்
ஆண்டு 6 - O/L 2 தவணைக்கான வகுப்பு
4.4.2015, 9.30 சனி

O.L பெறுபேறுகள் வெளியான மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்.
CIMA-UK Com .Engineer. USA,
FIT கொழும்பு பல்கலைக்கழகம்
16 வயதிற்கு மேற்பட்ட OL சித்தியடையாதோரும் பயிலலாம்.
3A மேல் பெறுபேறுபெற்ற AL வர்த்தகத்துறை தேர்வு செய்வோருக்கு CIMA 75% , AL ICT 75% Schol.
OL தவறிய மாணவர்களுக்கு FIT கொழும்பு பல்கலைக்கழக கற்கை நெறியுடன் மேலதிகமாக OL 2015 பரீட்சைக்குமான தயார்படுத்தல்.
MCS
Type OL <Course> <Name> <District> & send to 772395895
யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில்

எமது கிளிநொச்சி
கிளை நிறுவனத்திற்கு
GRAPHIC DESIGNER VACANCY
முற்பகல் 10.00 - 1.00 மணி வரை
வடிவமைப்பாளர்
Graphic Designer
நேர்முகத் தேர்வு
01|04|2015 புதன்கிழமை

அடிப்படைத் தகைமைகள் :-
* வயதெல்லை :- 18 - 35
* Photoshop | Corel Draw
போன்ற Software களை கையாளும் திறன்
* 3 வருட முன்அனுபவம் விரும்பத்தக்கது
* மேற்படி தகைமை உடையோர் தங்கள் சுயவிபரக்கோவை உள்ளடங்கலாக
எமது கிளிநொச்சி அலுவலகத்திற்கு நேரில் சமூகம் தரவும்
ANDRA PRINTERS
0217201275 | 0776622981
#470/2, A9 ROAD, KILINOCHCHI.

வேலைவாய்ப்பு
கணினி பக்க வடிவமைப்பாளர்,
* Photoshop
* Indesign
* Pagemaker தெரிந்த
ஆண், பெண் இருபாலாருக்கும் உடனடி வேலைவாய்ப்பு.

குறிப்பு : ஆண்கள் பகுதி நேரமாகவும் வேலைசெய்யலாம்.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
சுயவிவரக் கோவையுடன் இன்று (31.03.2015) செவ்வாய்க்கிழமையும் நாளை (01.04.2015) புதன்கிழமையும் நேரில் சமுகம் தரவும்.
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.